விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 08 வியாழக்கிழமை (25.08.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 249

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## ஈழத் தமிழர் பிரச்சினையை வென்ற இந்திய ஊழல் விவகாரம்

(புதுடில்லி)

**இந்திய நாடாளுமன்றத்தின் ராஜ்ய சபாவில் நேற்றைய அமர்வின் போது இலங்கைத் தமிழர் பிரச்சினையையா அல்லது ஊழல் விவகாரத்தையா விவாதத்திற்கு எடுத்துக் கொள்வது என்பது தொடர்பாக சர்ச்சை ஏற்பட்டது. இறுதியில் ஊழல் விவகாரத்தையே விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.**

இந்திய நாடாளுமன்றத்தின் இரு விடயங்களும் விவாதத்திற்கான பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தது. பாரதிய ஜனதாக் கட்சி (பி.ஜே.பி) எம்.பிக்கள் ஊழல் விவகாரத்தை முதலில் விவாதிக்க வேண்டும் எனக் கூறினர். இடதுசாரிகள், தி.மு.க, அ.தி.மு.க. உட்பட வேறு பலர் இலங்கைத் தமிழர் பிரச்சினையை முதலில் விவாதிக்க வேண்டும் எனக் கூறினர்.

இந் நிலையில் சபை 15 நிமிட நேரம் ஒத்தி வைக்கப்பட்டதன் பின்னர் ஊழல் விவகாரத்தை முதலில் விவாதிப்பது என தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க. எம்.பிக்கள் வெளிநடப்பு செய்தனர்.

கேள்வி நேரத்தின் பின்னர் இலங்கை தமிழர் நிலைமை குறித்து விவாதிப்பதற்கு சபையின் பிரதித்தலைவர் கே.ரஹ்மான் அழைப்பு விடுத்தார். எனினும் இதற்கு ஆட்சேபம் (20ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க குழு யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவின் உயர்ஸ்தானிகர் குழு நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தது.

வருகை தந்த இந்தக் குழுவினர் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா (20ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் நேற்றும் பதற்றம்

(நெல்லியடி)

வடமராட்சிப் பகுதியில் நேற்றிரவு பல பகுதிகளில் கிறீஸ் மனிதனின் அச்சம் காணப்பட்டதாக பிரதேச தகவல்கள் தெரிவித்தன. நெல்லியடி, தேவரையாளி போன்ற பகுதிகளிலேயே இந் நிலை காணப்பட்டது.

இனந் தெரியாத நபர்களின் நடமாட்டம் மற்றும் வாகனங்களின் வருகை என்பவற்றின் காரணமாக மக்கள் அச்சமடைந்து காணப்பட்டதாகவும் இது குறித்து அப்பிரதேச மக்கள் தகவல் பரிமாற்றத்தில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-1)

## கடத்தப்பட்ட முஸ்லிம் மாணவன் வட்டுக்கோட்டையில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் ஐந்து சந்தியில் வைத்து கடத்திச் செல்லப்பட்ட முஸ்லிம் மாணவன் நேற்று கைகள் கட்டப்பட்டுள்ள நிலையில் வட்டுக்கோட்டை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இம் மாணவன் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

யாழ்.நகர் ஐந்து சந்தியில் வைத்து நேற்று முன்தினம் இரவு 7.15 மணியளவில் மொரட்டுவ பல்கலைக்கழக மாணவன் எம்.எச்.கஷ்னி (வயது 24) என்பவர் சிறிய ரக வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்டார்.

இந் நிலையில் குறித்த மாணவன் நேற்றுக் கைகள் கட்டப்பட்ட நிலையில் வட்டுக்கோட்டை பொலிஸாரால் மீட்கப்பட்டார். பின்னர் யாழ்ப்பாண பொலிஸில் ஒப்படைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். (எ-5)

## கொண்டாட்ட வீடுகளுள் புகுந்து இனந்தெரியாதோர் தாக்குதல்

(கொக்குவில்)

கொக்குவில் மேற்கு கேணியடியில் நேற்று முன்தினம் நள்ளிரவில் வெள்ளை வானில் சென்ற சிலர் அட்டகாசம் புரிந்துள்ளனர்.

அப்பகுதியில் நேற்று மூன்று திருமண நிகழ்வு உட்பட நான்கு வீடுகளில் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

இந் நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு பிரஸ்தாப வீடுகளுக்குச் சென்ற இனந்தெரியாதோர் அவ் வீடுகளில் கட்டியிருந்த வாழை மரங்கள் மற்றும் மாலைகளை அறுத்ததுடன் அங்கு பொருத்தப்பட்டிருந்த மின் குமிழ்களையும் சேதமாக்கியுள்ளனர்.

திடீரென வானில் வந்த சிலரே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டது. இவர்களின் நாகரிகமற்ற செயற்பாடுகளினால் அப்பகுதி (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் ஒத்துழைப்பின்றி யுத்தத்தை வென்றிருக்க முடியாது



### சுட்டிக்காட்டுகிறார் சம்பந்தன்

(புதுடில்லி)

இந்தியாவின் ஒத்துழைப்பு இன்றி யுத்தத்தில் வெற்றியீட்டியிருக்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடன் நெருங்கிய தொடர்புகளை பேணி வருவதாகவும் இந்தியாவின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா சென்றுள்ள சம்பந்தன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இதனைக் கூறினார். (20ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பசில் இன்று யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவுள்ளார். யாழ்.பொது நூல்நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள வடமாகாண திட்டமிடல் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகவே அவர் இன்று யாழ். வருகின்றார்.

இக் கூட்டத்தில் வடமாகாண அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள், பிரதம செயலாளர் என பலர் கலந்து கொள்கின்றனர். (ச-5)

## கிண்ணியாவிலுள்ள இராணுவத்தை அகற்ற ஜனாதிபதி உறுதியளிப்பு

(கிண்ணியா)

கிண்ணியா பிரதேசத்தில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரை கட்டம்கட்டமாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று புதன்கிழமை உறுதியளித்ததாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் தெரிவித்தார்.

மர்ம மனிதன் விவகாரம் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ் நிலையின் காரணமாகவே நாட்டின் பல பகுதிகளில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது எனவும் மர்ம மனிதன் பிரச்சினை நீங்கியவுடன் குவிக்கப்பட்டுள்ள இராணுவம் வாபஸ் பெறப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்ததாக தௌபீக் எம்.பி குறிப்பிட்டார்.

திருகோணமலை மாவட்டத்தில் கரையோரப்பிர (20ஆம் பக்கம் பார்க்க)

## பொங்கு தமிழ் போரை படையினர் முறியடித்தனர்

### த ஐலண்ட் பத்திரிகையில் செய்தி

(கொழும்பு)

பொங்கு தமிழ் பேரணி பாணியில் நடத்தப்படவிருந்த போராட்டம் ஒன்றை படையினர் முறியடித்துள்ளதாக த ஐலண்ட் ஆங்கில ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது; யாழ்ப்பாணம் நாவாந்துறை பிரதேசத்தில் இந்தப் போராட்டம் நடத்தப்படவிருந்ததாக பாதுகாப்பு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினால் வடக்குக்கிழக்கு மாகாணங்களில் கடந்த யுத்த நிறுத்தகாலத்தில் இவ்வாறான பாரிய பொங்கு தமிழ் பேரணிகள் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# "மொழிகளுக்காக விசேட சான்றிதழ்" விரைவில் வருகிறது நடைமுறைக்கு

மூன்று மொழிகளுக்கும் அங்கீகாரம் வழங்கவும் இன ஒற்றுமையை வளர்க்கவும் இலங்கை நியமங்களை (SLS) ஒத்த இரு மொழி சான்றிதழ் அல்லது மும்மொழி சான்றிதழ்களை நிறுவனங்களுக்கு வழங்கப்போவதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சு நேற்று கூறியுள்ளது.

அமைச்சால்வழங்கப்படவுள்ள இரு மொழி, மும்மொழி சான்றிதழ், நிறுவனங்களின் மதிப்பை உயர்த்தும் என்றும் இதனால் இந்த நிறுவனங்களின் சேவைக்கான கேள்வி அதிகரித்து நிறுவனங்கள் நன்மையடையும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறினார்.

எந்த மொழியைப் பேசுபவர்களாக இருந்தாலும் அவர்கள் விரும்பும் மொழியூடாக, அரசாங்க நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் சேவைகளை பெற்றுக் கொள்வதை இவ்வாறான சான் றிதழ்ப்படுத்தும் முறைமை உறுதி செய்யும் என வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இவ்வாறான சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்ப படிவங்களை நாம் நிறுவனங்களுக்கு வழங்குவோம். சான்றிதழ்ப் படுத்துவதற்காக விண்ணப்பிக்கும் நிறுவனங்களில் மொழிகளின் பயன்பாடுபற்றி முழுமையான ஆய்வு நடைபெறும். இந்த ஆய்வின் அடிப்படையில் தகுதிக்கேற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இருமொழி அல்லது மும் மொழிச் சான்றிதழை பெற்றுக் கொண்ட நிறுவனங்கள் இதை விளம்பரப் படுத்தி தம்மை பிரபல்யப்படுத்த முடியும். கிராமங்களில் மொழிக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை அமைச்சு செயற்படுத்தி வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரச, தனியார் நிறுவனங்கள் மொழிக் கல்விக்கான உதவியை கோரினால் நாம் ஆசிரியர்களையும் வேறு வசதிகளையும் வழங்குவோம் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-5)


## தவறிவிட்டது

காசோலைப் புத்தகம், சாரதிப் பயிற்சி அனுமதிப் பத்திரம் உட்பட்ட முக்கிய ஆவணங்கள் அடங்கிய Bag நவாலிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைத்துதவவும்.
தொடர்புக்கு:0772208327
(C-4173)





## சிவபார்வதி ஜோதிட நிலையம்

### பண்டித்-மஞ்சுநாத சுவாமி

தொ.பே. இல: 077 8949044

அன்பானவர்களே!

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில், வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம் போன்ற விடயங்களையும், கணவன்-மனைவி ஒற்றுமையின்மை, கோர்ட் வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்கு பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல், வெளியூர் பயணங்கள், கல்வி உத்தியோகம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், எதிரிகள் கண்திருஷ்டி போன்ற எல்லாவித பிரச்சினைகளையும் எதிர்கால பலாபலன்களையும் தெரிவிப்பார்.

**சண்ஜெய உணவகம் (மேல்மாடி)**

414, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)
நேரம்: காலை 7.00 மணி முதல் மாலை 7.30 மணி வரை
கட்டணம் ரூபா 101 /=
(4770)


# வயோதிப பெண்ணின் காதில் வெட்டு

(யாழ்ப்பாணம்)

காது மற்றும் கழுத்துப் பகுதிகளில் வெட்டுக் காயங்களுடன் வயோதிபப் பெண் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏழாலை வடக்கைச் சேர்ந்த செபமணி (வயது 66) என்பவரே காயமடைந்தவராவார்.

இவரது வீட்டில் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் தங்கியிருந்ததாகவும் அவரே இவ்வாறு செய்திருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிற து.

அவர் நேற்று காலையே தனது இடத்துக்கு திரும்பியதாகவும் கூறப்பட்டுள்ளது. அவர் அணிந்திருந்த தோட்டை அபகரிப்பதற்காகவே காது வெட்டப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (ச-4)

# 4 ஆயிரம் முஸ்லிம் குடும்பங்கள் விரைவில் யாழில் மீள்குடியேற்றம்

## முஸ்லிம் சம்மேளனத் தலைவர் தெரிவிப்பு

யாழ்.மாவட்டத்தில் 4 ஆயிரத்து 933 முஸ்லிம் குடும்பங்கள் விரைவில் மீள்குடியேற்றப்படவுள்ளனர் என யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத் தலைவர் எ.எச்.ஜமால் மொஹீடீன் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்திலிருந்து யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து நாட்டின் ஏனைய மாவட்டங்களில் குடியேறிய முஸ்லிம் மக்கள் மீண்டும் இங்கு மீள் குடியேற்றப்பட்டு வருகின்றனர்.

இதில் 2 ஆயிரத்து 67 குடும்பங்கள் இதுவரை இங்கு மீள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இன்னும் 4 ஆயிரத்து 933 குடும்பங்கள் மீள்குடியேறுவதற்கென எமது சம்மேளத்தில் பதிவு செய்துள்ளனர்.

அவர்களை மிக விரைவில் மீள் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (ச-6)

# பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சைக்கிள் சில்லினுள் சேலை சிக்குண்டதில் தூக்கி வீசப்பட்டு குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

தலையில் படுகாயமடைந்த அவர் மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். பிரதான வீதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் குருநகரைச் சேர்ந்த எஸ்.இன்பரசி(வயது48) என்பவரே காயமடைந்தவராவார்.(ச-4)

# சுதந்திரக் கட்சியில் இணைந்தார் மஹ்ரூப்



ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மத்திய தொகுதி அமைப்பாளரான மொஹமட் மஹ்ரூவ் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து அவர் நேற்று மாலை சுதந்திரக்கட்சி அங்கத்துவ பத்திரத்தை பெற்றுக் கொண்டுள்ளார். (ச-5)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 06.11.1931 அமரர் விண்ணில் 04.09.2010

### உலகேஸ்வரி அருளானந்தம்

(1 ஆம் வட்டாரம், மண்டைதீவு)



**திதி வெண்பா**

தமிழாண்டு விகிர்தியின் ஆவணி பத்தொன்பது
அமிழ்தான கீதையின் அரன் மகிழ் அபரபட்ஷ ஏகாதசி-குமிழ் உலகில்
சத்தியமாய் வாழ்ந்த உத்தமி உலகேஸ்வரி
நித்திய வாழ்வை விட்டு நிமலனடி சேர்ந்த நாள்

பதுபதி உணர்ந்த தாயே மதி உணர்த்தி வளர்த்த சேய்கள் மதிமயங்கி துடிதுடித்து விதியை நொந்து, வீராப்பின் வழித்தடத்தை விழிகள் தேடுதம்மா...! நேற்று நடந்ததாய் நெஞ்சம் நெகிழுதம்மா! பார்த்த விழிகள் பூத்து, பரமனை நோக்குதம்மா! காணக்காத்திருந்தோர் கனவு கலைந்ததம்மா! உற்ற நிழல் இழந்து, உறவுகள் தேடுதம்மா! பற்றுடன் இளைப்பாற, பசி அறிந்து உபசரிக்க, நற்றுணர்ந்த தாயே! பந்தவினை முடித்து பரந்தாமன் அழைப்பேற்று அத்தைமகன் உம் அருந்துணைகாண ஆற்றப்பறந்தீரோ? உம் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முத்துமாரி அம்மனை வேண்டி, நித்தமும் உங்கள் நினைவுகளோடு வாழும்...,

பிள்ளைகள், மருமக்கள், சகோதரிகள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

கலைவாணி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(சி-4172)



## மரண அறிவித்தல்

### திருமதி நவரத்தினம் பராசக்தி



சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது சாவகச்சேரியில் வசித்து வந்தவருமாகிய திருமதி நவரத்தினம் பராசக்தி அவர்கள் 23.08.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மனைவியும், கமலறஞ்சினி, சுரேந்திரராஜா (கச்சேரி கிளிநொச்சி), குணேந்திரராஜா (மோகன்) (ஆசிரியர், யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜெயரஞ்சினி (சுவிஸ்), விஜயராஜா(ஜெகன்)( ஆசிரிய வளவாளர், வடமாகாணக் கல்வித் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கரட்ணம், பவானி, சுகிர்தா (ஆசிரியர், யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்), தயாளன் (சுவிஸ்), றஜனி(ஆசிரியர்,அட்டகிரி சைவ வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் துஷிந்தா (யாழ். பல்கலைக்கழகம் கலைப்பீடம் 2-ம் வருடம்), சுமன், தனுஷன், துளசி, கஸ்தூரி, சஞ்சிகா, ஷங்கீத், தர்ணீத், மனோஜ், அஜந்தா (சுவிஸ்), யகீஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25.08.2011 இன்று வியாழக்கிழமை பி.ப. 1.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

1-வது மைல்கல்
சாவகச்சேரி வடக்கு, கிராம்புவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(5978)



## மரண அறிவித்தல்

### ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீகாந்தன் (குரு)



சண்டிலிப்பாய் தொட்டிலடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் அச்சுக்கூட ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீகாந்தன் கடந்த (23.08.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஸ்ரீவிக்னேஸ்வரியின் (ஆசிரியை, யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும், டிலக்சனா, ரிஷானி, நைனிக்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற ஸ்ரீரங்கநாதன் மற்றும் நாகேஸ்வரி தம்பதிகளின் புதல்வனும், கண்மணியின் வளர்ப்பு மகனும், காலஞ்சென்ற விக்னராஜா, நாகேஸ்வரி ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற ஸ்ரீகாந்தீஸன், ஸ்ரீகாந்தீஸ்வரி, ஸ்ரீஜெகதீஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், சிவலிங்கம், சிவதர்சன், கௌசல்யா(இத்தாலி), ஸ்ரீஜெகதீஸ்வரன், சுகந்தினி, லக்சனா(லண்டன்) ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2011) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்
தாயார்-நாகேஸ்வரி
சகோதரர்: ஸ்ரீதில்லைநாயகன் (கனடா)
ஸ்ரீகௌரிபாலன் (பிரான்ஸ்)
ஸ்ரீகரன்
சகோதரிகள் :ஸ்ரீரஞ்சினி(நெதர்லாந்து)
ஸ்ரீவதனி

அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
T.P.:0777353546

(5983)

## இன்று ஒரு தகவல்

# மனதுக்கு ஓய்வு

ஒரு ஊரில் பெரிய பொலிஸ் அதிகாரி இருந்தார். மிகவும் கண்டிப்பானவர். அவரைக் கண்டால் எல்லோரும் பயப்படுவார்கள்.

அவருடைய வீட்டுக்குப் போனால் குழந்தைகளோடு விளையாடிக் கொண்டிருப்பார். அலுவலக நேரத்தில் பார்த்தால்... குதிரை முதுகில் உட்கார்ந்திருப்பார்.

வீட்டில் பார்த்தால் அவர் முதுகில் குழந்தை உட்கார்ந்திருக்கும். அவர் குதிரை மாதிரி போய்க்கொண்டிருப்பார்.

"இது எப்படி முடியும்?" என்று அவரிடம் கேட்டேன்.

"அது ஒன்றுமில்லை... வீட்டினுள் நுழைந்தவுடன் என்னுடைய மனதை தனியாக எடுத்து வைத்து விடுவேன்" என்றார்.

"அது என்ன உங்கள் சட்டைப் பையிலேயா இருக்கிறது... அதைத் தனியாக எடுத்து வைப்பதற்கு...?" என்றேன்.

"அப்படி இல்லை... இது ஒரு மனப் பயிற்சி..." என்றார்.

இப்படி சமயம் பார்த்து மனதைத் தனியாக வைத்துக்கொள்ளத் தெரிந்தவர்கள் எப்போதும் உற்சாகமாகவே இருப்பார்கள்.

ஒரு வைத்தியர்... வைத்தியசாலையில் இருக்கிற வரைக்கும் வைத்தியராக இருக்கலாம்.

அவர் மனைவியுடனும் வைத்தியராக இருக்க வேண்டிய அவசியமில்லை.

ஒரு சட்டத்தரணி... நீதிமன்றில் இருக்கும் வரைக்கும் சட்டத்தரணியாக இருக்கலாம். வீட்டிற்கு வந்த பின்பு சட்டத்தரணியாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

நாம் வீட்டில் குழந்தைகளுடன் விளையாடும் போது மனம் சோரக்கூடாது! அப்படிச் சோராமல் வாழ்க்கையை கவனிக்க வேண்டும்.

மனசு என்பது எமக்கு உபயோகப்படக்கூடியது தான். எப்போது அது தேவையோ அப்போது எடுத்து உபயோகப்படுத்த வேண்டும்.

தேவைப்படும்போது கண்ணாடியை எடுத்து உபயோகிக்கிறமாதிரி...பரீட்சைக்குப் படிக்க வேண்டியிருக்கும். படித்ததையெல்லாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியிருக்கும்... அந்தச் சமயத்தில் மனதைத் தூக்கி எறிந்து விட்டேன் சேர் என்று சொல்லக்கூடாது. அப்படிச் சொன்னால் பரீட்சை எங்களைத் தூக்கி எறிந்து விடும். அதனால் தேவைப்படும் போது மனதை உபயோகப்படுத்த வேண்டும்.

இப்படி நாம் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இயந்திரங்களுக்கு ஓய்வு கொடுப்பதுபோல் மனதிற்கும் ஓய்வு கொடுக்க வேண்டும். இல்லாவிடின் அது களைத்துப் போய்விடும்.

ஓஷோ என்ன சொல்கிறார் தெரியுமா?

நான் கவனித்த வரையில் யாராவது வயதானவர் என்னிடம் வந்தால்... அவர் ஒரு வைத்தியராகவோ அல்லது பேராசிரியராகவோ...அல்லது ஒரு பொறியியலாளராகவோ தான் இருக்கிறார். அவர் ஏதோ ஒரு பயன் அடைகிறவராகத்தான் இருக்கிறார்... சமுதாயத்தில் ஏதோ ஒரு தொழில் செய்கிறவராகத்தான் இருக்கிறார். ஆனால் குழந்தைகள் என்னிடம் வரும்போது அவர்கள் வைத்தியராகவோ விஞ்ஞானியாகவோ வருவதில்லை... அவர்கள் மக்களாக வருகிறார்கள்...!" என்றார்.

குழந்தைகள் மனதை சுமந்துகொண்டு இருப்பதில்லை. இது முதியவர்கள், குழந்தைகளிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடம்!

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 14 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர்

## யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

யாழ்.மாவட்டத்தில் இம்மாதத்தில் மட்டும் 14 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவர்களில் 7 பேர் யாழ்.மாநகர சபை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் நேற்று முன்தினம் அரியாலையைச் சேர்ந்த 18 வயது மாணவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் இந் நோயினால் உயிரிழந்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் தற்போது நல்லூர் முருகன் ஆலய உற்சவம் நடைபெறுவதாலும் பாடசாலை விடுமுறை காலமாக இருப்பதாலும் உலகின் பல பகுதிகளில் இருந்தும் தென் பகுதியில் இருந்தும் ஏராளமான மக்கள் யாழ்.மாவட்டத்திற்கு வருகை தருகின்றனர்.

யாழ்.மாவட்ட மக்களும் பெருமளவில் விடுமுறைகாலத்தில் தென் பகுதிக்கு சென்றுவருகின்றனர். தென் பகுதியில் குறிப்பாக கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பல் தீவிரமடைந்துள்ளது.

இந்நிலையில் யாழ்.மாவட்டத்தில் பருவகால மழை ஆரம்பித்துள்ளது. எனவே, யாழ்.மாவட்டத்தில் டெங்குநோய் தீவிரமாக பரவக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே, யாழ்.மாவட்ட மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து டெங்கு நோய் கட்டுப்பாடு நடவடிக்கைகளை உடனடியாக முழுவீச்சில் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

எனவே டெங்கு கட்டுப்பாடு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் நோக்கில் மாவட்ட டெங்கு கட்டுப்பாட்டு ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நாளை வெள் ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாவட்டச் செயல கத்தில் அரச அதிபர் தலைமையில் இடம்பெறும்.

இதேபோன்று பிரதேச மட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் நோக்கில் பிரதேச டெங்கு கட்டுப்பாட்டு ஒருங்கிணைப்பு குழுக்கூட்டங்கள் எதிர்வரும் நாட்களில் இடம்பெறவுள்ளது.

டெங்கு காய்ச்சல் பொதுவாக கடுமையான காய்ச்சல், தலைவலி, மூட்டு நோ, உடல் நோ என்பவற்றுடன் ஆரம்பிக்கும். டெங்கு காய்ச்சல் என சந்தேகித்தால் உடனே தகுந்த மருத்துவ ஆலோசனையை நாட வேண்டும். தாமதமாக இறுதி நேரத்தில் வைத்திய சேவையை நாடுவதால் இறப்புக்கள் ஏற்படுவதை தவிர்க்க முடியாது போக லாம்.

எனவே, யாழ்.மாவட்டத்தில் அனைவரும் ஒன்றிணைந்து டெங்கு தடுப்பு செயற்பாடுகளை முன்னெடுத்து எமது மக்களை ஆட் கொல்லி டெங்கு நோயில் இருந்து பாதுகாப்போம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# சாரதி அனுமதிப்பத்திர பரீட்சை

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஊடாக சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்து 2011 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் இடம்பெற்ற எழுத்து பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்கான ஓட்டுநர் பரீட்சார்த்த பரீட்சை இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் நாளை எழுத்துப் பரீட்சைக்காக விண்ணப்பித்தவர்களிற்கான பரீட்சை உரிய நேர ஒழுங்கில் இடம்பெறும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 120 |
| தக்காளி | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 45 | 60 |
| கோவா | 40 | 50 |
| கரட் | 50 | 30 |
| பூசணி | 25 | 40 |
| புடோல் | 30 | 30 |
| வாழைக்காய் | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 70 | 100 |
| பெரிய வெங்காயம் | 85 | 90 |
| பாகற்காய் | 70 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 40 |
| கருணைக் கிழங்கு | - | 80 |
| பயற்றங்காய் | 80 | 70 |
| லீக்ஸ் | 50 | 80 |
| பீற்றூட் | 20 | 40 |
| கறிமிளகாய் | 40 | 90 |
| முருங்கைக்காய் | 100 | 120 |
| போஞ்சி | - | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 30 |
| கீரை - 1 பிடி | 8 | 15 |
| தேசிக்காய் | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 |

# இராசி பலன்

25.08.2011
(ஆவணி 8, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6 மணி
ஏகாதசி பிற்பகல் 2.26 மணிவரை
திருவாதிரை பிற்பகல் 3.30 மணிவரை
இராகுகாலம் 1.35-3.05 மணிவரை
சுபநேரம் 7.35-9.05 மணிவரை
நல்லைக் கந்தன் தெண்டாயுதபாணி
உற்சவம்-காலை, ஏகாதசி விரதம்

**மேடம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்க தொல்லை தந்தவர்களே தோள்கொடுத்து உதவுவர், உறவினர் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**இடபம்** காலைநேரத்திலேயே காதினிக்கும் செய்திகள் வந்து சேரலாம், புதிய தொழில் தொடங்க தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும், சுபசெய்திகள் அதிகரிக்கும்.

**மிதுனம்** குரு வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், கொடுத்த வாக்கை காப்பாற்ற கொள்கையைக் கொஞ்சம் தளர்த்த வேண்டிவரலாம், ஆன்மீகநாட்டம் அதிகரிக்கும்.

**கடகம்** பயணத்தால் பலன் கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம், சயனசுகக் குறைவான நாள்.

**சிங்கம்** சிறப்பான நாள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சியைத் தரும், குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், உறவினர் வருகையுண்டு.

**கன்னி** திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை ஒவ்வொன்றாகத் தொடர்வீர்கள், அந்நியரால் உதவிகள் கிடைக்கலாம், தூரதேசச் செய்திகள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணைபுரியும்.

**துலாம்** தடைகளைத் தகர்த்தெறிந்து தன்னிறைவு காணும்நாள், எதிர்பாராத சில சம்பவங்கள் நடைபெறும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**விருச்சிகம்** தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, உறவினர் எதிர்பாராத வகையில் குறை கூறலாம், கௌரவக் குறைவான நாள், வரவும் செலவும் சமமாகும்.

**தனுசு** ஆனந்தமான நாள், புதிய பொருட்கள் வாங்கும் நிலையுண்டு, நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சியடைவீர்கள், சுபகாரியப் பேச்சுகள் நல்ல முடிவுக்கு வரும்.

**மகரம்** நாவன்மையால் நல்ல பெயரெடுக்கும் நாள், தொழில் முன்னேற்றத்திற்கு பெண்வழி ஒத்துழைப்பு கிடைக்கும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கும்பம்** பிள்ளைகளின் வளர்ச்சிகண்டு பெருமையடையும் நாள், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, நல்ல தகவல்கள் உங்களை நாடி வரலாம், பெற்றோர் மீது பாசம் கூடும்.

**மீனம்** வாகனயோகத்தால் வளம் காணும் நாள், வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், தாய் வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள்.

வளவன்

# சர்வதேச ஒலிம்பியாட் போட்டிக்கு யாழ். இந்து மாணவர்கள் தெரிவு





(யாழ்ப்பாணம்)

இலங்கை விஞ்ஞான ஒலிம்பியாட் சங்கம் நடாத்திய தரம் 10 மாணவர்களுக் கான 8 ஆவது தேசிய கனிஷ்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் இலங்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆறு பேர் கொண்ட அணியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களான சுந்தரேஸ்வரன் வித்யாசாகர், ஆனந் தராஜா ஹரிசங்கர் ஆகிய இருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் எதிர்வரும் டிசம்பர் மாதம் முதல் வாரம் தென்னாபிரிக்க டேபன் மாநகரில் நடைபெறவுள்ள சர்வதேச போட்டியில் பங்கு பற்றவுள்ளனர். இதில் 50ற்கு மேற்பட்ட நாடுகளிலிருந்து சுமார் 300ற்கு அதிகமான மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# யுத்த வலயங்களிலிருந்து ஒரு இலட்சம் மிதிவெடிகள் அகற்றி ஹலோரஸ்ட் சாதனை



(யாழ்ப்பாணம்)

நாடுபூராகவும் யுத்தப் பிரதேசங்களாக இருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒரு இலட்சம் மிதிவெடிகளை அகற்றி ஹலோ ரெஸ்ட் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் சாதனை படைத்துள்ளது. இந்நிகழ்வை நேற்று முன்தினம் தனது யாழ். காரியாலயத்தில் கேக் வெட்டிக் கொண்டாடியது.

கடந்த 2002ஆம் ஆண்டு மே மாதமளவில் யுத்த வலயங்களாக இருந்துவிடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்களை மீள்குடியமர்த்தும் நோக்கில் மிதிவெடிகளை அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

இதில் கடந்த 21ஆம் திகதி நாகர்கோயில் மேற்கில் ஒரு மிதிவெடியை கண்டுபிடித்ததுடன் ஒரு இலட்சம் மிதிவெடிகள் கண்டறியப்பட்டுள்ளது.

42 மிதிவெடியகற்றும் பணியாளர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் இன்று ஆயிரத்து 70 பணியாளர்களைக் கொண்டு கிளிநொச்சி, யாழ்ப்பாணப் பிரதேசங்களில் இது தனது சேவையினை ஆற்றி வருகின்றது.

யுத்த வலயங்களாக இருந்து மக்களை மீள்குடியேற்றுவதற்கு தீர்மானிக்கும் போது ஹலோரெஸ்ட் இன் பங்கே முக்கிய பங்கு வகிக்கின்றது.

இந்நிறுவனத்திற்கு அமெரிக்கா, நோர்வே, ஜப்பான், அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகள் நிதியுதவி வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

# உடுத்துறை முதல் முள்ளியான் வரையான மக்களின் பாதுகாப்பு குறித்து கலந்துரையாடல்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கின் உடுத்துறை தொடக்கம் முள்ளியான் வரைக்குமான கிராமங்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு குறித்த பகுதி இராணுவத்தினரால் இக் கிராமங்களின் பொது அமைப்புக்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை கொக்கிளாய் சிவில் அலுவலகத்தில் நடைபெற்றது.

இப்பகுதிகளில் ஏற்படும் களவு மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் மற்றும் ஏனைய பல விடயங்கள் பற்றி இக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

இதில் இராணுவ அதிகாரிகள் பலரும் இக் கிராமங்களின் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-64)

# மிதிவெடியகற்றும் இயந்திரம் மிதிவெடியில் அகப்பட்டு சேதம்

## சாரதி காயம்

(யாழ்ப்பாணம்)

ஹலோறஸ்ட்டின் மிதிவெடி அகற்றும் அகழ்வு இயந்திரம் மிதிவெடியில் அகப்பட்டு வெடித்ததால் சாரதி காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றையதினம் நண்பகல் 12.10 மணியளவில் நாகர் கோயில் கிழக்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

இவ் அகழ்வு இயந்திரம் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை வாகனத்தின் ஒரு சில் மிதிவெடியில் அகப்பட்டு வாகனம் சேதமடைந்துள்ளது. (ஸ்ரீ)

# சட்டவிரோதமான முறையில் கசிப்பு, சாராய உற்பத்தி

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு, சாராயம் என்பன விற்பனை செய் யப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, வடமராட்சி கிழக்கின் மாமுனை தொடக்கம் போக்கறப்பு வரையான கிராமங்கள் எங்கும் இவ்வாறான சட்ட விரோதமான மது பானங்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதனால் கிராமங்களில் குடும்பச் சண்டை தொடக்கம் தெருச் சண்டை வரையில் நடைபெற்று வருகின்றது.

அத்துடன் இளையவர்கள் மதுபாவனைக்கு அடிமையாகி வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு இதனைக் கட்டுப்படுத்த முன்வர வேண்டுமென அப்பகுதி மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (ஸ்ரீ-2-64)




# மகாபொல சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம் உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் 2009/2010 ஆம் ஆண்டுக்கு மகாபொல புலமைப்பரிசிற்கு தெரிவு செய்யப்பட்ட 67 மாணவர்களுக்கான மகாபொல சான்றிதழும் காசோலையும் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு உயர்தொழில்நுட்பவியல் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளதென பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கடற்படை முகாமிட்டிருந்த வீடுகள் உரிமையாளர்களிடம் கையளிப்பு


(மருதங்கேணி)

பருத்தித்துறை வெளிச்ச வீட்டுக்கு அருகாமையில் கடற்படையினர் முகாமிட்டிருந்த 5 வீடுகள் கடந்த 22 ஆம் திகதி திங்கட்கிழமை கடற்படையினரால் வீட்டுச் சொந்தக்காரர்களிடம் கையளிக்கப்பட்டது.

அத்தோடு பருத்தித்துறை கடற்கரை வீதி பொதுமக்கள் பாவனைக்காக திறந்துவிடப்பட்டது.

மேலும் பருத்தித்துறை முனைப் பகுதியிலிருந்து 1995 ஆம் ஆண்டு வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்றவர்கள் மீண்டும் இப் பிரதேசங்களில் வந்து மீளக்குடியேறியுள்ளனர்.

படை பாதுகாப்பில் இருந்த இம்மக்களின் வள்ளங்களும் அன்றையதினம் வள்ளத்தின் உரிமையாளர்களிடம் மீண்டும் வழங்கப்பட்டது. இச் செயற்பாடுகள் அனைத்தும் காங்கேசன்துறை பகுதி கொமாண்டர் அட்மிரல் விஜய குணவர்த்தனவின் பணிப்பின் பேரிலேயே நடைபெற்றன. (ஸ்ரீ-35)



இலங்கைக்கான இந்திய தூதரகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தியாவிற்கான கல்வி சுற்றுலாவுக்கு தெரிவான மாணவர்களுடன் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன், பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, மாகாண கல்விப் பணிப்பாளர். ப. விக்னேஸ்வரன் ஆகியோரை படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

# நூல் அறிமுகவிழா

யாழ். நாச்சிமார் கோவிலடி ஆன்மீக எழுத்தாளர் சிவநெறி கலாநிதி இராசையா ஸ்ரீதரன் எழுதிய சைவ சமய தரிசனம் நூல் அறிமுக விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தலைமையுரையினை இந்து சமய கலாசார அபிவிருத்தி உதவியாளர் பா. உதயபாலன், அறிமுக உரையை கு.பாலசண்முகன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இந்நூலின் முதற் பிரதியை கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி. நாகரத்தினமும் சிறப்புப் பிரதியை க. சோமசேகரம், ச.சுந்தரேஸ்வரன் ஆகியோர் பெற்றுக் கொள்வார்கள். (ஸ்ரீ)

# அடிப்படை வசதிகளின்றி மக்கள் பெரும் அவலம்

(கரவெட்டி)

கரவெட்டி இராஜ கிராமம் எதுவித அடிப்படை வசதிகளுமின்றி காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இக்கிராமத்தில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.


இக்கிராம மக்கள் கூலித் தொழிலையே பிரதான தொழிலாக கொண்டுள்ள நிலையில் வீடு,கிணறு, மலசல கூடங்கள் போன்ற அடிப்படை வசதிகள் எதுவுமின்றி பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பெருமளவான மக்களைக்கொண்ட இக் கிராமத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வருவதில்லையெனவும் மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனவே, சம்மந்தப்பட்ட அதிகாரிகள் தமது கிராமத்தை முன்னேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-24)

## வகுப்பறைக்குள் வெள்ளம்

# பெரும் சிரமத்தின் மத்தியில் கல்வி கற்கும் யோகபுரம் மகாவித்தியாலய மாணவர்கள்





துணுக்காய் கல்விவலயத்திற்குட்பட்ட யோகபுரம் மகா வித்தியாலயமானது கடந்த காலத்தில் நடைபெற்ற யுத்தசூழ்நிலையில் சேதமடைந்து மாணவர்கள் தற்போது கல்வி கற்க முடியாத அளவிற்கு சேதமடைந்து காணப்படுகின்றது.

இப்பாடசாலையில் இடப்பெயர்வுக்கு முன் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி கற்று வந்தனர்.

தற்போது மீள்குடியேற்றத்தையடுத்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையானது 600 இற்கும் மேற்பட்ட மாணவர்களுடன் இடப்பற்றாக் குறையின் மத்தியில் இயங்குகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்திலே கடந்த 2010ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரணதரத்தில் 9ஏ சித்திகளைப் பெற்றதும் இப்பாடசாலை மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்தோடு தமிழ்த்தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம் என்பவற்றை மாணவர்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

அண்மையில் பெய்த மழை காரணமாக வெள்ளம் வகுப்பறைகளில் தேங்கி நிற்பதால் மாணவர்கள் தமது கல்வியை பல அசௌகரியங்களின் மத்தியில் கற்று வருகின்றனர்.

அத்தோடு இப்பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த வெளிமாவட்டங்களில் இருந்து தங்கி கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் தங்குமிடம், சமையல்கூடம்ஆகியவையும் சேதமடைந்துள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு இதனைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-2-15)

## வீதி பெயர்ப்பலகையில் எழுத்துப் பிழை

~~කල්ලූර් ප්‍රාදේශීය සභාව~~

නල්ලූර් ප්‍රාදේශීය සභාව

(குருநகர்)

ஆடியபாதம் வீதியில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு முன்பாக உள்ள நல்லூர் பிரதேச சபைக்குச் செல்லும் வீதியின் பெயர்ப்பலகையில் "நல்லூர் பிரதேசசபை" என்று பெயர் எழுதப்படாமல் "கல்லூர் பிரதேச சபை" என சிங்கள மொழியில் பிழையாக எழுதப்பட்டுள்ளது.

இதனை திருத்தியமைக்குமாறு நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் என். சிவலோகநாதன் பிரதேசசபை செயலாளரிடம் கேட்டுக் கொண்டுள்ளார். (ஸ்ரீ-39)

## மாம்பழத் திருவிழா நேரடி வர்ணனை

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இன்று நடைபெறும் தெண்டாயுதபாணி உற்சவம் (மாம்பழத்திருவிழா) இலங்கை வானொலியில் நேரடியாக அஞ்சல் செய்யப்படவுள்ளது.

இவ் அஞ்சல் நேர்முக வர்ணனையை வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி அருளானந்தன் நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ)

## டிரிபோலியிலுள்ள இலங்கை தூதரகம் மூடப்பட்டுள்ளது

டிரிபோலியில் உள்ள இலங்கைத் தூதரகம் மூடப்பட்டுவிட்டதாக அரச தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யுத்த சூழல் உக்கிரமடைந்துள்ள லிபியாவில் இலங்கைப் பணிப்பாளர் எவரும் இல்லை என இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

லிபியாவில் மோதல்கள் ஆரம்பிக்கப்பட்டபோதே அங்கிருந்த இலங்கைப் பணியாளர்கள் நாடு திரும்பியதாக பணியகம் குறிப்பிட்டுள்ளது.

லிபியாவில் உள்ள இலங்கையர்கள் தூதரகம் மூடப்பட்டதை அடுத்து அதி காரிகளுடன் கொழும்பை வந்தடைந்ததாக வெளிவிவகார அமைச்சின் பொது தொடர்பு மற்றும் தகவல் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2-4)

# இலங்கையின் அபிவிருத்தியில் கனடா பங்கெடுக்க வேண்டும்

### கனடாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

பிரச்சினைகள் எமக்கு பின்னால் உள்ளது. இலங்கை தற்போது முன்னோக்கி பார்க்க வேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளது என கனடாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சித்திராங்கனி வாகீஸ்வர தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய விசேட செவ்வி ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாங்கள் மனித வளங்கள், இயற்கை மற்றும் பிற பொருள் வளங்களை என அதிகமானவற்றை இழந்துவிட்டோம். இலங்கை வாழ் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் என அனைவருமே அவர்களது வளங்களில் ஒரு பகுதியினை இழந்துவிட்டனர்.

தற்போது சமாதானம் ஏற்பட்டுள்ளது. நாங்கள் சரியான பாதையில் சென்று உயர்வினை எட்டிப்பிடிக்க வேண்டிய நிலையில் உள்ளோம். யுத்தத்தினால் கடந்த 20 வருடங்களாக இலங்கை பொருளாதார ரீதியில் வளர்ச்சி அடைய முடியவில்லை. இன்னமும் கூட மீள்கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படுகிறது.

ஆனால் அண்மைக்காலமாக சாத்தியமான பொருளாதார அபிவிருத்திகளை இலங்கை கண்டு வருகிறது. தமிழ் சிறுவர்கள் தெற்கு பகுதிகளுக்கு சென்று சிங்கள மக்களை சந்திக்கின்றனர். இதனால் அவர்கள் மத்தியில் ஒரு புரிந்துணர்வுடன் கூடிய நட்பு ஏற்படுகிறது.

வடக்கில் தற்போது வியாபாரம், வங்கிகள், தொழிற்சாலைகள் மற்றும் அனைத்து வசதிகளும் உண்டு. தற்போது இரு சமூகங்களுக்கிடையில் ஒருங்கிணைப்பு ஏற்பட்டுள்ளது.

ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் அதிகம் புலம்பெயர்ந்து வாழும் நாடாக கனடா உள்ளது. அவர்கள் நாட்டின் அபிவிருத்தியில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும் என்றார். (ஸ்ரீ-4-2)

# வடபகுதியிலுள்ள அனைத்து இராணுவ முகாம்களிலும் விவசாய நடவடிக்கை

## அமைச்சர் யாப்பா தீர்மானம்

வடமாகாணத்தில் உள்ள இராணுவ முகாம்களுக்கு அண்மித்த பகுதிகளில் விவசாயத்துறையினை அபிவிருத்தி செய்வதனூடாக நாட்டின் எதிர்கால நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக விவசாய அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவிக்கின்றார்.

விவசாய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக வெலிஓயா பிரதேசத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த போது அவர் இதனைத் குறிப்பிட்டார்.

யுத்தத்தினால் பாரியளவாக சேதமடைந்துள்ள வெலிஓயா பிரதேசத்தினை விவசாய துறையின் மூலம் அபிவிருத்தி செய்வதே எனது இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

இராணுவ பூமியில் இருந்து விவசாய பூமி வரண்ட நிலத்தை செழிப்பாக மாற்றுதல் ஆகிய தொனிப்பொருளின் கீழ் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. வட பகுதியிலுள்ள அனைத்து இராணுவ முகாம்களிலும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள எண்ணியுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

விவசாய உற்பத்திக்காக இராணுவமுகாம்களில் இடங்களையும், மனித வளங்களையும் உபயோகிக்க உள்ளதாகவும் நாட்டின் விவசாயத்துறை அபிவிருத்திக்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்வது இதன் பிரதான நோக்கம் எனவும் அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-4-2)


## 1 ஆம் ஆண்டு நினைவலைகள்



பூவாய் 27 . 08 . 1988

சருகாய் 04 . 09 . 2010

எம் தெய்வப் பிறவி ஜனாவே!
"மருத்துவ பீடம்" உனக்குக் கிடைத்ததையிட்டு
பேரானந்தத்தில் திளைத்திருந்தோம்
அடுத்த கணம் "கான்சர்" எனும் கொடிய நோயென
அறிந்து துடியாய் துடித்தோம்
உன்நோயைக் குணப்படுத்த எடுத்த முயற்சிகள்....
விதியின் விளையாட்டால் பயனின்றிப் போயினவே....
ஜனாவே! உன் கனவுகள் கற்பனைகள்...
மண்ணோடு மண்ணாகிப் போயினவே அம்மா...
கொடியகாலன் உன் உயிரைப்பறித்து... ஓராண்டாயினவே
உன் பிரிவை ஜீரணிக்க முடியாது துடிக்கின்றோம் துவழ்கின்றோம்
புன்னகை தவளும் உன்முகம், அன்பு, அடக்கம் ,
ஒருங்கே அமைந்த சுபாவம்
எம் கண்முன்னே என்றும் நிழலாடுகின்றதுவே
மீண்டும் பிறப்பு என்ற ஒன்றுண்டேல்....
உன் இலட்சியங்கள் நிறைவேறவும் ஆத்ம சாந்திக்காகவும்
ஒட்டங்கேணிப் பிள்ளையாரை பிரார்த்திக்கின்றோம் அம்மா

செல்வி ஜனனி பஞ்சாட்சரம்

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

நீங்காத நினைவுகளுடன் குடும்பத்தினர்


# புத்தளம் நகரில் நேற்று முழுநாள் கடையடைப்பு

(கொழும்பு)

புத்தளம் நகரில் நேற்று புதன்கிழமை முழு நாள் கடையடைப்பு மேற்கொள்ளப்பட்டது. இதனால் புத்தளம் நகரிலுள்ள அனைத்து கடைகள், வர்த்தக நிலையங்கள், சந்தைகள் யாவும் மூடப்பட்டதுடன் வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை புத்தளம் நகரில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையினையடுத்து இடம்பெற்ற தாக்குதலில் உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரின் இறுதி கிரியைகளையொட்டியே இந்த கடையடைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இக்கடையடைப்புக்கான வேண்டுகோளை புத்தளம் பெரிய பள்ளிவாசல், புத்தளம் மாவட்ட உலமா சபை மற்றும் புத்தளம் வர்த்தக சங்கம் ஆகியன இணைந்து விடுத்திருந்தன.

புத்தளம் நகரின் பல இடங்களிலும், கடைகள், வீடுகள், வாகனங்கள், முச்சக்கர வண்டிகளிலும் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டதுடன் இராணுவத்தினரும், பொலிஸாரும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

புத்தளம் பொலிஸ் நிலையத்தின் மோட்டார் போக்குவரத்து பிரிவில் கடமையாற்றி வந்த நவரத்ன பண்டார என்ற பொலிஸ் உத்தியோகத்தரே கடந்த ஞாயிற்றுக்கிழமை புத்தளத்தில் இடம்பெற்ற பொலிஸ் பொது மக்கள் மோதலையடுத்து இடம்பெற்ற தாக்குதலின் போது உயிரிழந்தவராவார்.

இவரின் இறுதி கிரியைகள் நேற்று மாலை அவரது சொந்த ஊரான நொச்சியாகமவில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2-4)

# உடல், உள, சமூக, ஆன்மீகங்களின் பாதிப்பை மேம்படுத்துவதே தாதியம்

**தாதிய தினத்தை முன்னிட்டு அரச உத்தியோகத்தர் சங்கத்தி னால் நடத்தப்பட்ட தமிழ் மொழிமூல கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்ற கட்டுரையானது இங்கு பிரசுரிக்கப்படுகிறது.**

தாதியம் என்பது ஒரு நபரின் உடல், உள, சமூக, ஆன்மீக ரீதியான மேம்படுத்துதலுக்காக உதவி செய்தலும் ஊக்கப்படுத்தலுமாகும். அந்தவகையிலே மேற்குறிப்பிட்ட அங்கங்களான உடல், உள, சமூக, ஆன்மீக துறையில் குறைவு நிலையோ அன்றி பாதிப்பு நிலையோ ஏற்படும்போது அதனை மேம்படுத்துவதற்காக செயலாற்றுதலே தாதியம் ஆகும். மேலும் ஒரு நபர் உயிருடன் உள்ள போது மட்டுமல்ல, இறப்பிலும் இறப்பின் பின்பும் தாதியம் தொடர்ந்து கொண்டே செல்லும்.

இவ்வாறு ஒரு நோய்வாய்ப்பட்டவரது அல்லது சிகிச்சை பெறுநரது தனித்துவம், மனிதகௌரவம், உடல், உள செயற்பாடுகளைப் பேணும் வகையிலே தாதியானவர் தனது நிலையிலிருந்து மேற்பட்டவர்களுடனும் கீழ்நிலையில் உள்ளவர்களதும் ஒத்துழைப்புடனேயே செயலாற்றி வெற்றி கொள்ளக்கூடியதாக இருக்கும்.

அந்தவகையிலே பெரியவர்களை மதித்தல், அவர்தம் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளல் தவறுகளைத் தயவாக தெரியப்படுத்தல், முதல் சக தராதரத்தினருடன் சிநேகபூர்வமாக பழகுதல், தொழில் வழி உறவு பேணல், வேலைகளைப் பகிர்ந்து செயலாற்றுதல், உதவிகளைப் பெறல் உதவுதல், போன்றவற்றுடன் கீழ் நிலை உத்தியோகத்தரையும் மதித்து அவர்களை வழிநடத்தல், அவர்களது கருத்துகளுக்கும் மிதிப்பளித்தல், மேற்பார்வை செய்தல் முதலானவற்றுடன் நோயாளிகளின் தேவைகள், பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றிற்கு ஒரு தாதி, தாதிய நோய் நிதானம் செய்து அதற்கேற்ப தனது அறிவு, திறமை, மனப்பாங்கின் விருத்தி நிலைக்கேற்ப தாதிய செயன்முறைகளைத் திட்டமிட்டு பின்னர் அவற்றின் தேவையானவற்றை நடைமுறைப்படுத்தி அதன்மூலம் அந்நபரில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை மதிப்பீடு செய்யும் தாதியர் சேவையிலே பலரதும் ஒத்துழைப்பும் ஆதரவும் அவசியமாகும்.

உலக தரத்திலே சர்வதேச ரீதியாக தாதியருக்கான ஒருங்கிணைந்த நிறுவனமான சர்வதேச தாதியர்சபை 2011 ஆம் ஆண்டுக்கான வாசகமாக **இடைவெளிகளைக் களைந்து ஒன்றிணைந்து செயலாற்றுவதன் மூலம் தராதரத்தையும் சமத்துவத்தையும் மேம்படுத்துவோம்** என்பதை அறிவித்துள்ளது.

தாதியானவர் தனது செயற்பாடுகளை ஆற்றுவதற்கு சக ஊழியர்களதும் நோயாளரதும் ஒத்துழைப்பைப் பெற வேண்டியது அவசியமாகும்.

ஒவ்வொருவருக்கும் இடையேயான இடைவெளிகள் குறைக்கப்படல்வேண்டும். இடைவெளிகள் குறையக் குறைய நம்பிக்கையும், ஒத்துழைப்பும், உதவும் மனப்பாங்குகளும், நேர்மை தன்மையும், விசுவாசமும் அதிகரிக்கும். ***அன்பினால் உலகையாளலாம்*** என்பது பெரியோர் வாக்கு. அதற்கமைய சக ஊழியர்களுடனும் நோயாளருடனும் அன்பைக் காட்டி சமத்துவத்தை பேண வேண்டும்.

அதேபோல ஒருங்கிணைந்து செயற்படும் போது விசுவாசமுடன் செயற்படுவதால் ஒரு தரமான மேற்றரமிக்க சேவையை வழங்க முடியும். அதேபோல சிகிச்சை பெறுநரும் தரமான தாதியத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். சமத்துவம் என்பது உயர்வு தாழ்வுகளைக் கடந்து எல்லா தரப்பினருடனும் இணைந்து மணரீதியாகவும் சிந்தனைவழியாகவும் செயல்ரீதியாகவும் செயலாற்றுதல் ஆகும். இந்த நிலையானது தாதியத்தை சிறந்த முறையில் வழங்க வழிகோலும் அம்சமாகும்.

தாதியம் ஒரு குழுவேலை ஆகும். அதாவது தாதி தனியே ஒருவராக இருந்து செயலாற்ற முடியாது. வைத்தியரது ஆலோசனை தேவை. அதுபோல பரிசாரகர், மருந்தாளர், உடல்வழி சிகிச்சையாளர், தொழில்வழி சிகிச்சையாளர், ஆய்வுகூட நிபுணர், அலுவலக உத்தியோகத்தர் போன்ற பலதரப்பட்டவர்களது கரூத்துக்களும் சேவைகளும் ஒருங்கமையப் பெற்றே சிறந்த சேவையை வழங்க முடியும்.

எனவே இம் மருத்துவ குழுவினரிடம் குழு உணர்வு கட்டாயம் இருக்கவேண்டும். இது அக்குழுவின் முன்னேற்றத்துக்கு உதவுவதுடன் அக் குழுவின் செயற்பாடுகள், வழங்கும் சேவைகள் என்பன திருப்திகரமாகவும் தரமானதாகவும் காணப்படும் என்பதில் ஐயமில்லை. அதேபோல வைத்தியத்துறையில் தாதியர்களாகிய நாம் இக் குழு உணர்வுடன் செயலாற்றுவதன் மூலம் தராதரமான தாதிய சேவையை மக்களுக்கு வழங்க முடியும். சேவை பெறுநரும் தரமான சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும். தாதி தனது சக அங்கத்தவர்களானவர்களுடனும் நோயாளர்களுடனும் இரட்டைவழித் தொடர்பாடல் தன்மையை பேணவேண்டும். தாதி தான் அதிகாரம் செலுத்துபவராகவோ ஏனைய ஊழியர்கள், நோயாளர்கள் கேட்கவேண்டும் என்ற நிலையிலிருப்பது தவறாகும். இதன் மூலம் ஏற்படும் விளைவுகளையும் நாமே அனுபவிக்கவேண்டி நேரிடும்.

தாதியானவர் பேச்சில் இன்சொல்லும் பணிவும் நாவடக்கமும் இருக்க வேண்டும். அதுபோல கட்டுப்படுத்தும் தருணங்களில் கண்டிப்பும் அவசியமாகும். அதேபோல தனி நபர்களுக்கிடையிலான உறவு சரியான முறையில் பேணப்படல் வேண்டும். ஆளிடை தொடர்பானது வினைத்திறனானதாகவும் தரமானதாகவுமான சேவை வழங்க உதவி செய்யும்.

ஒவ்வொரு தனி நபருக்கும் இடையிலான ஆளிடை தொடர்பு சரியான முறையில் பேணப்படும் போது சிக்கல்கள், மனக்கசப்புகள், கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள் என்பன இல்லாமல் போகும் அல்லது குறைவுபடும். ஆளிடை தொடர்பு சரியானதாகவும் தொழில் ரீதிக்குட்பட்டதாகவும் காணப்படல் வேண்டும். அவை சொந்த வாழ்விலும் கூடிய பங்கு, செல்வாக்கு செலுத்துபவையாக அமையக்கூடாது. இதேபோல எம்மிடம் சேவை பெறுநர்களான நபர்களிடம் உறவுநிலையை பேணும்போது அது சிகிச்சை வழித்தொடர்பாடலுடன் கூடிய சிகிச்சை வழி உறவு நிலையாக அமைந்திருத்தல் அவசியமாகும். இது நோயாளர்கள் நம்மீதும் ஏனைய மருத்துவக் குழுவினருடனும் நம்பிக்கை வைப்பதற்கும் அவர்களிடமிருந்து சேவைகளைப் பொருத்தப்பாடான முறையில் பெற்றுக்கொள்ளவும் வழியை ஏற்படுத்தும்.

இவ்வாறான சிகிச்சை வழி உறவானது தாதிக்கும் நோயாளிக்கும் இடையேயான ஆளிடைத் தொடர்பாக காணப்படும் போது நோய் நிலை சம்பந்தமான விடயங்களை பெற்றுக் கொள்ளுவதற்கும் சுகாதார போதனை, அறிவூட்டல் போன்ற விடயங்களுக்கும் சாதகமானதாக அமையும். மேலும் சக ஊழியர்கள், மேல் மட்டத்தவர்கள், கீழ்நிலை உத்தியோகத்தருக்கும் அவர் அவர்களுக்குரிய அடைமொழிகளை பிரயோகித்து அழைக்கவேண்டும். காலங்களுக்கேற்ற வணக்கங்களும் தெரிவிக்கப்படல் வேண்டும். இது இருதரப்பினருக்குமிடையிலான பரஸ்பரதன்மையையும் ஒத்துழைப்பு நல்கும் தன்மையையும் வளர்க்கும்.

இதேபோல நோயாளர்களிடத்திலும் அவரவர்களுக்குரிய தனித்துவப் பண்பையும் கௌரவத்தையும் பேணும் வகையில் அவரவர்களுக்குரிய ஸ்தானங்களுக்கேற்ப வணக்கத்துக்குரிய sir, madam போன்ற வார்த்தை பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதேநேரம் பாமரமக்களது மனிதகௌரவமும் தனித்துவமும் பேணப்பட வேண்டியது தாதிய அறக்கோட்பாடாகும். அந்நிலையிலிருந்து சிறிதும் பிறழக்கூடாது.

அதேபோல தாதி தன்னுடைய சொந்த வாழ்விலும் உத்தியோக வாழ்விலும் தான் கற்ற கல்வி, பெற்ற அனுபவம், தாதிய நீதி நெறி ஒழுக்கங்களுக்கும் உத்தியோக இசைவாக்கங்களுக்கும் ஏற்றபடி செயற்பட்டு சகலதரப்பினருக்குமிடையிலான இடைவெளிகளை இயலுமானவரை குறைத்து ஆனால் கௌரவம், தனித்துவத்தையும் பேணி மற்றவர்களுடன் மனதால், செயலால் ஒன்றிணைந்து தமது தாதிய சேவைதனை தேவையறிந்து வழங்கி தாதியத்தின் தரத்தையும் வினைத்திறனையும் உயர்த்தும் வகையில் தராதரத்தையும் சக ஊழியர்களிடத்தும் மற்றவர்களிடத்தும் சமத்துவத்தை பேணி உலகுக்கும் மக்களுக்கும் நல்லதொரு அறப்பணியாம் தாதிய சேவைதனை ஆற்றுவோம்.

இந்த எண்ணம் தனியே ஒரு தாதியால் மட்டும் இயலுமானதல்ல. ஒவ்வொரு தாதிய உத்தியோகத்தர்களும் எடுத்துக்கொள்ள வேண்டிய உறுதி கூறி நிற்க வேண்டிய தாரக மந்திரமான சத்தியப் பிரமாணமாகும்.

**ப.பத்மநிருபர்**
**தாதிய மாணவன்**
**தாதிய கல்லூரி**
**யாழ்ப்பாணம்**

## யுத்த விமானங்கள் கொள்வனவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பு

இலங்கை வான்படையினருக்கு கடன் அடிப்படையில் யுத்த விமானங்களை கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பை தெரிவித்துள்ளது. கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை வான் படையினருக்கு யுத்த விமானங்களை கொள்வளவு செய்ய மேற்கொண்ட நடவடிக்கை அநாவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். இது நாட்டு மக்களுக்கு அதிக கடன் பளுவை சுமத்துவதாக அமையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் வான் படையின் எதிர்கால வளர்ச்சிக்கு யுத்த விமானங்கள் அவசியமாக இருப்பதாக படையின் பேச்சாளர் என்.டி விஜேசூரிய தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## யு.என்.டி.பி நிறுவனத்தின் நிதியுடன் பொது நோக்கு மண்டபம் புனரமைப்பு

யு.என்.டி.பி நிறுவனத்தின் நிதியுதவியுடன் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பனங்காமம் கிராமத்தில் உள்ள பொது நோக்கு மண்டபம் புனரமைக்கப்பட்டு நேற்று புதன்கிழமை மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் எஸ்.குணபாலனால் திறந்து வைக்கப்பட்டது.

மேற்குறித்த மண்டபமானது புனரமைக்கப்படாது அழிவடைந்த நிலையில் நீண்டகாலமாக காணப்பட்டமையில் அக்கிராம மக்கள் பல சிரமங்களை எதிர் கொண்டதையடுத்து நான்கு மாதங்களிற்கு முன்னர் மேற்குறித்த நிறுவனத்தின் நிதியுதவியுடன் புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது.

இம்மண்டபத்தில் கிராம பொது அமைப்புக்களின் மக்களுடனான வைபவங்கள், கிராம சேவையாளர் மக்களுடனான சந்திப்புக்கள் ஆகியவை இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கட்டட திறப்புவிழாவில் யு.என்.டி.பி நிறுவன உத்தியோகத்தர், மாந்தை கிழக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-3)

## இலங்கை அகதிகளை பொறுப்பேற்க நியூசிலாந்து பிரதமர் இணக்கம்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் இருந்து இலங்கை உள்ளிட்ட நாடுகளின் ஒரு தொகுதி அகதிகளையும் பொறுப்பேற்க நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ இணக்கம் தெரிவித்துள்ளார்.

எனினும் தற்போது இந்தோனேசியாவில் உள்ள 88 இலங்கை அகதிகளை பொறுப்பேற்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

ஏனெனில் அவர்கள் நியூசிலாந்தை நோக்கி பயணித்தார்கள் என்பதற்கு எந்த ஆதாரங்களும் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அகதி விடயம் தொடர்பில் விரிவான பேச்சு வார்த்தைகளை நடத்தவிரும்புவதாக தெரிவித்த அவர் அவுஸ்திரேலியாவிலுள்ள அகதி முகாம்களில் இருந்து வருடாந்தம் 750 அகதிகளை கோட்டா முறையில் பொறுப்பேற்கத் தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அந்த அகதிகள் ஐக்கிய நாடுகள் சபையின் கொள்கையின் அடிப்படை யில் நியாயமான அகதிகள் எனத் தம்மை நிரூபிக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் நியூசிலாந்தின் அகதி முகாம்களை நடத்தும் எண்ணம் தமக்கில்லை என வும் பிரதமர் ஜோன் கீ தெரி வித்துள்ளார். (ஸ்ரீ-2)

## பேராசிரியர் ஆரியரத்ன எழுதிய நூல் ஜனாதிபதியிடம் கையளிப்பு

அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஆரியரத்ன அதுகல எழுதிய சன்னிவேதன பிரவனதா என்ற சிங்கள மொழியிலான நூலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அலரி மாளிகையில் வைத்து நேற்று முன்தினம் கையளித்துள்ளார். களனிப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகவுள்ள பேராசிரியர் ஆரியரத்ன அதுகல மிகவும் அரிய தகவல்களைத் தொகுத்து எழுதியுள்ள இந்த நூல் தகவல் மற்றும் ஊடகத்துறையில் பட்டப் படிப்பு மேற் கொள்ளும் மாணவர்களுக்கும் ஊடகத்துறையில் ஆர்வம் உள்ளவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக உருவாக்கப்பட்டுள்ளது.

எதிர்கால சவால்களை நேர காலத்துடன் இனங்கண்டு அவற்றை வெற்றிகரமாக எதிர் கொள்ளக்கூடிய வகையில் ஊடகத்துறையைக் கட்டியெழுப்பும் நோக்கில் அவர் இந்த நூலை எழுதியுள்ளார். (4-2)

# புத்தளம் மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய 37 பேர் கைது

புத்தளம் பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற அமைதியற்ற சூழ்நிலையுடன் தொடர்புடையதான சந்தேகத்தின் பேரில் 37பேர் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக வடமேல் மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி விஜே குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் பொலிஸ் கான்ஸ்டபிளான நவரத்ன பண்டாரவின் கொலையுடன் தொடர்புடையதான ஐவரும் உள்ளடங்குவதாகவும் பிரதி பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புத்தளத்தில் பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையதான சந்தேகநபர்கள் ஐவர் நேற்று முன்தினம் புத்தளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த மோதல் சம்பவத்தின் போது பொலிஸாரது மோட்டார் சைக்கிள்களை எரித்து சேதப்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


அத்துடன் கற்பிட்டி-புத்தளம் பிரதான வீதியை பொலிஸார் மீது கடந்த திங்கட் கிழமை தாக்குதல் நடத்தினார்கள் என்ற சந்தேகத்தில் 10 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் கடந்த சனிக்கிழமை காலை கற்பிட்டி பிரதேசத்தில் வைத்து பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியதுடன் வைத்திய சாலைக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் 14பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட அனைத்து சந்தேகநபர்களிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. உரிய விசாரணைகளை அடுத்து அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ஸ்ரீ-2)

# அரசியல்வாதிகளினால் பொலிசாரும் இராணுவத்தினரும் நெருக்கடிக்குள்

## பொன்சேகா குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாட்டைச் சூறையாடும் அரசியல்வாதிகளினாலேயே பொலிஸ், இராணுவம் என்பன இப்போது பிரச்சினைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன என சிறை வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சிறைத் தண்டனையை அனுபவித்து வரும் சரத் பொன்சேகா நேற்று முன்தினம் மருத்துவ சிகிச்சை ஒன்றுக்காக தனியார் வைத்தியசாலை ஒன்றுக்குக் கொண்டு வரப்பட்டார். அப்போதே அவர் இது தொடர்பான தகவல்களை ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரும் இராணுவத்தினரும் நாட்டையும் அரசியலமைப்பையும் மக்களையும் பாதுகாக்கும் வகையில் செயற்பட வேண்டும் என வலியுறுத்திய சரத் பொன்சேகா நாட்டின் வளங்களைச் சூறையாடும் அரசியல்வாதிகளைப் பாதுகாக்க வேண்டிய எந்தப் பொறுப்பும் படையினருக்கோ பொலிஸாருக்கோ இல்லை எனவும் தெரிவித்தார். இந்த அரசியல் வாதிகளினால்தான் பொலிஸாரும் இராணுவத்தினரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளதாகவும் சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டினார். (ஸ்ரீ-2)

# இந்திய மீனவர்களுக்கு ஆயுதங்களை வழங்குவது நடைமுறைச் சாத்தியமற்றது

## அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

தற்பாதுகாப்பு நோக்கத்திற்காக இந்திய மீனவர்களுக்கு ஆயுதங்களை வழங்குவது நடைமுறைச் சாத்தியமற்றது என அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

நடுக் கடலில் இந்திய மீனவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை முறியடிக்கும் நோக்கில் மீனவர்களுக்கு துப்பாக்கிகள் வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

ஆயுதங்கள் வழங்கப்பட வேண்டுமெனக் கோரி தமிழக நீதிமன்றமொன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனினும் இந்த யோசனைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் தீபக் மிட்டால் மற்றும் இணைய பணிப்பாளர் ஹர்ஷ் வர்தான் சிரிங்லா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்வதில்லை என இலங்கைக் கடற்படையினர் திட்டவட்டமாக மறுத்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்திய மீனவர்கள் சர்வதேச கடற்பரப்பில் அத்துமீறல்களில் ஈடுபடக் கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது.

மீனவர் பிரச்சினை தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் இராஜதந்திர ரீதியில் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ஸ்ரீ-2)

# பொருட்களை அனுப்பும் நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

பொருட்களை அனுப்பும் நிறுவனங்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தகக் கப்பல் பணிப்பாளர் ஷாந்த வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதியின் போது உரிய ஆவணங்களை வழங்குவதற்கு நிறுவனங்கள் அதிக தொகையை வசூலிப்பதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய முறையின் கீழ் நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்படாத நிலையில் அவர்களை கட்டுப்படுத்த முடியாதுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்கும் முகமாக நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு வர்த்தக கப்பல் பணிப்பாளர் அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக ஷாந்த வீரக்கோன் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# துப்பாக்கியுடன் தப்பிச்செல்ல முற்பட்ட கடற்படை வீரர் கைது

(மன்னார்)

மன்னார் கஜபா கடற்படை முகாமிலுள்ள கடற்படை வீரர் ஒருவர் தனது துப்பாக்கியுடன் தப்பிச்செல்ல முற்பட்டவேளையில் கைது செய்யப்பட்டுள்ளார்

குறித்த கடற்படை வீரர் தனது துப்பாக்கியுடன் நேற்று முன்தினமிரவு 7.30 மணியளவில் தப்பிச் சென்றதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்

தப்பிச்சென்ற வேளையில் இவர் மன்னார் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்

இவ்வாறு தப்பிச்சென்ற வீரரிடமிருந்து ரீ-56 ரக துப்பாக்கிகள் மற்றும் 120 துப்பாக்கி ரவைகள் கைப்பற்றப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

# கொழும்பு மாநகர மேயர் வேட்பாளராக ஐ.தே.கட்சி சார்பில் முஸம்மில் போட்டி

(கொழும்பு)

கொழும்பு மாநகர மேயர் வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஏ.ஜே.எம். முஸம்மில் போட்டியிடக்கூடும் எனக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முஸம்மில் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினராக கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஹமட் மஹ்ரூப் மேயர் பதவிக்காக போட்டியிடப் போவதில்லை என அறிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற மேயர் வேட்பாளருக்கான நேர்முகத் தேர்வில் தாம் பங்கேற்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்கள் தொடர்பான சகல வேட்பு மனுக்களையும் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தம்வசம் பாதுகாப்பாக வைத்திருக்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இறுதி நேரத்தில் வேட்பு மனுக்களில் கட்சிக் கிளர்ச்சிக்குழு உறுப்பினர்கள் ஏதேனும் குளறுபடிகளை செய்யக்கூடும் என்ற அச்சம் காரணமாக வேட்பு மனுக்கள் இரகசியமாக பாதுகாக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# அபிவிருத்திக்காக வன பிரதேசங்களை அழிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது

## சுற்றாடல் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அபிவிருத்திப் பணிகளுக்காக அரசாங்கத்திற்கு சொந்தமான வன பிரதேசங்களை அழிப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என சுற்றாடல் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

2011ஆம் ஆண்டின் தேசிய பசுமை விருது வழங்கும் வைபவம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது சூழலை பாதுகாப்பதற்கான அனுமதி பத்திரத்தினை பெற்று நடாத்தப்பட்டு வரும் விடுதிகள், இரசாயன பரிசோதனை நிலையங்கள், மருந்துகள், சிகிச்சைகள், ஆடைகள் உள்ளிட்ட மேலும் பலதுறைகளில் தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு ஜனாதிபதி தேசிய பசுமை விருதினை வழங்கினார்.

30 ஆவது ஆண்டை பூர்த்தி செய்துள்ள மத்திய சுற்றாடல் அதிகார சபை இந்த விருது வழங்கும் வைபத்தினை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது சுற்றாடல் பாதுகாப்பிற்கான சட்டங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் இது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு சொந்தமான வன பிரதேசங்களை அழிப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் எதிர்காலத்தில் அதற்காக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-4-2)

# சம்பூர் அனல் மின்சார மையத்துக்கான உடன்படிக்கை அடுத்த மாதம் கைச்சாத்து

(கொழும்பு)

திருகோணமலை சம்பூர் அனல் மின்சார மைய உடன்படிக்கைக்கான ஆயத்த பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இதன் அடிப்படையில் அடுத்த மாதத்தில் உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என்று அசோக் கே காந்தா தெரிவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டு இந்த மையத்துக்கான நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு சம்பூர் அனல் மின்சார மையத்தின் மின்சார உற்பத்தி தேசிய மின்சார உற்பத்தியுடன் இணைக்கப்படவுள்ளது.

500 மில்லியன் டொலர்கள் செலவில் இதன் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதில் இருந்து 500 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின்சாரத்துடன் இணைக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-4-2)

# நல்லூர் ஆலய சூழலில்...

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் 22 ஆவது நாள் நிகழ்வு இன்று வியாழக்கிழமை இடம்பெறும். இன்றைய நிகழ்வில் திருமதி தாரணி ராஜ்குமாரின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

இதில் வயலின் செல்வி பாக்கியலட்சுமி நடராஜா, மிருதங்கம்- எஸ். கமலதாஸ், கடம்- ஆர்.சிவராம் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக பங்கேற்கவுள்ளனர்.

* * * * *

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு நடைபெற்று வரும் கம்பராமாயணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா *இன்று போய் நாளைவா* எனும் தலைப்பில் இசைப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

* * * * *

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆன்மீக சிந்தனையுடன் நடத்தும் சமய சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் தினமும் மாலை 3 மணி முதல் 6 மணிவரை நடைபெற்று வருகின்றது.

இதில் 22 ஆம் திருவிழாவான இன்றைய நிகழ்வில் சைவ வாழ்வு என்ற தொனிப் பொருளில் துரை இளங்குமரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். அதனைத் தொடர்ந்து சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் அறநெறிப் பாடசாலை, கோண்டாவில் ஸ்ரீகணேசா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

# சிலாபத்தில் ஒருவர் சுட்டுக்கொலை

சிலாபம் சிப்பிகலான பகுதியில் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப் பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் வீட்டுத் தோட்டத்தில் மறைந்திருந்த நபரொருவர் நேற்று முந்தி னம் இரவு 10 மணியளவில் இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாக பொலி ஸார் குறிப்பிட்டனர்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாய மடைந்த நபர் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்த தாக வைத்தியசாலைப் பொலிஸார் தெரிவித் தனர்.

இந்தக் கொலை தனிப்பட்ட தகராறு கார ணமாக இடம்பெற்றதா என பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# பருவப்பெயர்ச்சிக் காலநிலையால் மழைவீழ்ச்சி அதிகரிக்கும் சாத்தியம்

தற்போது நிலவும் பருவப் பெயர்ச்சி கால நிலை காரணமாக மழை வீழ்ச்சி அதிகரிப் பதற்கான சாத்தியங்கள் நிலவுவதாக வளி மண் டலவியல் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

மத்திய மாகாணத்தில் பல பகுதிகளில் பலத்த காற்று வீசுவதற்கான சாத்தியங்கள் நிலவுவதாக திணைக்களத்தின் கடமைநேர நிபுணர் சுட்டிக்காட்டினார்.

மேல், மத்திய, வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் எனத் தெரிவிக்கப்படு கின்றது.

மாலை அல்லது இரவு வேளைகளில் ஊவா மற்றும் தென் மாகாணங்களின் சில பகுதிகளில் மழை பெய்வதற்கான சாத்தியங் கள் காணப்படுகின்றன.

அத்துடன் மணித்தியாலத்திற்கு 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் எனவும் கடற்பகுதிகள் சற்றுக் கொந்தளிப்பாக காண ப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# காலாவதியான சோடாவை விற்றவருக்கு அபராதம்

(கிளிநொச்சி)

காலாவதியான சோடாவை விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் வியாபாரி ஒருவர் விலைக்கட்டுப்பாட்டுச் சபையினரால் கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டதைய டுத்து 3ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 2 மாத சாதாரண சிறைத்தண்ட னையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)

# தூக்குத் தண்டனையை நிறுத்த முதல்வர் கருணை காட்டுவார்


## வைகோ நம்பிக்கை

பேரறிவாளன், முருகன், சாந்தன் விவகா ரத்தில் முதல்வரை நம்பியுள்ளோம் என ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தெரிவித் துள்ளார். சென்னை எம்.ஜி.ஆர். நகரில் பொதுக்கூட்டம் நடந்தது.

இதில் வைகோ உரையாற்றுகையில், பேரறிவாளன், சாந்தன், முருகனுக்கு தூக்கு தண்டனையை மத்திய அரசு உறுதி செய்துள் ளது. அவர்கள் 20 ஆண்டுகளுக்கு மேலாக தங்களது வாழ்க்கையை சிறையில் கழித்துள் ளனர். மத்திய அரசு, உள்துறை அமைச்சகம் என அனைத்து கதவுகளை தட்டியும் பயன் இல்லை.

நான் மத்திய அரசை எச்சரிக்கின்றேன். ஒருவேளை நீங்கள் தூக்கு தண்டனையை நிறைவேற்றினால் வரும் 2047 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தின் போது இந்தியாவில் தமிழ கம் என்ற மாநிலம் இருக்காது. இந்திய தேசிய ஒருமைப்பாடும் தூக்கில் விடப்படும். இந்த விடயத்தில் தமிழக முதல்வர் ஜெயல லிதா கருணை காட்டுவார் என நம்பியுள் ளோம். முதல்வரிடம் கேட்காமல் வேறு யாரி டம் நாங்கள் கேட்க முடியும். இவ்வாறு வைகோ கூறியுள்ளார். (ஸ்ரீ-4)

# நல்லூரான் திருவடிக்கு இன்று ஒருமுகத் திருவிழா



## எல்லோரும் வாழ வேண்டும் வேல் முருகா!

ஆறுபடை வீடு கொண்ட வேலவா!
எம் வேதனைகள் தீரவேண்டும் பாலகா!
வறுமை ஒழியவேண்டும் வேலவா! நம்
வாழ்வில் வசந்தம் வீசவேண்டும் பாலகா!
எம்தேசம் விடிய வேண்டும் வேலவா! உன்
வேல்கொண்டு வந்துவிடு பாலகா!
எல்லோரும் வாழவேண்டும் வேலவா! நம்
அனைவருக்கும் அருள்புரிவாய் ஆறுமுகா!

A.அன்பு, வடவரணி

## கலியுகம் காத்திடுவாய் கந்தா!

கலாசாரம் காத்து நிற்கும் கந்தன் வீதியிலே
காற்சட்டையும் அரைச்சட்டையும்
கவசமும் புராணமும் ஓதும் உன்னயலிலே
குத்துப் பாட்டும் கும்மாளமும்
பக்தியோடும் பணிவோடும் வழிபடுகையில்
பகிடிகளும் சிரிப்புகளும்
நாவலர் நன்னெறி காட்டிய பூமியிலே
கொலை கொள்ளை மோசடியும்
இவ்வின்னல்கள் போக்கி நல்வழிகாட்டிட
எழுந்தோடி வருவாய் கலியுகக் கந்தா

தி.நவநீதகாந்தன், யா/பெரியபுலம் ம.வி.

## கஷ்டங்களை தீர்த்தருள்வாய்

நல்லை பதிநாயகனே நல்லை குமரா
நாடியவர்களுக்கு முன்னின்று அருள்வாய் முருகா
நம்பியவரின் கஷ்டங்களை தீர்த்தருள்வாய்- கந்தா
நம் வாழ்க்கையை வெற்றியாக்குவாய்-வேலாயுதா

சி.துசியந்தன், ஆவரங்கால்.

## கானமயிலோனைக் கனவு கண்டோம்

கனடாவில் கனவு கண்டோம் கந்தா
கானமயில் வாகனனே கார்த்திகேயா
கிள்ளையவள் தெய்வானை நாயகனே நீ
வள்ளியுடன் வேலேந்தி நல்லூரில் மருகா
புள்ளிமான் ஓடிவரத் தேடி வந்ததேனோ
நீலமயில் வாகனனே பாலமுருகா
மூலமந்திர மோதியவேதப் புதல்வா எமை
காலமெலாம் காத்திடவா திருப்புகழின் நாயகனே!

கண்ணன் சுவஸ்திகா , மந்திகை புலோலி.


நல்லை நகர் நாயகனே! நல்லாட்சி புரிவாய் வேலவனே!

பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு? நீங்கள் பொங்கிடும் பார்வையைப் பெற்றிட. பற்களில் பழுதுண்டா? விழுந்துவிட்டனவா? முன்னரைவிட உறுதியான, அழகான வெண்சங்குப் பற்களைக் கட்டிட– இளைய தலைமுறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புகளைப் பொருத்திட

யாழ்ப்பாணத்தில் கை தேர்ந்த ஒரே ஸ்தாபனம்

கட்டுப்பற்களைச் சுத்தம் செய்வதற்கான மாத்திரை விற்பனையில் உண்டு.

# ஸ்ரீக்கணேஷ்

மூக்குக் கண்ணாடியகமும் பல் கட்டுமிடமும்

இல 564,566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:021 222 2486



கிளைகள்:
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல 80, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

# மற்றொரு கோணம்



## உங்களுக்குள் மாற்றத்தை எப்படி கொண்டுவருவது என்று பாருங்கள்



இந்திய சாசன சட்டத்தின் ஓட்டைகளை பயன்படுத்தி மக்களின் மனநிலை அறியாமல், வாக்குப் பெறாமல் கட்சியின் அறிவித்த கொள்கைகளைத் தாண்டி பணத்திற்காகவும், பதவிக்காகவும் மக்களை ஏமாற்றி கட்சி நடத்துகிற அரசியல்வாதிகளின் கோண புத்திகள் யோகாவின் மூலம் சரிசெய்ய முடியுமா?

அரசியலில் மட்டும்தான் எல்லாத் தவறுகளும் நடக்கின்றன என்று

**ஆன்மீகம் 21**

சொல்லி ஒதுங்கிவிடாதீர்கள். சாலையில் வாகனத்தை ஓட்டிச் செல்கிறீர்கள், சிக்னலில் சிவப்பு விளக்கு இருந்தால் நிற்காமல் செல்பவர்களும் இருக்கத்தானே செய்கிறார்கள். போக்குவரத்து கண்காணிப்பாளர் இருந்தால் அவருக்காக நிற்பவர்கள் உண்டு. ஆனால், அப்படி அவர் இல்லாவிட்டால் சிவப்பு விளக்கு எரியும் போது சாலையைக் கடக்க முயற்சிக்கிறோம்.

இப்படிப்பட்டவர்களுக்கு இந்த நாட்டின் பிரதமராகும் வாய்ப்பு வந்தால் என்னவெல்லாம் செய்வார்கள்? பெரும்பாலான மக்கள் வாய்ப்பு கிடைக்கும் போது தவறுகள் செய்யத் தயாராகத்தானே இருக்கிறார்கள். இப்படிப்பட்ட கலாசாரம்தான் வேரூன்றி உள்ளது.

அரசியலில் இருப்பவர்கள் ஒன்றும் ஆகாயத்திலிருந்து இறங்கிவிடல்லை. நாம் தான் அவர்களைத் தேர்ந்தெடுத்தோம்.

அவர் பணியை சரியாகச் செய்யவில்லையென்றால் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களை மாற்றிவிடும் அதிகாரம் உங்களுங்கு இருக்கிறது. ஆனால் வாக்களிக்கும் அன்று விடுமுறை கொடுத்தாற்கூட சென்று வாக்களிக்காத எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அந்த அளவிற்குக் கூட சமூகத்தில் பொறுப்பெடுக்காதவர்கள் நிறையப் பேர் உள்ளனர்.

எனவே அரசியல்வாதிகள் தான் தவறு செய்கிறார்கள் என்று ஒரு தலைப்பட்சமாக குற்றம் சாட்ட வேண்டாம். உங்களுக்குள் மாற்றம் எப்படி கொண்டு வருவது என்று பாருங்கள். யோகா அதற்கு முழுமையாய் துணை புரிகிறது. எப்படிப்பட்ட மனிதனுக்கும் அது வேலை செய்கிறது.

குழந்தைப் பாக்கியம் இல்லாத பெண்களை ராசியில்லாதவர்கள் என்று பலர் கருதுகிறார்களே?

ஒரு காலத்தில் இந்த முழு சமுதாயமே இந்த வேளாண்மை சார்ந்து தான் இருந்திருக்கின்றது. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக சமூகம் விளைவித்து உண்டிருக்கிறதே தவிர வேட்டையாடி உண்டதில்லை. ஒரு சிறு பழங்குடியினர் பிரிவுதான் வேட்டையில் ஈடுபட்டிருக்க முடியும் வேளாண்மை என்பது எப்போதுமே மிகுந்த உடல் உழைப்பு தேவைப்படுகிற ஒரு துறை. இன்று நாம் கூலிக்கு வேலையாட்கள் அமர்த்தி பணிகளைச் செய்து கொள்கிறோம். இது வேறு. ஆனால் பழைய காலங்களில் அவர்கள் தங்கள் நிலங்களில் உழுது பாடுபட்டு உணவுப் பொருட்களை விளைவித்துக் கொண்டிருந்தார்கள்.

எனவே உங்களுக்கு எவ்வளவு குழந்தைகள் இருந்தாலும் அதுவே மிகப்பெரிய சொத்தாக இருந்தது. அதுவும் ஆண் குழந்தைகள் இருந்தால் அது பெரிய வரம். அதனால் தான் பெண்குழந்தை மட்டும் பெறுகின்ற பெண்கள், ராசியானவர்கள் என்று கருதப்படுவதில்லை. ஆண் குழந்தைகளைப் பெற்றால்தான் அவள் ராசிமிக்கவள். இதை அரசர்கள் நிர்ணயித்தார்கள். ஏனென்றால் ஆண்குழந்தை இல்லையென்றால் பிறகு ஆட்சிக்கு யார் வருவது? தன்னுடைய இரத்தம் தன்னுடைய நீடிப்புத்தான் இதன் இடத்துக்கு வர வேண்டும் என்று அரசர் கருதத் தொடங்கினார். அதன் மூலம் மரணத்துக்குப் பின்னும் தானே இந்த மண்ணை ஆண்டு கொண்டு இருப்பதாக அவர்களுடைய உள் மனம் கருதியிருக்கவேண்டும் வேறு ஒருவர் ஆட்சிக்கு வந்தால் அவர்கள் அதை விரும்பவில்லை. இது தான் அவர்களின் மனநிலையாக இருந்திருக்கிறது.

ஒரு காலகட்டத்திற்குப் பிறகு இந்த சமூகத்தில் நீண்ட காலமாக, ஒரு பெண்ணிற்கு குழந்தை இல்லை என்றால், அவள் கேலிப் பொருளாக மாறியிருந்தாள். இந்த சமூகத்தில் எல்லா வகையான இயலாமையும் கேலிக்குரியவையாகி விட்டன. காது கேட்காவிட்டால் கேலி செய்வது, நடக்க முடியாவிட்டால் கேலி செய்வது, நீண்ட வளர்ச்சிக்குப்பிறகு தான், பண்பாடு வளர்ந்த பிறகு தான் ஒருவரால் நடக்க முடியவில்லை என்றால் அதைப் பார்த்துச் சிரிப்பதற்கு ஒன்றுமில்லை என்பதை மனிதர்கள் புரிந்து கொண்டார்கள். அவருக்கு அன்பும் பரிவும் உதவியும் தேவை என்பதைப் புரிந்து கொண்டார்கள். அதே போல் ஒரு பெண்ணுக்குக் குழந்தை இல்லையென்றால், அவருக்கு அன்பும் பரிவும் அமைதியும் தேவை. இதை மனிதர்கள் புரிந்து கொள்வதற்கு நீண்ட காலம் பிடிக்கும். ஓரளவு இதை மக்கள் புரிந்து கொள்கிறார்கள்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# தமிழ்... மொழி... சில பிற... பல

## தமிழ்...மொழி, மற்றும் சிறுபல விடயங்கள், பல சிறு விவகாரங்கள் சம்பந்தமான குறு ஆய்வு 09

வியப்பு என்னவென்றால், ஈரான், ஆஃப்கானிஸ்தானில் சில வட்டாரங்களிலும் பாகிஸ்தானிய ஹய்ப்பூர் மாவட்டங்களிலும் பேசப்படும் பிராகுயியை தமிழுடன் முடிச்சிடுவது, பலுசிஸ்தானில் பேசப்படும் பிராகுயி ஆரம்பகால "சிந்துநதித் திராவிடர் கொள்கை" அடிப்படையில் தோன்றியது என்பதை ஜீரணிப்பது சற்றுச் சிரமம் தான். வாஸ்த்தவத்தில் பாரசீகரால் காவப்பட்ட அரமய்க் மொழியின் பிற்கூறான பாரசீக மொழிக்கும் பிராயிக்கும் இடையேதான் நெருக்கம் அதிகம்.

மானசீகத்தின் மேல்விருத்திக்கான அடி மூலவேரான, உச்சமான மானசீகக் கண்டுபிடிப்பான மொழியின் தோற்றம், ஏற்றம், மாற்றம் பற்றி ஆராய்ந்து ஜதார்த்தமான, செம்மையான முடிவுகளை அடைவது செங்குத்தான குன்றின் உச்சியில் குந்துவதற்காக ஏறுவதைப் போன்றது.

முடிவுரை

ஒரு ஆறு, ஆறரை பில்லியன் (அறுநூறு, அறுநூற்றைம்பது கோடி) ஆண்டுகட்கு முன், பெரு மோதற் சிதறல் மூலம் பிரபஞ்சம் தோன்றியதாம். ஒரு நாலு, நாலரை பில்லியன் வருடத்திற்கு முன் நம் பூமி தோன்றிற்றாம். அதன் மேல் ஒரு-ஒன்றேமுக்கால் மில்லியன் (பதினேழரை இலட்சம்) ஆண்டுகளுக்குமுன் முதன் முதலில் மனிதன் தோன்ற ஆரம்பித்தானாம். வரலாற்றின் கால வீச்சம் பற்றிப் பார்க்கிறபோது எகிப்திய, சுமேரிய, மொசப்பொத்தேமிய நாகரிகங்களே அதியாதி தொன்மை வாய்ந்தவை என்பது புரியும். இந்து நதி, சீன நாகரிகங்கள் பிந்தியவை. கல்லும் மண்ணும் தோன்றுமுன் மனிதன் தோன்றவில்லை. காற்றில் மனிதன் தோன்றியதாக தகவல் இல்லை. ஆபிரிக்கக் கண்டத்திலேயே முதல் மனிதன் வெளிப்பட்டான் அப்போதய

> "கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

உலகு, இப்போதையது போலிருக்கவில்லை. வெவ்வேறு பாரிய நிலத் துண்டங்கள் சேர்ந்திருந்தன. ஆபிரிக்காவிலிருந்து மத்திய கிழக்கிற்கு நகர்ந்து அத்தோடு தென்கீழ்ப்பக்கமாக பாரசீகத்திற்கும் சுழல் வட்டாக வடக்கு, கிழக்கு, மேற்கு பிரதேசங்களுக்கும் இந்த அதியாதி ஆபிரிக்க மனித இனம் பரம்பியிருக்கிறது. ஆகமுந்திய விருத்தி பெறா மனித மூதாதையரின் எச்சங்கள் ஆபிரிக்காவில்தான் கண்டுபிடிக்கப்பட்டன. Homo Habilis இலிருந்து Java மனிதன், Neanderthal மனிதன், Cro Magnon என்று ஊர்ந்து Homo Sapiens வரையான முதல் மனித வளர்வு, கறுப்புக் கண்டத்தில்தான் நிகழ்ந்ததற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. இந்த வளர்ப்பெடுப்பின் படிதான் ஆயிரக் கணக்கான வருட ஊரலில் பாரசீகத்தை நோக்கி மானுடம் பரவியிருந்திருக்கிறது. நீள் நீண்ட, நீள்-நீண்ட காலத்திற்குப்பின் பாரசீகப் பிரதேசங்களிலிருந்து மீளமீள எழுந்து பரம்பலின் படிக்குத்தான் இந்துநதிதீர மனிதக்குடியிருப்புக்கள் ஸ்திரமாயின. பல நீண்ட காலப்பரம்புகையின் தொடர்ச்சி இத்தீர மக்களை தெற்கு நோக்கியும் பரவ வைத்திருக்கிறது. முதலில் இந்து நதிப்பள்ளத் தாக்கில் குடியேறிய விருத்தி பெறாக் குடியாளருக்கும் அலையலையாக வடக்கிலிருந்து வந்து குடியேறிய-ஒப்பீட்டளவில் வளர்ச்சியுற்ற மக்களுக்கும் பெரிய வித்தியாசம் இருக்கவில்லைத்தான். வடக்கிலிருந்து புதிதாய் வந்தவர்களால் ஏலவே குடியேறிய பிற்பட்டோர் தள்ளப்பட, அவர்களுக்குத் தெற்கு நோக்கி நகர்வதைத் தவிர 'வேறு வழியிருக்கவில்லை. இந்த ஊரலும் நீண்ட பல காலமாக நடந்தது. மலை, நதி, காடு, இயற்கையின் சீற்றம் என்றும் பெயர்ந்த, பலவகைப்பட்ட மக்கட் கூட்டங்களிடையான பிணக்குகள் என்றும், இந்த மக்களை அவஸ்தைப்படுத்திய பல காரணிகள் இருந்ததால் இடையே தங்கியிருந்தவர்களும் தொடர்ந்து பரந்து பரவியவர்களும் இவர்களாயினர். இயற்கைச் சுவாத்தியம் நில-நீர்வளம், பிணிகள் போன்ற பிறவும் இம்மக்களிடையே எக்கச்சக்கமான வித்தியாசப்பட்ட பிரிவுகளை ஏற்படுத்தின. வட இந்தியா, நடுஇந்தியா, தென்னிந்தியா, கிழக்கிந்தியா, மேற்கிந்தியா என்று இக்

**சிறீனோ சிறீ-சிறீசு**

குழுக்கள் சிதறின. இது சார்ந்தே நாகரிகம், கலாசாரம், குணாம்சம், மற்றும் முக்கியமான மொழி விருத்தியுற்றன.

கிழ் நோக்கித் தள்ளப்பட்டவர்களே திராவிடர்! தள்ளியவரே ஆரியர். இருவர் ஒரு மூல[illegible]லிருந்து பிறந்தனர். மெய்[illegible]; ஆகலாம்...

(தொடரும்)

# ராஜீவ்காந்தி கொலைச் சதிகாரர்களை உல்லாசமாக உலவவிட்டு 3 அப்பாவிகளுக்கு தண்டனையா?

## குமுறுகிறார் சி.பி.ஐ.இன்ஸ்பெக்டர்


"முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைச் சதிகாரர்களைப் பிடிக்காமல் விட்டு விட்டு, மூன்று பொடியன்களுக்குத் தூக்குத் தண்டனை வாங்கித் தந்த சி.பி.ஐயில் வேலை பார்த்ததற்கு வெட்கம், வேதனை, அவமானம், குற்றஉணர்ச்சி ஆகியவற்றால் குமுறுகிறேன்... கொந்தளிக்கிறேன்!" இப்படித் தன்வீட்டுச் சுவரில் எழுதி வைத்து இருக்கிறார் பொலிஸ் இன்ஸ்பெக்டராக இருந்த மோகன்ராஜ். இவர் ராஜீவ் கொலை வழக்கு விசாரணைக் குழுவில் இடம் பெற்ற அதிகாரிகளில் ஒருவர்.

"ஏன் இந்தத் திடீர் ஆவேசம்?" என்று கேட்கும் முன்பே, சுவரில் அடித்த பந்தாக வந்தது பதில்!

"நான் புலிகளுக்கு ஆதரவாளன் அல்ல." விசாரணை முழுமை அடையாமல், சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரைத் தூக்கிலிடக் கூடாது என்பதே எனது கருத்து. சி.பி.ஐக்கு விருப்பப்பட்டுப் போன நான், ராஜீவ் கொலை வழக்கு விசாரணை நடந்த விதத்தைப் பார்த்து வெதும்பிப்போய் வி.ஆர்.எஸ். வாங்கினேன். இந்த வழக்கில் ஆரம்பத்தில் இருந்தே உயர் அதிகாரிகள் பலர் அலட்சியப் போக்குடன் தான் இருந்தனர்.

ஒரு நூல் கிடைத்தால் குறிப்பிட்ட லெவலுக்கு மேல் அதை விசாரிக்காமல் அப்படியே நிறுத்தி விடுவார்கள். ராஜீவ்காந்தியைக் கொலை செய்தது விடுதலைப்புலிகள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால் அதற்குக் காரணகர்த்தாவாக இருந்து பெரும் நிதி உதவி கொடுத்துப் பின்னால் இருந்து இயக்கியவர்கள் வேறு பல உதவிகள் செய்தவர்கள் எனப் பல மர்ம மனிதர்கள் இன்னமும் இருக்கிறார்கள். அவர்களும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் தானே? அப்படிப்பட்டவர்களை அரசியல் காரணங்களுக்காகப் பொத்திப் பொத்தி பாதுகாத்தார்கள் என்பது தான் உண்மை.

ஒற்றைக்கண் சிவராசன் பெங்களூர் கோனேகொண்டா பகுதியில் தங்கி இருந்த வாடகை வீட்டை நாங்கள் முற்றுகை இட்டதும் தாக்குதலுக்காக உயர் அதிகாரியிடம் அனுமதி கேட்டோம். கிட்டத்தட்ட இரண்டு நாட்கள் அனுமதி கொடுக்காமல் வேண்டும் என்றே காலம் தாழ்த்தினார்கள். தாக்குதல் நடந்த உடனே அனுமதி கொடுத்திருந்தால் சிவராசனை உயிருடன் பிடித்திருக்க முடியும். இந்தக்




மோகன்ராஜ்

கொலையில் யார் யாருக்கு எவ்வளவு பங்கு?" என்ற மொத்த விபரங்களையும் கூறியிருக்கலாம். ஆனால், அந்தத் தாக்குதலை உடனே நடத்த விடாமல் ஏன் தடுத்தார்கள் என்பது இதுவரை எனக்குப் புரியாத புதிர்தான்!

ராஜீவ் கொலைக்கான பணப் பரிமாற்றத்தில் சந்திராசாமி, கே.பி.என்கிற பத்மநாதன் ஆகியோருக்குப் பங்கு இருக்கிறது. இவர்கள் இருவருமே வெளியில் தான் இருக்கிறாங்கள். இவர்களுக்குத் தண்டனை வாங்கித் தராமல் உல்லாசமாக உலவ விட்டது ஏன்?


ராஜீவ் கொலை செய்யப்பட்ட இடத்தில் இருந்த மரகதம் சந்திரசேகரின் மகன் லலித் சந்திரசேகர், "அம்மாவை வைத்தியசாலையில் சேர்க்கப் போய் விட்டேன்..." என்று சொன்னார். ஆனால், அவர் வைத்தியசாலைக்கு போகவில்லை. காங்கிரஸ் பிரமுகர் ஒருவர்தான் மரகதம் சந்திரசேகரை வைத்தியசாலையில் சேர்த்தார் என்பது பின்னர்தான் தெரியவந்தது. லலித் சந்திரசேகரின் இந்தத் தவறான வாக்கு மூலத்தை மேலும் விசாரிக்கவில்லை. இந்த முரண்பாடுகள் குறித்து நான் கூட கேட்டேன். ஆனால், யாரும் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. முதலில் பார்க்கும் போது அடிபடாமல் இருந்திருக்கிறார் லலித் சந்திரசேகர். ஆனால் நான்கு நாட்கள் கழித்து காலில் கட்டுப் போட்டுக் கொண்டு நடமாடி இருக்கிறார்.



பேரறிவாளன்



சாந்தன்



முருகன்

"மல்லிகை" இல்லத்தில்தான் எங்களது விசாரணைகள் நடந்தன. மல்லிகைக்கு முன்னால் சந்தேகத்துக்கு இடமான வகையில் ஒருவனைப் பிடித்தோம். "அமெரிக்காவில் இருக்கும் ஒரு பெண், மல்லிகை இல்லத்தின் முகவரியைக் கேட்டார். அதனால்தான் முகவரியைக் குறிக்க வந்தேன்" அமெரிக்காவில் என்று அந்தப் பையன் சொன்னான். அமெரிக்காவில் இருந்து இந்தத் தகவலைக் கேட்ட பெண்ணின் பெயர் பவானி. அவரது கணவர் பெயர் டேரியல் பீட்டர். இவர், லலித் சந்திரசேகரின் நண்பர். ஸ்ரீபெரும்புதூரில் நடந்த குண்டுவெடிப்பில் பலியானவர்களில் இவரும் ஒருவர்.

எங்களிடம் பிடிபட்டவனின் வீட்டைச் சோதனை செய்தோம். அங்கு ஒரு கடிதம் கிடைத்தது. இந்த லலித் தால்தான் இந்த நிலைமை. இதை கார்த்திகேயனிடம் சொல்ல வேண்டும் என்று அமெரிக்காவில் இருந்த பவானி அந்தக் கடிதத்தில் எழுதி இருந்தார். அதைக் கைப்பற்றினோம். இதற்காகத்தான் பொலிகை முகவரியை அவர் கேட்டிருந்தார்.

எங்கள் அதிகாரிகள் இரண்டு பேர் அப்போது அமெரிக்காவில் தான் இருந்தார்கள். அவர்களிடம் இந்த முகவரியைக் கொடுத்து விசாரிக்கலாம் என்று நாங்கள் எங்களுக்குள் பேசிக்கொண்டோம். உயர் அதிகாரிகள் தகவல் தந்திருப்பார்கள் என்று நினைத்தோம். ஆனால் அமெரிக்காவில் இருந்த அதிகாரிகளுக்கு இந்தத் தகவல் சொல்லப்படவே இல்லை. பிடிபட்ட கடிதம் அடங்கிய அந்தக் கோப்பு, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த பின்னர் தான் என்னிடம் திருப்பித் தரப்பட்டது. ஆனால், அமெரிக்காவில் இருந்து எழுதப்பட்ட அந்தக் கடிதம் கோப் பில் இல்லை. ஏன் அதை மறைத்தார்கள்? இதுபோல பல நபர்களை சி.பி.ஐ. விசாரிக்கவில்லை.

இந்த சந்தேகங்களை நான் தொடர்ந்து எழுப்பி வருகிறேன். ஆனால் சி.பி.ஐ. இதற்கு உரிய பதிலை இதுவரை தரவில்லை. உண்மைகள் உள்ளது உள்ளபடி வெளிவர வேண்டும் என்பதே என் எண்ணம். ராஜீவ் கொலை சதியில் ஈடுபட்ட பெரும் புள்ளிகளின் தொடர்புகள் குறித்து விசாரிப்பதற்காக பல்வேறு உளவு நிறுவனங்களின் நிபுணர்களை உள்ளடக்கிய பல்நோக்கி கண்காணிப்பு ஏஜென்ஸி (எம்.டி.எம்.ஏ) அமைக்கப்பட்டது. இந்த ஏஜென்ஸி யார் யாரைக் குற்றம் சாட்டுகிறதோ அவர்கள்தான் உண்மையான குற்றவாளிகள் அந்த முதலைகளை முதலில் கழுவில் ஏற்றிவிட்டு அதன் பின்னர் சாந்தன்,

**ஜூனியர் விகடன்**

முருகன், பேறிவாளன் ஆகியோருக்கு தண்டனை கொடுப்பது தான் நியாயமாக இருக்கும். எனவே அதுவரை இவர்கள் மீதான தண்டனையை நிறுத்தி வைக்க வேண் டும் என்று நீதிமன்றத்தின் படி ஏறப் போகிறேன் என அதிரடி அஸ்திரம் ஏவினார் மோகன்ராஜ்.

தி.கோபிவிஜய்

## சந்தேகத்தின் பேரில் நடமாடிய ஒருவர் கற்பிட்டியில் கைது

(கொழும்பு)

கற்பிட்டி எத்தாலை பிரதேசத்தில் பொது மக்களை அச்சத்துக்கு உள்ளாக்கும் வகையில் உள்ளாடையுடன் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய சந்தேக நபர் ஒருவரை பிடித்துள்ள பிரதேச வாசிகள் அந்நபரை கற்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த நபர் தனது உடலில் எண்ணெய் பூசியிருந்ததாகவும் அவரைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைப்பதில் பிரதேசவாசிகள் சிரமத்தை எதிர்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட வர் குறித்த பிரதேசத்தில் இடம் பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவரென பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இவரிடமிருந்து 10 ஆயிரத்து 400 ரூபா பணமும் கையடக்கத் தொலைபேசியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபரிடம் தொடர்ந்தும் விசாரணைகளை நட த்தி வரும் பொலிஸார் உரிய விசாரணைகளின் பின்னர் அவரை நீதி மன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

## முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி வீ.ஆர்.ஏ.ஒஸ்வெல்ட் காலமானார்

(கொழும்பு)

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளராக நீண்டகாலம் பணியாற்றி ஓய்வு பெற்றிருந்த திருமதி வீ.ஆர்.ஏ. ஒஸ்வெல்ட் நேற்று முன்தினம் காலமானார். இவருக்கு வயது 61.

வவுனியா வடக்கு வலயக் கல் விப் பணிப்பாளராகவும் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளராகவும் நீண்டகாலம் பணியா ற்றிய திருமதி ஒஸ்வெல்ட் வவு னியா மற்றும் வன்னிப் பிரதேசத்து மாணவர்களின் கல்வி மேம்பாட் டிற்காகத் தனது பதவிக் காலத்தில் அயராது பாடுபட்டிருந்தார்.

மாணவர்களின் கல்வித் தேர்ச்சிக்கும் சிறந்த பரீட்சை பெறுபேறுகளுக்கும் உறுதுணையான செயலட்டை முறையினை அறிமுகப் படுத்தி அவர் செயற்படுத்தி வந்தார்.

இதேவேளை முன்னாள் கல்விப் பணிப்பாளரின் கீழ் மறைவு கல்விப் புலத்துக்கு பேரிழப்பு என வடமாகாண கல்வி அமைச்சின் செய லாளர் எல். இளங்கோவன் வெளியிட்ட இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-5)

# இலங்கை விவகாரத்தால் இந்தியப் பாராளுமன்றில் அமளி

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை மற்றும் அவர்களது மறுவாழ்வு குறித்து இந்திய பாராளுமன்றின் லோக்சபையில் நேற்று முன்தினம் விவாதம் ஆரம்பமானது. விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரை யாற்றுமாறு மதியம் 12.10 அளவில் தி.மு.க பாராளுமன்ற உறுப்பினர் ரி.ஆர். பாலுவை இந்திய பாராளுமன்ற சபாநாயகர் மீரா குமார் பணித்தார்.

பணிப்பை ஏற்று ரி.ஆர். பாலு உரையாற்ற முனைந்த போது எதிர் தரப்பில் அமர்ந்திருந்த ஒரு குழுவினர் விவாதத்தை நடத்த விடாது கூச்சலிட்டு ஊழல் தொடர்பில் வாதம் நடத்த அனுமதி கோரினர்.

எனினும் இலங்கை தமிழர் பிரச்சினை மிகவும் முக்கியமானதென ரி.ஆர்.பாலு, திருமாவளவன் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கோசமிட்டனர்.

இதனையடுத்து சபையில் சற்று சலசலப்பு ஏற்பட்டதை அடுத்து இலங்கை தமிழர் விடயத்தை பின்னர் விவாதிக்கலாம் எனக் கூறி பிரிதொரு விவாதத்தை நடத்த சபாநாயகர் மீரா குமார் அனுமதி அளித்தார்.

எனினும் இலங்கை பிரச்சினை தொடர்பில் கடந்த பாராளுமன்ற அமர்வின் போதும் விவாதிக்க இடமளிக்கப்படவில்லை என ரி.ஆர். பாலு தரப்பில் கூறப்பட்டது.

அதனை செவிமடுத்த சபாநாயகர் இலங்கை தமிழர் பிரச்சினை மிகவும் முக்கியமானதென்பதை தான் உணர்வதாகவும் ஒரு மணித்தியாலத்தின் பின்னர் விவாதம் நடத்தலாம் என்றும் கூறி மறுதரப்பினருக்கு விவாதம் செய்ய அனுமதி அளித்தார்.

எனினும் ரி.ஆர்.பாலு, திருமாவளவன் உள்ளிட்டோர் அதற்கு முழு எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து பாராளுமன்றில் அமளிதுமளி ஏற்பட்டது.

இதனையடுத்து சபாநாயகர் மீரா குமார் சபை நடவடிக்கைகளை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைத்துள்ளார். (ஸ்ரீ-2)

# கிறிஸ்பூதம் பிரச்சினைக்கு உரிய தீர்வுகளை வழங்க அரசு தவறியுள்ளது

## ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

கிறிஸ்பூதம் பிரச்சினைக்கு உரிய தீர்வுகளை வழங்க தவறியுள்ளது என ஜே.வி.பி.கட்சி அறிவித்துள்ளது.

கிறிஸ்பூதம் பிரச்சினை நாட்டு மக்களின் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளதாக ஜே.வி.பி.கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கிறிஸ்பூதம் பதற்றத்திற்கு உரிய தீர்வுகளை வழங்குவதற்கு அரசாங்கம் முனைப்புக் காட்டத் தவறியுள்ளது என அவர் சுட்டிக் காட்டி யுள்ளார்.

கிறிஸ்பூதம் பதற்றத்தினால் நன்மைகளை அடைவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அரசியல் இலாபம் ஈட்டுவதற்கு முயற்சித்த அரசாங்கத்திற்கு இன்று கிறிஸ்பூதம் பிரச்சினை பாரிய தலையிடியாக மாறியுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு ஆரம்பத் தில் எளிய முறையில் தீர்வு வழங்கியிருக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். மக்களின் கவனத்தை திசை திருப்பும் நோக்கில் கிறிஸ்பூதம் பிரசாரங்களை அரசாங்கம் ஆரம்பித்ததாகத் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்பூதம் அச்சத்தில் இருக்கும் மக்களின் வீடுகளுக்கு பேய்கள் சொல்லாமலேயே புகுந்து கொள்ளும் நிலைமையே இன்று நாட்டில் நிலவி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# 15 வயது பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி வெற்றி

15 வயது பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியில் தனுசனின் துல்லியமான பந்து வீச்சின் மூலம் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றுள்ளது.

அகில இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் 15 வயது பிரிவினருக்கான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணியும் யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் கடந்த 22 ஆம் திகதி மோதிக் கொண்டன.

யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய கிளி.ம.வி. அணி 35.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றது.

கிளி.ம.வி. சார்பாக தனுசன் 22 ஓட்டங்களையும் பேபிசன் 22 ஓட்டங்களையும் ரஜீவன் 20 ஓட்டங்களையும் கூடுதலாக பெற்றனர். பந்து வீச்சில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பாக டிலக்சன் 4 விக்கெட்டுக்களையும் சஜின், ஜென்சன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 45.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 125 ஓட்டங்களை மட்டும் பெற்று 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பாக பிரதீபன் 19 ஓட்டங்களையும் விதுசாந் 17 ஓட்டங்களையும் சஜீவன் 12 ஓட்டங்களையும் கோபிரசாந்த் 12 ஓட்டங்களையும் சஜித் 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கிளி.ம.வி. சார்பாக அ.தனுஜன் 9.4 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் மதுசனன், நிதர்சன், பிரகாஷ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இப்போட்டியானது, பிரிவு மூன்றின் முதலாம் சுற்றில் வெற்றி பெற்று தகுதி பெற்ற அணிகளுக்கிடையிலான இரண்டாம் சுற்று விலகல் முறையிலான போட்டியாகும். (ஸ்ரீ-2)

# 2011.08 25 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1580-ஸ்பெயின் அல்கொண்டரா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் போர்த்துக்கலை வென்றது.

★ 1609-இத்தாலிய வானியல் அறிஞர் கலிலியோ கலிலி தனது முதலாவது தொலைநோக்கியை அறிமுகப்படுத்தினார்.

★ 1732-யாழ்ப்பாணத் தளபதியாக கோல்ட்டெரஸ் வூல்ட்டெரஸ் நியமிக்கப்பட்டான்.

★ 1758-பிரஷ்யாவின் இரண்டாம் பிரெடெரிக் மன்னன் சோண்டோர்ஃப் என்ற இடத்தில் ரஷ்ய இராணுவத்தைத் தோற்கடித்தான்.

★ 1768-ஜேம்ஸ் குக் தனது முதலாவது பயணத்தை ஆரம்பித்தான்.

★ 1803-யாழ்ப்பாணம் பனங்காமம் பற்று மன்னன் பண்டாரவன்னியன் விடத்தல் தீவைக் கைப்பற்ற எடுத்த முயற்சி மேஜர் வின்செண்ட் என்பவனால் முறியடிக்கப்பட்டது.

★ 1825-உருகுவே நாடு பிரேசிலிடமிருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1830-பெல்ஜியப் புரட்சி ஆரம்பமானது.

★ 1912-சீனத் தேசியவாதிகளின் குவாமிங்தாங் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

★ 1920-போலந்துக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் ஓகஸ்ட் 13 இல் ஆரம்பித்த போர் செம்படையினரின் தோல்வியுடன் முடிவுக்கு வந்தது.

★ 1933-சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் இடம்பெற்ற பெரும் நிலநடுக்கத்தில் 9 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 1944-இரண்டாம் உலகப் போர் பாரிஸ் நாசி ஜேர்மனியிடம் இருந்து நட்பு நாடுகளால் விடுவிக்கப்பட்டது.

★ 1955-கடைசி சோவியத் படைகள் ஆஸ்திரியாவை விட்டு வெளியேறின.

★ 1981-வொயேஜர் 2 விண்கலம் சனிக்கு மிக அண்மையாகச் சென்றது.

★ 1989-வொயேஜர் 2 விண்கலம் நெப்டியூனுக்குக் கிட்ட வாகச் சென்றது.

★ 1991-சோவியத் ஒன்றியத்தில் இருந்து பெலருஸ் பிரிந்தது.

★ 2003-மும்பையில் இரண்டு கார்க் குண்டு வெடிப்புக்களில் 52 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2007-இந்தியா, ஐதராபாத் நகரில் இரண்டு வெவ்வேறு குண்டு வெடிப்பு நிகழ்வுகளில் 30 பேர் கொல்லப்பட்டு 50 பேருக்கு மேல் காயமடைந்தனர்.

★ 2007-கிறீசில் இடம்பெற்ற காட்டுத் தீயினால் 53 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1906-திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் (இ. 1993)

★ 1929-எஸ். வரலட்சுமி, தமிழ்த் திரைப்பட நடிகை, பாடகி

★ 1962-தஸ்லிமா நசுரீன், வங்காள தேச எழுத்தாளர்

★ 1952-விஜயகாந்த், தமிழ்த் திரைப்பட நடிகர், அரசியல்வாதி

### இறப்புகள்

★ 1822-வில்லியம் ஹேர்ச்செல், வானியலாளர் (பி.1738)

★ 1867-மைக்கேல் பரடே, ஆங்கிலேய அறிவியலாளர் (பி.1791)

★ 1908-ஹென்றி பெக்கெரல், பிரெஞ்சு இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1852)

★ 1976-எல்விண்ட் ஜோன்சன், சுவீடன் நாட்டு எழுத்தாளர் நோபல் பரிசு பெற்றவர் (பி.1900)

★ 2007-தாதி பிரகாஷ்மணி, பிரம்ம குமாரிகள் அமைப்பின் தலைமை ராஜயோகினி


★ 2008-தா. இராமலிங்கம், ஈழத்துக் கவிஞர் (பி. 1933)

★ 2009-எட்வர்ட் கென்னடி, அமெரிக்க செனட்டர் (பி.1932)

### சிறப்பு நாள்


★ உருகுவே- சுதந்திர தினம் (1825)

# நவீன எண் சோதிடம்



## இவர்கள் தாம் சீர்திருத்தவாதியாக வாடிவேண்டும் என எண்ணுவர்

## உடல் எண் 3 உயிர் எண் 8



3,12,21,30 போன்ற தேதியில் பிறந்து, பிறந்த தேதி, மாதம், வருடம் ஆகியவற்றைக் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 8 வருமேயானால் குரு, சனி ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் சுமாரான உயரமுடையவர்களாகவும், மிதந்த கண்களை உடையவராகவும், தைரியசாலியாகவும் காட்சியளிப்பர்.

ஆரம்ப வாழ்க்கையில் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்தபோதும், படிப்படியாகச் சளைக்காமல் போராடி முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்லுவர். பல பொறுப்புக்களைச் சுமந்து கொண்டு வாழும் இவர்கள் நேர்மையாக இருந்தாலும் பழிச்சொல் வரும். கலைஞானம் கொண்ட இவர்கள் தனது தனித்திறமையாலும், கைத்தொழிலாலும், இரும்பு சம்பந்தப்பட்ட தொழிலாலும், வாகனங்களாலும் முன்னேற்றம் அடைவர்; சில நேரங்களில் இவர்களது தொழில் ஸ்தம்பித்துப் போய்விடும். ஆனால் பெயர் நன்றாக அமைந்துவிட்டால் வளர்ச்சி தொடரும்.

உத்தியோகத்திலிருக்கும் சிலர் பிறந்த தேதிக்குப் பொருத்தமான பெயரை அமைத்துக் கொண்டால் உத்தியோக உயர்வும், நல்ல முன்னேற்றமும் கிடைக்கும். உத்தியோகத்திலிருக்கும் இவர்களுக்கு வருமானம் போதவில்லை என்பதால் வேறு ஏதாவது தொழிலில் ஈடுபடலாம் என்று எண்ணிக் கொண்டிருப்பர். பெயர் சரியானபடி அமைந்திருக்குமேயானால் தொழில் வெற்றி பெறுவது உறுதி.

எல்லா உலக விடயங்களையும் தெரிந்திருக்கும் இவர்கள், எப்பொழும் சுறுசுறுப்பாக காட்சியளிப்பர். ஆனால் ஓய்வெடுக்க வேண்டுமென்று நினைத்தால் சோம்பேறியாகி விடுவர். சிலர் தொழிற்கல்வியால் உயர்வாகவும் இன்னும் சிலர் கற்பனா சக்தியால், எழுத்தின் மூலம் உயர்வும் பெறுகின்றனர். பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் கோர்ட்டு வழக்குகளும் உடலில் பெரும் வியாதிகளும் வந்து விடும். சில நேரங்களில் இவர்கள் எதையோ இழந்தது போன்று காட்சியளிப்பர். தியான மனநிலை கொண்ட இவர்கள் திடீரென்று தன்னம்பிக்கையை இழப்பர். பிறரை எளிதில் நம்பாத இவர்கள் எதிலும் முன்ஜாக்கிரதையாகவே இருப்பர்.

பணச்செலவு செய்வதில் சிக்கனமாக இருக்கும் இவர்களுக்கு விரையச் செலவுகள் வரும். இதனால் இதைத் தடுப்பதற்கு தெய்வீக வழிபாடுகளைக் கடைப்பிடிப்பர். பூ..டிய பூட்டை மூன்று முறை இழுத்துப்பார்க்கும் குணம் படைத்த இ..ர்கள், தான் ஒரு சீர் திருத்தவாதியாக வாழவேண்டும் என்று எண்ணுவர். இவர்கள் தனது பெயரை பிறந்த தேதிக்கு பொருத்தமாக அமைத்துக் கொண்டால் சிறப்பாக வாழலாம்.

**தொழில்**

இவர்களுக்கு உலோகம் சம்பந்தமான தொழில்கள் அனைத்தும் நன்மைதரும். என்சினியரிங், மோட்டார் வாகனம், இரும்பால் எழுத்தாலான தொழில்கள், கான்ட்ராகட் கமிஷன் போன்றவற்றால் இலாபமடைவர்.

**நோய்**

இந்த எண்ணிக்கைக் காரர்களுக்கு மூட்டுவலி, வயிற்றுவலி, நீர் சம்பந்தமான வியாதிகள் வாயுக் கோளாறுகள் வந்து நீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை**

இவர்களுக்கு குரு ஆதிக்கமான 21,39 போன்ற எண்களிலும் புதன் ஆதிக்கமான 14,23,32,41,50 போன்ற எண்களிலும் சூரிய ஆதிக்கமான 19,37,46,64 போன்ற

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

எண்களிலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்-3,5

யோகமான தேதிகள்-3,12,21,30; 5,14,23;1,10,19

யோகமான நிறம்-ரோஸ், ஒரோஞ், கத்திரிப்பூ நீலம், மஞ்சள்

யோகமான மோதிரக்கல்-எமிதிஸ்டு, நீலக்கல்

ஆகாத நிறம்-கறுப்பு, சிவப்பு, பச்சை

ஆகாத தேதிகள்-6,15,24; 8,17,26


## 28 பெயர் எண்களின் பலன்

**90 எண் பலன்**

9 என்ற வெசவ்வாய் பலன் முழுமையாக இருப்பதால் தைரியம், நிதானம், சிந்தனை தெளிவாக இருக்கும். எக்காரியத்தில் ஈடுபட்டாலும் தைரியமாகச் செயற்பட்டு வெற்றி பெறுவர். எதிலும் துணிந்து இறங்கி, தொடர்ந்த பயணங்களை செய்து வெற்றி பெற்றும் வாழ்வர். ஆனால், 2,11,20,29; 7,16,25 போன்ற தேதிகளில் பிறந்தவர்கள் இந்த எண்ணைப் பெயரில் அமைத்துக் கொண்டால் வாழ்க்கை மோசமாகி விடும்.

**91 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராகக் கொண்டவர்கள் தான் போடுகின்ற திட்டத்தை எவ்வழியிலாவது சாதித்து விடுவர். அடிக்கடி தன் குடும்பத்தை விட்டு பிரிய நேரும். தூரதேசப் பயணங்களை மேற்கொள்வதிலும் தன் நாட்டிலிருக்கும் பொருட்களைப் பிற நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதிலும் இறக்குமதி செய்வதிலும் பணம் சம்பாதிப்பர். அவ்வாறு இல்லா விட்டால் ஓர் ஊரிலிருக்கும் பொருளைப் பிற ஊருக்கு



அனுப்புவதன் மூலம் முன்னேறுவர்.

**92 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராகக் கொண்டவர்கள் பல்வேறு வழிகளில் லாபத்தைப் பெற்ற பொழுதிலும் உடல் ஆரோக்கியக் குறைவால்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

வருந்துவர். குடும்ப வாழ்க்கையிலும் சிலசிக்கல் ஏற்படும். பொதுவாக இந்த எண்ணைப் பெயரில் அமைத்துக் கொள்பவர்கள் அடிக்கடி மயக்க முறுவர். ஆஸ்துமா போன்ற வியாதிகள் இவர்களுக்கு வரலாம். இதனால் இந்த எண் வெறுக்கத்தக்கதே.

**93 எண் பலன்**

செவ்வாய் என்ற 9 உம் குரு என்ற மூன்றும் சேர்ந்து 93 என்று வருவதால், இவர்களுக்கு கற்பனைச்சக்தி மிகும். யாரும் சாதிக்க முடியாத காரியங்களை சாதிக்கும் வல்லமை உடையவர்களாக மாறுவர். மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பார்க்கும் இவர்கள் சீர்திருத்தும் நோக்கத்தோடு நாடகங்களாகவும் கதைகளாகவும் கதாகாலட்சேபங்களாகவும் சினிமாவாகவும் எடுத்துக்காட்டுவர். இவர்களுக்கு பல்வேறு தொழில்களில் லாபம்வரும். ஆனால், 6,15,24 போன்ற தேதியில் பிறந்தவர்களுக்கு நன்மையைத் தராது.

**94 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயரில் உடையவர்கள் நாலும் தெரிந்தவர்கள் என்று அழைக்கப்படுவூர். எத்துறையை எடுத்தாலும் அத்துறையில் இவர்களுக்கு ஓரளவு அறிவு உண்டு. சம்பாத்தியத்தில் ஊக்கம் இராது. வாழ்வும், தாழ்வும் மாறிமாறி வரும். தன்னைச்சார்ந்த சமுதாயத்தை உருவாக்கிக் கொள்வர்.

**95 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராக உடையவர்கள், பெரும் சிக்லில் மாட்டிக் கொண்டு அதிலிருந்து தப்பிக்க முடியாது என்று பிறர் எண்ணுகின்ற நேரத்தல் அதிலிருந்து மீண்டு, மற்றவர்கள் பிரம்மிக்கும் படியான செயல்களைச் செய்தும் வெளிநாட்டுப் பொருட்கள் விற்பதாலும் பிறரை மகிழ்விக்கும் கலைகளைச் செய்வதாலும் பொருளீட்டுவர்.

(தொடரும்)

## ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலியகொட தொடர்பில் விரைவான விசாரணை

### நீதிமன்றம் உத்தரவு

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலியகொட காணாமல் போயுள்ளதாக கூறப்படும் சம்பவம் குறித்து மிக விரைவாக விசாரணை நடத்துமாறும் விசாரணை முடிவடைந்த பின்னர் அது சம்பந்தமான சகல ஆவணங்களையும் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் ஹோமாகம நீதிவான் நீதிமன்றத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்தவருடம் ஜனவரி மாதம் 24 ஆம் திகதி காணாமல் போன தனது கணவரை கண்டுபிடித்து அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிடுமாறு கோரி பிரகீத்தின் மனைவி சந்தியா எக்னெலியகொட மற்றும் அவரது இரண்டு பிள்ளைகள் இணைந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்தனர்.

இதனை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் ஹோமாகம நீதிவான் நீதிமன்றத்திற்கு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. இந்த காணாமல் போன சம்பவம் குறித்த தகவல்கள் மற்றும் ஆவணங்கள் இருக்குமாயின் அதனை உடனடியாக ஹோமாகம நீதிவான் நீதிமன்றத்திற்கு வழங்குமாறு மனுதாரர் மற்றும் பொலிஸாருக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வழக்கு விசாரணைகளை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதியரசர்கள் இந்த காலப் பகுதிக்குள் விசாரணையை நடத்தி முடிக்க முடியாது போனால் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் மேலும் கால அவகாசம் கோரலாம் எனவும் நீதியரசர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## குழப்பநிலையை கட்டுப்படுத்த எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள்

இனந்தெரியாத சந்தேகத்திற்கிடமானவர்களை கட்டுப்படுத்துமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குழுவினரை யாழ்ப்பாணத்தில் கைது செய்தமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் கருத்து வெளியிட்டுள்ளார்.

யாழ்.நாவாந்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது சந்தேகத்திற்கிடமான நபர்கள் தொடர்பான விடயத்தை பொலிஸார் கட்டுப்படுத்த முடியாமையால் பொலிஸ் வாகனம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புத் தரப்பினர் பொதுமக்கள் சிலர் தம்மீது தாக்குதல் நடத்தியதாக குற்றஞ் சுமத்துகின்ற நிலையில் பொதுமக்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

சந்தேகத்திற்கிடமான நபர்களுக்கு எதிராக பொலிஸாரினால் நடவடிக்கை எடுக்க முடியாமை காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எனவே யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் கவனம் செலுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்துவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## அம்பாந்தோட்டை துறைமுகத்திலுள்ள பாரிய கற்பாறையை அகற்ற சீனா கடனுதவி

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நுழைவுப் பகுதியில் தடையாக காணப்படும் பாறையினை அகற்ற சீனாவிடம் இலங்கை துறைமுக அதிகார சபை கடனுதவி கேட்டுள்ளது.

1.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்ட புதிய அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நுழைவுப் பகுதியில் தடையாக காணப்படும் பாரிய பாறையினை அகற்ற துறைமுக அதிகார சபை சீனாவிடம் 40 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனுதவி கேட்டுள்ளது.

துறைமுகத்தில் வருடாந்தம் 2 ஆயிரத்து 500 கப்பல்கள் நங்கூரமிடும் என்ற குறிக்கோளுடன் 2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் துறைமுகம் திறந்து வைக்கப்பட்டது.

ஆனால் குறித்த துறைமுகத்தில் பாரிய கப்பல்களை நிறுத்த முடியாது எனவும் பாறையொன்று துறைமுக நுழைவுப் பகுதியில் தடையாக இருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில் துறைமுக பணிகள் ஆரம்பிப்பதற்கு முன்பே பாறை கண்டறியப்பட்டதாகவும் அதனை தகர்க்க 40 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சீனாவிடம் கோரப்பட்டுள்ளதாகவும் இலங்கை துறைமுக அதிகார சபை தலைவர் பிரியாத் விக்ரம தெரிவித்துள்ளார்.

மேலும் அனைத்து கப்பல்களையும் ஒரே நேரத்தில் துறைமுகத்திற்கு அழைக்க முடியாது எனவும் வர்த்தக வாய்ப்புகளை சரிவர ஆய்வு செய்ய சிறிது காலம் தேவை எனவும் குறிப்பிட்ட அவர்,

இரண்டாம் கட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதேவேளை களஞ்சியப்படுத்தல் வசதிகளையும் அதிகரிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

நான்கு மாத திட்டத்தின் படி எதிர்வரும் மாதம் எரிபொருள் களஞ்சிய சேவைகள் ஆரம்பிக்கப்படும் என நம்பப்படுகிறது என தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## மியன்மார் கடற்பரப்பில் நிர்க்கதியான ஆறு இலங்கை மீனவர்கள் மீட்பு

மியன்மார் கடற்பரப்பில் நிர்க்கதிக்குள்ளாகியிருந்த ஆறு இலங்கை மீனவர்கள் அந்த நாட்டு கடற்படையினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேருவளை பகுதியில் இருந்த கடற்றொழிலுக்காக சென்றிருந்தவர்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் பயணித்த படகு செயலிழந்திருந்ததன் காரணமாகவே சில நாட்கள் அவர்கள் கடலில் நிர்க்கதிக்குள்ளாகியிருந்ததாக அந்நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

தற்போது மீட்கப்பட்ட குறித்த மீனவர்கள் தற்காலிக முகாமொன்றில் தங்கியுள்ளதாக மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் எச்.ஆர்.பியசிறி தெரிவித்தார்.

இந்த மீனவர்கள் எவ்வித பிரச்சினைகளும் இன்றி விரைவில் விடுவிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-4)

## அரசாங்க ஔடதக் கொள்கையினை தயாரிக்கும் நடவடிக்கை 90 வீதம்பூர்த்தி

அரச ஔடதக் கொள்கையினை தயாரிக்கும் நடவடிக்கைகள் 90 வீதம் நிறைவு பெற்றுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கான பாராளுமன்ற அனுமதியினை பெற்றுக் கொள்ளும் வகையில் இந்தக் கொள்கையினை எதிர்வரும் நான்கு மாதங்களில் சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நாட்டிற்கு தேவையான மருந்து வகைகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யும் வகையில் இந்த ஔடதக் கொள்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் 52 வகையான மருந்துகள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்த தொகையினை 100 வரை அதிகரிப்பதே அமைச்சரின் நோக்கம் எனவும் சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது. (ஸ்ரீ-2)

## ஆயுதமின்றி செல்வது ஆபத்தான நிலைமையை உருவாக்கும்

### பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆயுதங்களை எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை பாதக நிலைமையை ஏற்படுத்தக்கூடியது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆயுதங்கள் இன்றி குற்றவாளிகளை கைது செய்யச் சொல்லும் போது பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடுவதாக குறிப்பிட்டுள்ளனர்.

குற்றவாளிகளை கைது செய்யச் சொல்லும் போது மற்றும் ஏனைய பணிகளுக்குச் செல்லும் போது ஆயுதங்களை எடுத்துச் செல்லக்கூடாது என முன்னாள் பொலிஸ் மா அதிபர் பதவி வகித்த காலத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த உத்தரவின் காரணமாக கலகக்காரர்கள் மற்றும் குற்றவாளிகள் சட்டத்தை கையில் எடுத்துக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு வரகாபொல பிரதேசத்தில் நிராயுபாணியாக சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது கொள்ளைக்கூட்டத்தினர் நடத்திய தாக்குதல்களில் ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்டனர்.

அண்மையில் புத்தளம் பிரதேசத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கடுமையான தாக்குதலுககு இலக்காகி கொல்லப்பட்டார்.

இவ்வாறான ஓர் சூழ்நிலையில் கலகக்காரர்கள் மற்றும் குற்றவாளிகள் கைது செய்யும் போது ஆயுதமின்றி ஆபத்தான நிலையை உருவாக்கும் என குறிப்பிட்டுள்ளனர்.

கடமைகளுக்காக செல்லும் போது பொலிஸ் ஆயுதங்களை எடுத்துச் செல்லக்கூடிய வகையில் மீண்டும் சட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்படவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## மக்களை அடகுவைத்து விமானங்களை கொள்வனவு செய்ய அரசு தயாராகிறது

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

மக்களை அடகு வைத்து 14 ஹெலிகொப்டர்களை கொள்வனவு செய்ய அரசாங்கம் தயாராகி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே திஸ்ஸ அத்தநாயக்க இந்தக் கருத்தினை கூறினார்.

மக்கள் நிவாரணம் கோரும் இந்த சந்தர்ப்பத்தில் ரஷ்ய ஆயுத விற்பனை நிறுவனமான ரோஸ்போன் நிறுவனத்திடமிருந்து எம்.ஐ.171 ரக 14 ஹெலிகொப்டர்களை ஒரே தடவையில் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு நாடு பொருளாதார கடன்களை பெற்றுள்ள நிலையில் கடன் அடிப்படையில் மேலும் 14 ஹெலிகொப்டர்களை கொள்வனவு செய்ய முயற்சிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

மக்களை அடகு வைத்து அரசாங்க தலைவர்களின் பயணங்களை சொகுசுப்படுத்தவே இந்த கொள்வனவு செய்யப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டுகின்றது என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாநகர சபைக்கான வேட்பு மனு தொடர்பிலும் பொதுச் செயலாளர் இதன் போது கருத்து வெளியிட்டார்.

கொழும்பு மாநகர சபைக்கான வேட்பு மனுவை இன்று வியாழக்கிழமை எண்ணியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு மாவட்டத்திலுள்ள ஐந்து தேர்தல் தொகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பாளர்களின் கருத்துக்களை பெற்று ஏகமனதாக தீர்மானத்தின் அடிப்படையில் வேட்பு மனுவை தாக்கல் செய்ய எண்ணியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபைக்கான வேட்பு மனுவை தனது பொறுப்பில் வைத்திருக்க தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்ட திஸ்ஸ அத்தநாயக்க இல்லாவிடின் ரிபெக்ஸ் இட்டு அதனை மாற்றிவிடுவார்கள் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார். (ஸ்ரீ-2)

## நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறைவு; நீர் மின் உற்பத்திக்குப் பாதிப்பு

(கொழும்பு)

மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் குறைவடைந்துள்ளதன் காரணமாக நீர் மின் உற்பத்திக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சாரசபை குறிப்படுகின்றது.

மொத்த மின் தேவையினை விடவும் 10 வீதம் குறைவாகவே தற்போது நீர் மின் உற்பத்தி செய்யப்படுவதாக சபையின் தலைவர் கலாநிதி விமலதர்ம அபேவிக்கிரம் தெரிவித்தார்.

மொத்த உற்பத்தியில் 40 வீதமானது நீர் மின் உற்பத்தி மூலமாகவே மேற்கொள்ளப்படுகின்றது.

எவ்வாறாயினும் தற்போது விக்டோரியா காசல ரீ உட்பட நீர் மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் குறைவடைந்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக அனல் மின் சக்தி மற்றும் ஏனைய முறைகள் ஊடாகவே மின் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

மின் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படும் பட்சத்தில் மின் தடையை அமுல்படுத்துவதற்கான சாத்தியங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சார சபை குறிப்பிடுகின்றது. (ஸ்ரீ-2)

# கடாபியின் மகன் ஆதரவாளர்களிடையே தோன்றியதால் பெரும் பரபரப்பு

லிபிய தலைநகர் டிரிபோலியின் பெரும்பான்மைப் பகுதிகள் எதிர்ப்பாளர்கள் வசம் வந்து விட்ட நிலையில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள ரிக்சாஸ் விடுதிக்கு வெளியிலும் கடாபியின் குடியிருப்பான பாப் அல் அஜீசியா வளாகத்திலும் நேற்று முன்தினம் கடாபி இராணுவம் மற்றும் எதிர்ப்பாளர்களுக்கு இடையில் கடும் சண்டை நடந்தது.

இந்நிலையில் எதிர்ப்பாளர்களால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட கடாபியின் மகன் சயீப் அல் இஸ்லாம் நேற்று முன்தினம் தனது ஆதரவாளர்களிடையே தோன்றி பரபரப்பைக் கிளப்பினார்.

டிரிபோலியின் பெரும்பான்மையான பகுதிகளை தாங்கள் வசப்படுத்திவிட்டதாகவும் கடாபியின் மகன்கள் சயீப் அல் இஸ்லாம், அல் சாடி மற்றும் முகமது ஆகிய மூவரைக் கைது செய்துள்ளதாகவும் எதிர்ப்பாளர்கள் தெரிவித்தனர்.

சயீப் அல் இஸ்லாம் கைது செய்யப்பட்டதை நெதர்லாந்தின் ஹாக் நகரில் இயங்கி வரும் சர்வதேசகுற்றவியல் நீதிமன்றம் உறுதி செய்ததாக தகவல்கள் வெளியாகின. தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

எதிர்ப்பாளர்களின் முதுகெலும்புகளை முறிப்போம். டிரிபோலி இன்னும் அரசின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது என்றார். கைது செய்யப்பட்டதாக கூறப்பட்ட அவர் தப்பித்து வெளியேறிய சம்பவம் கடாபி இராணுவம் மத்தியில் பெரும் உற்சாகத்தை அளித்தது.

இதனால் ரிக்சாஸ் விடுதியின் வெளிப்புறம் மற்றும் பாப் அல் அஜீசியா வளாகம் ஆகிய இரு இடங்களில் எதிர்ப்பாளர்கள் மீது கடாபி இராணுவம் கடும் தாக்குதல்களை தொடுத்தது.

சில கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கிரீன் சதுக்கத்தில் திரண்டிருந்த எதிர்ப்பாளர்கள் மீது அஜீசியா வளாகத்தில் இருந்து இராணுவம் சிறு ரக ஏவுகணைகளை வீசித் தாக்கியது. இதையடுத்து டிரிபோலியில் மீண்டும் இரு தரப்பிலான போர் ஆரம்பித்தது.

இதற்கிடையில் கடாபி இருக்கும் இடத்தைக் கண்டறிவதற்காக நேட்டோ தனது உளவு விமானங்களை ஈடுபடுத்தியுள்ளது. லிபியாவில் நிலவரம் இயல்புக்குத் திரும்பும் வரை தனது ஆதரவு தொடரும் எனவும் தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராணுவ மையம், பென்டகன் கடாபி இன்னும் டிரிபோலியில் தான் உள்ளார் எனக் கூறியுள்ளது. சயீப் அல் இஸ்லாம் கைது செய்யப்பட்டதாக தங்களுக்கு தகவல் எதுவும் கிடைக்கவில்லை என சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

லிபியாவின் தேசிய இடைக்கால கவுன்சில் தலைவர் முஸ்தபா முகமது ஜலீல் கடந்த 22 ஆம் திகதி எதிர்ப்பாளர்கள் டிரிபோலியைக் கைப்பற்றிய உடன் அளித்த பேட்டியில்,

கடாபியின் ஆட்சி முடிந்து விட்டதாகத் தெரிவித்தார். ஆனால் டிரிபோலியில் தொடர்ந்து நடந்து வரும் சண்டை எதிர்ப்பாளர்களின் வெற்றியைக் கேள்விக் குறியாக்கியுள்ளது என்றார். (ஸ்ரீ-4)

## நீர்மூழ்கி கப்பலிலிருந்து தாக்கும் நவீன ஏவுகணை

### ஈரான் வெற்றிகரமாக சோதனை

கடலுக்குள் மூழ்கி கப்பலில் இருந்து கொண்டு ஒரு இலக்கிலிருந்து மற்றொரு இலக்கை தாக்கும் நவீன ஏவுகணையினை ஈரான் நேற்று முன்தினம் வெற்றிகரமாக சோதித்து பார்த்தது. ஈரான் தனது அணு ஆயுத திட்டத்தை இரகசியமாக செய்து வருவதாக அமெரிக்கா குற்றம் சாட்டி வருகின்றது.மேலும் ஈரான் யுரேனியம் செறிவூட்டும் மையத்தினை. மேலும் வலுப்படுத்தி வருவதாகவும் கூறிவருகின்றது.

இந்தநிலையில் ஈரான் தனது காதிர் எனப்படும் நவீன ஏவுகணையினை இராணுவ அமைச்சகத்தின் ஏற்பாட்டின் பேரில் பாரசிக வளைகுடாபகுதியில் வைத்து வெற்றிகரமாக சோதனையிட்டது. கடலிலிருந்து சுமார் 200 கி.மீ. தூரத்தில் உள்ள இலக்கை துல்லியமாக தாக்கும் திறன் கொண்டதாக. இந்த காதிர் ஏவுகணை இருக்கும் என அந்நாட்டு ஏவுகணையை தயாரித்த விஞ்ஞானிகள் கருத்து தெரிவித்தனர். (ஸ்ரீ-4)

# சிரியாவில் சர்வதேச விசாரணை நடத்துவதற்கு ஐ.நா.மனித உரிமைகள் அமைப்பு முடிவு

சிரியாவில் தொடர்ந்து மக்கள் மீது அரசு நிகழ்த்தும் வன்முறையைக் கண்டித்துள்ள ஐ.நா.மனித உரிமைகள் அமைப்பு, போராட்டங்களின் போது நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க சிரியாவுக்கு சர்வதேச குழு ஒன்றை அனுப்பத் தீர்மானித்துள்ளது.

சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் தலைமையகத்தில் அந்த அமைப்பின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தலைமையில் நேற்று முன்தின்ம் உறுப்பு நாடுகள் அவசரமாக கூடி சிரிய நிலவரம் குறித்து விவாதித்ததன.


அதன் பின்சிரியா மீது கண்டனத்தீர்மானம் கொண்டு வரப்பட்டது. 33 வாக்குகள் தீர்மானத்திற்கு ஆதரவாகவும் சீனா, ரஷ்யா, ஈக்வடார் மற்றும் கியூபா நாடுகள் எதிர்த்தும் வாக்களித்தன.

ஒன்பது நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. அரபுலகின் முக்கிய நாடுகளான சவுதி அரேபியா, கட்டார், ஜோர்தான், குவைத் ஆகிய நாடுகளின் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தன.

இத் தீர்மானத்தில் திட்டமிட்ட மனித உரிமை மீறல்களான விசாரணை செய்யாமல் தண்டனை அளிப்பது, அதிகளவில் இராணுவத்தைப் பயன்படுத்தல், மக்களையும் மனித உரிமை ஆர்வலர்களையும் கொல்லுதல், பலரைக் காணாமல் போகச் செய்தல், கைதானவர்களைக் கடுமையான முறையில் நடத்துதல்,குழந்தைகள் உட்பட அனைவரையும் சித்திரவதை செய்தல் ஆகியவற்றை கண்டிக்கின்றோம். உடனடியாக மக்களுக்கு எதிரான வன்முறைகளை சிரியகைவிட வேண்டும். இவ்வாறு தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டது. சிரிய விவகாரத்தில் பிற நாடுகள் தலையிட வேண்டிய அவசியம் இல்லை. அது நிலைமையை மேலும் சிக்கலாக்கும் என சீனாவும் ரஷ்யாவும் கடுமையாக எதிர்த்ததால் தீர்மானத்தின் கடுமையான பகுதிகள் மாற்றத்துக்குள்ளாயின.

சிரியாவில் நடந்து வரும் போராட்டத்தில் அரசால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க உடனடியாக ஒரு சர்வ தேச குழுவை சிரியாவுக்கு அனுப்புவதாக மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதற்கிடையில் சிரியாவின் பல்வேறு பகுதிகளில் நடந்து வரும் ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றுள்ள மக்கள் லிபியா எதிர்ப்பாளர்கள் வசம் வந்து விட்டதால் உற்சாகம் அடைந்துள்ளனர். கடாபி போய்விட்டார். அடுத்து நீங்கள் தான் பஷர் என்று கோசம் எழுப்புகின்றனர். (ஸ்ரீ-4)



ஜப்பானில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோய்பிடன் (இடது) தலைநகர் டோக்கியோவில் பிரதமர் நவோட்டோகானை சந்திப்பதை படத்தில் காணலாம்.




# மக்களிடம் செல்வாக்கை இழந்ததால் ஜப்பான் பிரதமர் பதவி விலகுகிறார்


ஜப்பான் பிரதமர் நவோட்டோகான் இம்மாதம் 30 ஆம் திகதி பதவி விலகுகின்றார். அவரையடுத்து யார் அந்தப் பதவிக்கு வருவது என அவரது கட்சியில் கடும் போட்டி நிலவுகின்றது.

ஜப்பானின் ஜனநாயகக் கட்சி சார்பில் நவோட்டோகான் பிரதமராகப் பதவியேற்றார். ஆனால் கடந்த மார்ச் மாதம் 11 ஆம் திகதி நிகழ்ந்த நிலநடுக்கம் மற்றும் சுனாமி, புகுஷிமா அணுக்கதிர்வீச்சு கசிவு போன்ற இயற்கைப் பேரிடர்களின் போது அவரது அரசு சரியாகச் செயற்படவில்லை என மக்களிடையே நடந்த கருத்துக் கணிப்பில் தெரியவந்தது.

இதையடுத்து கான் பதவி விலகக் கோரி கட்சியில் நெருக்கடி அதிகரித்தது.கடந்த ஜூலை மாதம் இது குறித்து அறிக்கைவிடுத்த கான் விரைவில் தான் பதவி விலகப் போவதாகத் தெரிவித்தார். இதன்படி நேற்று முன்தினம் ஜப்பான் பாராளுமன்றில் உரையாற்றிய அவர்,

இன்னும் இரு முக்கியமான மசோதாக்கள் நிறைவேறும் வரை தான் பதவியில் நீடிப்பதாகவும் இம்மாதம் 30 ஆம் திகதிக்குள் தனது பதவியை இராஜினாமா செய்து விடுவதாகவும் உறுதியாகத் தெரிவித்தார். அவரையடுத்து பிரதமராக்குவதற்கு ஜனநாயக கட்சியில் ஐந்து முக்கிய பிரமுகர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் ஒருவர் அடுத்த வாரம் கட்சியால் பிரதமராகத் தெரிவு செய்யப்படுவார் எனத் தெரிகிறது. (ஸ்ரீ-4)

# உயிர் பிரியும்வரை போராட்டம்; முவம்மர் கடாபி அறிவிப்பு



உயிர் பிரியும் வரையில் போராட்டத்தை தொடரப்போவ தாக லிபிய ஜனாதிபதி முவம்மர் கடாபி அறிவித்துள்ளார்.

பாப் அல் அஸீஸியா மாளிகையை விட்டு வெளியேறியமை ஓர் தந்திரோபாய நகர்வாக கருதப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ள்ார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றி லேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடாபியின் குரல் மட்டும் பதிவு செய்யப்பட்டு ஒளிபரப்புச் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை லிபிய ஜனாதிபதி கடாபியின் மிக முக்கியமான மாளிகையை கிளர்ச்சியாளர்கள் முற்றுகையிட்டுள்ளனர்.

கடாபியின் முக்கிய பொருட்கள் பலவற்றையும் கிளர்ச்சியாளர்கள் மீட்டுள்ளனர்.

கடாபி ஏற்கனவே தோல்வியைத் தழுவியுள்ளதாகவும் கடாபி மற்றும் உறவினர்கள் கைது செய்யப்படும் வரையில் மெய்யான கொண்டாட்டங்கள் நடத்தப்படமாட்டாது எனவும் கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

எனினும் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போராட்டம் நிறுத்தப்பட மாட்டாது எனவும் சரணடையப் போவதில்லை எனவும் கடாபி அறிவித்துள்ளார்.

இதேவேளை கடாபியின் குடும்பத்தினர் துனிசியாவுக்கு தப்பிச் சென்றுள்ளதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)




லிபியாவின் டிரிபோலி நகரில் உள்ள கடாபியின் வீட்டு வளாகம் அருகே எதிர்ப்பு படையினர் வீசிய குண்டு வெடித்ததைப் படத்தில் காணலாம்

# ஊழலை ஒழிப்பதில் மத்திய அரசுக்கு இம்மியளவும் அக்கறை இல்லை

## ஹசாரே ஆவேசம்

(புதுடில்லி)

ஊழலை ஒழிப்பதில் இன்றும் கூட மத்திய அரசுக்கு இம்மியளவும் அக்கறையில்லை என அன்னா ஹசாரே ஆவேசமாக தெரிவித்தார். வலிமையான லோக்பால் மசோ தாவை நாடாளுமன்றில் நடப்பு கூட்டத் தொடரிலேயே தாக்கல் செய்யக்கோரி கடந்த 9 நாட்களாக காந்திய வாதி அன்னா ஹசாரே உண்ணாவிரதம் இருந்து வருகிறார். அவருக்கு ஆதரவாக தமிழ்நாடு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உண்ணா விரதப்போராட்டங்கள் நடந்து வருகின்றன. 9 நாட்களாக தொடரும் உண்ணாவிரதத்தால் அன்னாவின் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளது.


இந்நிலையில் நேற்று மக்கள் முன் பேசிய அன்னா ஹசாரே நாட்டின் ஊழலில் மத்திய அரசு எவ்வித அக்கறையும் காட்டாமல் உள்ளதாக குற்றம்சாட்டினார். மத்திய அரசுடனான தங்கள் குழுவின் பேச்சுவார்த்தையில் 3 முக்கிய விடயங்களில் உடன்பாடு ஏற்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

அவை

✱ அரசின் அனைத்து மட்டங்களிலும் உள்ள அதிகாரிகளை லோக்பால் வரம்புக்குள் கொண்டுவருவது

✱ ஒவ்வொரு மாநிலங்களிலும் லோக்பால் வரம்புக்குட்பட்ட லோக் ஆயுக்தா அமைப்பை ஏற்படுத்தல்

✱ உயர் மட்டத்தில் இருப்பவர்களின் தொலைபேசிகளில் ஒட்டுக்கேட்கும் அதிகாரம், தவறு செய்யும் அரசு ஊழியர்களை பதவி நீக்கும் அதிகாரம்.



இந்தக் கோரிக்கைகளை மத்திய அரசு நிறைவேற்றும் வரை தனது உண்ணாவிரதம் தொடரும் என்று அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## 2ஜி வழக்கில் பிரதமரை சாட்சியாக அழைக்க வேண்டும்

### ராசா வலியுறுத்தல்

2ஜி வழக்கு விசாரணையில் ஒரு சாட்சியாக நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அழைப்பாணை அனுப்ப வேண்டும் என்று முன்னாள் தொலைத் தொடர்பு அமைச்சர் ஆ.ராசா சி.பி.ஐ நீதிமன்றத்தில் தெரிவித்தார். 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு வழக்கில் ஆ.ராசா கைது செய்யப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கை உச்சநீதிமன்றத்தின் நேரடி கண்காணிப்பின் பேரில் சி.பி.ஐ விசாரித்து வருகிறது.

இந்த வழக்கில் டில்லி சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது. பிரதமர், அப்போதைய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் மற்றும் தற்போதைய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் கபில் சிபல் ஆகியோரை 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் இழப்பு ஏற்படவில்லை என்பதை நிரூபிப்பதற்காக சாட்சியாக அழைக்க வேண்டும் என நீதிமன்றத்தில் ராசா வாதாடினார். இது தொடர்பாக வழக்கறிஞர் இல்லாமல் தானே நேரிடையாக ராசா வாதாடினார். நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் வாதாடிய கனிமொழியின் வழக்கறிஞரும் ராசா தெரிவித்த கருத்துக்களையே வலியுறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

## பாரதச் செய்திகள்






உறுதியான லோக்பால் மசோதாவை நிறைவேற்ற வலியுறுத்தி வலது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ராஜா மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சீதோராம்யெச்சூரி உட்பட பல்வேறு கட்சித் தலைவர்கள் பாராளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம்.

## ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை விவகாரம்;

# மன்மோகன்சிங், சிதம்பரம், ராசா மீது கனிமொழி குற்றச்சாட்டு

2ஜி அலைக்கற்றை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி நேற்று முன்தினம் பரபரப்பு குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்.

அலைக்கற்றை உரிமங்களின் விற்பனையை ஏலம் விடுவதில்லை என அப்போதைய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் ராசாவோடு சேர்ந்து பிரதமர் மன்மோகன் சிங்கும் அப்போதைய நிதியமைச்சர் ப.சிதம்பரமும்தான் முடிவெடுத்தனர் என அவர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.



தனது வழக்கறிஞர் ஊடாக கனிமெழி முன்வைத்துள்ள குற்றச்சாட்டினால் டில்லி வட்டாரங்கள் பெரும் அதிர்ச்சியும் பரபரப்பும் அடைந்துள்ளன. தனது வாதத்திற்கு ஆதாரமாக பிரதமர் சிதம்பரம் மற்றும் ராசா ஆகியோர் பங்கேற்ற கூட்ட அறிக்கையையும் அவர் சமர்ப்பித்துள்ளதால் பிரதமர் மன்மோகன்சிங் பெருத்த நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் இடம் பெற்று வரும் இந்த வழக்கு விசாரணையில் நேற்று முன்தினம் கனிமொழி சார்பில் ஆஜரான வழக்கறிஞர் சுஷில் குமார் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்ததாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கனிமொழியால் நாட்டுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டு விட்டதாக எழுந்த புகாரின் அடிப்படையில் சி.பி.ஐ அவரை கைது செய்துள்ளது. ஆனால் இந்த விவகாரத்தில் எந்த இழப்பும் ஏற்படவில்லை என்று நாடாளுமன்றத்திலேயே பிரதமரும் சிதம்பரமும் கூறியுள்ளனர் எனவும் கனிமொழியின் வழக்கறிஞர் தெரிவித்தார்.

மேலும் 2 ஜி அலைக்கற்றையை ஏலம் விடாததன் மூலம் அரசுக்கு பெருமளவு வருவாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாகக் குற்றம்சாட்டப்பட்டதன் அடிப்படையிலேயே சி.பி.ஐ யின் வழக்கு உள்ளதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என வழக்கறிஞர் சுஷில் குமார் வாதிட்டார். எப்போது நாட்டுக்கு இழப்பு என்ற வாதம் தனது பலத்தை இழக்கிறதோ அப்போதே கனிமொழி மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டும் பலம் இழக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

அதேபோல இந்த விவகாரத்தில் நாட்டுக்குரூ1.76 கோடிநஷ்டம்ஏற்பட்டதாகதணிக்கை அதிகாரி யூகத்தின் அடிப்படையில் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இதை நாடாளுமன்றத்தில் இரு அவைகளும் இன்னும் ஏற்கவில்லை. இதனால் அந்த அறிக்கையை ஒரு சாட்சியாக இந்த நீதிமன்றம் ஏற்க முடியாது.

2ஜி அலைக்கற்றை ஊழல் பயன் அடைந்ததாக கூறப்படும் ஸ்வான் டெலிகாம் யூனிடெக் வயர்லெஸ் ஆகியவற்றின் பங்குகளை வெளிநாட்டு நிறுவனங்களான எடிசலாட் மற்றும் யூனிநார் ஆகியவற்றிற்கு விற்பனை செய்ய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. உரிமங்களை அவர்கள் விற்பனை செய்யவில்லை. எனவே அதில் இழப்பு ஏற்படவில்லை என அவர் தமது வாதத்தில் மேலும் கூறினார்.

ஏற்கனவே ஊழல் குற்றச்சாட்டுகளாலும் அன்னா ஹசாரேயின் போராட்டங்களாலும் பெரும் விமர்சனங்களை எதிர்கொண்டு வரும் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி தற்போது கனிமொழி முன்வைத்துள்ள குற்றச்சாட்டினால் மேலும் ஆட்டம் காணும் என்றே நம்பப்படுகிறது. (ஸ்ரீ-2)

## அன்னா ஹசாரேக்கு ஆதரவாக தமிழ் திரையுலகினர் உண்ணாவிரதம்



காந்தியவாதி அன்னா ஹசாரே ஊழலுக்கு எதிராக வலுவான லோக்பால் மசோதாவை நிறைவேற்ற வலியுறுத்தி உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். அன்னா ஹசாரேக்கு நாடு முழுவதும் ஆதரவு பெருகி வருகிறது. இளைஞர்கள், மாணவ மாணவிகள் என அனைத்து தரப்பினரும் ஆங்காங்கே உண்ணாவிர஌ும் இருக்கின்றனர்.

தமிழ் திரையுலகினரும் அன்னா ஹசாரேக்கு ஆதரவாக உண்ணாவிரதத்தில் குதித்தனர். சென்னை அண்ணா மேம்பாலம் அருகில் உள்ள தென்னிந்திய திரைப்பட வர்த்தகசபை வளாகத்தில் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். அங்கு சாமியானா பந்தல் போடப்பட்டு இருந்தது. அதில் காந்தி அன்னா ஹசாரே உருவப்பட பேனர் கட்டி இருந்தனர்.

நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு உண்ணாவிரதம் தொடங்கியது. நடிகர், நடிகைகள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், தொழில் நுட்பகலைஞர்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.

நடிகர்கள் சூர்யா, பார்த்தீபன், மன்சூர் அலிகான், தியாகு, மனோபாலா, நடிகைகள் ரோகிணி, எமி, இயக்குனர்கள், டி.பி.கஜேந்திரன், தங்கர் பச்சான், சேரன், ஏ.ஆர். முருகதாஸ், விஜய பத்மா, ஆர்.கே.செல்வமணி, ராம்தாஸ், யூ.சசி, ஷக்தி சிதம்பரம், தயாரிப்பாளர்கள் எச்.முரளி, ஆனந்தாபிக்சர்ஸ் சுரேஷ், சித்திரா லட்சுணன், எஸ்.பி.தங்கராஜ், ஐங்கரன், கோ.விஜயகுமார், கே.ராஜன், கே.எஸ் .சீனிவாசன், எஸ்.எஸ்.துராஜ், சிவராம்தாஸ், ஏ.எம்.ரத்னம்நாகராஜராஜா, எல்.எம்.எம். முரளிதரன், பிரமிடு நடராஜன், ஜெயப்பிரகாஷ், தமிழ்நாடு திரையரங்கு உரி மையாளர்கள் சங்க செயலாளர் திருச்சி ஸ்ரீதர், பெப்சி பொருளாளர் சண்முகம் உள்ளிட்ட பலர் உண்ணாவிரதத்தில் பங்கேற்றனர்.

நடிகர் ஜனகராஜ் காந்தி வேடத்தில் வந்து உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டார். மாலை 5 மணிவரை இந்த உண்ணாவிரதம் நடைபெற்றது. (ஸ்ரீ-2)

# மர்ம மனிதன் விவகாரம் கட்டுக்கதையல்ல; பல உண்மைச் சம்பவங்கள் அரங்கேற்றம்

## கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு



மர்ம மனிதன் தொடர்பில் வதந்திகள் பரவுகின்ற போதிலும் இது முழுக்க முழுக்க வதந்தி, கட்டுக்கதை என்று ஒதுக்க முடியாதபடி சில உண்மைச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

இம்மர்ம மனிதன் தொடர்பான மக்களின் அச்ச உணர்வு தேவையற்றது என முற்றிலும் ஒதுக்கிவிட முடியாது என்று தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மர்ம மனிதன் தொடர்பான உண்மைத் தன்மையினை பாதுகாப்புத் தரப்பினர் உறுதிப்படுத்த வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாதுகாப்புத் தரப்பினருக்கும் நாட்டின் இளைஞர்களுக்கும் என அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிழக்கு மாகாணத்தில் கடந்த ஓரிரு வாரங்களாக தொடர்ச்சியாக இடம்பெற்ற வருகின்ற மர்ம மனிதன் தொடர்பான மிக குழப்பகரமான நிலையினை ஓர் பொறுப்புமிக்க அரசியல் கட்சி என்ற வகையில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியானது ஆழ்ந்து உற்று நோக்கி வருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற இம் மர்ம மனிதன் தொடர்பான ஓர் அச்சமான சூழ்நிலை மக்களை குழப்பத்திலும் பீதியிலும் ஆழ்த்தியுள்ளது. இதனால் மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கை மிகவும் பாதித்துள்ளதுடன் மக்களுக்கும் பாதுகாப்புத் தரப்பினருக்குமான உறவினையும் சீர்குலைத்துள்ளது.

இதனால் பல பகுதிகளில் இளைஞர்கள் வன்முறைகளை நாடவும் பாதுகாப்புத் தரப்பினருக்கு எதிராக செயற்படவும் களம் அமைக்கப்பட்டுள்ளது.

இம் மர்ம மனிதன் தொடர்பில் வதந்திகள் பரவுகின்ற போதிலும் இது முழுக்க முழுக்க வதந்தி, கட்டுக்கதை என்று ஒதுக்க முடியாதபடி சில உண்மைச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதையும் கருத்திற் கொள்ளவேண்டியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் இம் மர்ம மனிதன் எனப்படுபவனால் சில பெண்கள் தாக்கப்பட்டுள்ளனர். எனவே இம் மர்ம மனிதன் தொடர்பான மக்களின் அச்ச உணர்வு தேவையற்றது என முற்றிலும் ஒதுக்கிவிட முடியாது.

ஆனால் சிலரின் திட்டமிட்ட வகையில் மக்களை குழப்பத்திலும் அச்ச உணர்விலும் ஆழ்த்துகின்ற வகையில் வதந்திகள் பரப்பப்படுவதையும் நிராகரிக்க முடியாது.

எனவே இன்று கிழக்கு மாகாணத்தின் இயல்பு வாழ்க்கையை முற்றாக சீர்குலைக்கும் வகையில் விஸ்வரூபம் எடுத்திருக்கின்ற இம்மர்ம மனிதன் பிரச்சினை தொடர்பில் விசாரணை நடத்தி அதன் உண்மைத் தன்மையை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டியது பாதுகாப்புத் தரப்பினரின் முக்கியமான கடமையாகும்.

இக்காலப் பகுதியானது முஸ்லிம் மக்களின் நோன்பு காலமாகவும் தமிழ் மற்றும் கிறிஸ்தவ மக்களின் திருவிழாக் காலமாகவும் மாணவர்களின் பரீட்சைக் காலமாகவும் இருப்பதானால் இப்பிரச்சினைக்கு உடனடி தீர்வு காண்பது இன்றியமையாததாகும்.

இதற்காக வேண்டி மக்கள் நம்பிக்கை கொள்ளும் வகையில் பாதுகாப்பு தரப்பினர் செயற்பாடு நம்பகத்தன்மை உடையதாகவும் வெளிப்படைத்தன்மை உடையதாகவும் அமைதல் வேண்டும்.

இதற்கென கிராமங்கள் தோறும் ஊர்ப் பிரமுகர்கள், மதப் பெரியவர்கள், பெண்கள் பிரதிநிதிகள், கிராம சேவையாளர்கள், சமூக ஆர்வலர்கள் பாதுகாப்பு தரப்பினரை உள்ளடக்கி விழிப்புக்குழு, நடவடிக்கைக்குழு ஏற்படுத்தல் வேண்டும்.

இக்குழுக்களின் ஊடாக இவர்களின் முன்னிலையில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். அதே நேரத்தில் இளைஞர்கள் சட்டத்தை கையில் எடுக்காமல் சட்டத்தை மதித்து வன்முறையை நாடாமல் இப்பிரச்சினைக்கு தீர்வுகாண முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அரசியல் பேதங்களுக்கு அப்பால் மக்களின் முக்கிய பிரச்சினையாக இதனைக் கருதி இணைந்து செயற்பட அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும்.

இது தொடர்பில் கட்சித் தலைவரும் மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சரும் என்ற வகையில் நான் பாதுகாப்புத் தரப்பு உயர்மட்டத்துடனும் மக்கள் பிரதிநிதிகளுடனும் தொடர்ந்து கலந்துரையாடி உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றேன்.

அதேநேரம் எமது கட்சியின் முக்கியஸ்தர்களுக்கும் கட்சியின் பிரதிநிதிகளும் மக்களுடன் களத்தில் நின்று பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து வருகின்றனர்.

30 வருடங்களாக கடுமையான யுத்தத்தில் அனைத்தையும் இழந்து உயிர்களை மட்டுமே காப்பாற்றிக் கொண்ட இம் மக்களுக்கு மலர்ந்து வருகின்ற சமாதான சூழ்நிலையில் மீண்டுமொரு அச்சத்தையும் அவலத்தையும் ஏற்படுத்துவதையும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அனுமதிக்காது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2-4)

## வவு. குடியிருப்பில் மர்மமனிதன் நடமாடியதால் பெரும் பதற்றம்

(கொழும்பு)

வவுனியா நகரில் உள்ள குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் இரவு மர்ம மனிதர்களின் நடமாட்டத்தினால் பதற்றம் ஏற்பட்டிருந்தது. பொதுமக்களும் பின்னர் அவ்விடத்திற்கு வருகை தந்த பொலிஸாரும் தேடுதல் நடத்தியபோதிலும் மர்ம மனிதர்களைப் பிடிக்க முடியவில்லை. அவர்கள் ஓடித் தப்பிவிட்டார்கள் என தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

வவுனியா அரச செயலகத்திற்கு எதிரில் ஏ9 வீதிக்கு அப்பால் அமைந்துள்ள பொது வைத்தியசாலைப் பிரதேசமாகிய குடியிருப்பு பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கறுத்த உடையணிந்த 3 மர்ம மனிதர்கள் நடமாடியதைப் பொதுமக்கள் அவதானித்துள்ளனர்.

முதலில் குடியிருப்பு இலுப்பையடி பகுதியில் அமைந்துள்ள பௌத்த கலாசார மண்டபத்தில் மக்கள் தங்கியிருந்த பகுதிக்குச் சென்று யார் அங்கு இருப்பது என விசாரித்துள்ளார்கள். அதற்குத் தாங்கள் தென்பகுதியில் இருந்து வந்துள்ள பிரயாணிகள் என தெரிவித்ததையடுத்து இந்த மூவரும் வவுனியா பொது வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவுக்கு எதிரே அமைந்துள்ள குடியிருப்பில் தென்னிந்திய திருச்சபை ஆலயத்திற்கு சென்றுள்ளனர்.

வவுனியா இறம்பைக்குளத்தில் அமைந்துள்ள அந்த ஆலயத்தின் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த சிறுமிகள் நிகழ்ச்சி ஒன்றிற்காக ஆலயத்திற்கு வருகை வந்து மகிழ்வாக கூடியிருந்த போது அங்கு சென்ற இவர்களில் ஒருவன் ஜன்னல் இடைவெளியின் ஊடாக இந்தச் சிறுமிகளைப் பிடிக்க முயன்றதாகவும் அதனையடுத்து அச்சமடைந்த அந்தச் சிறுமிகள் எழுப்பிய கூக்குரலையடுத்து அயலில் இருந்தவர்கள் தமது வீடுகளில் மின் விளக்குகளை எரியவிட்டு வெளியில் வர முயன்றார்களாம். அப்போது மின் விளக்குகளை அணைக்குமாறு முரட்டுக் குரலில் ஒருவன் சத்தமிடவே சிலர் அச்சம் காரணமாக விளக்குகளை அணைத்துள்ளனர்.

இருப்பினும் கையில் கிடைத்த கம்பு, தடிகள் என்பவற்றுடன் மர்ம மனிதர்களைப் தேடி வெளியில் வந்துள்ளனர். அதேவேளை அந்தப் பகுதியில் வசிக்கும் அரச உத்தியோகத்தர் ஒருவர் இந்தச் சம்பவம் குறித்து அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

அரசாங்க அதிபர் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து சம்பவ இடத்திற்குப் பொலிஸார் விரைந்து விசாரணை நடத்தியதுடன் மர்ம மனிதர்களையும் ஊர் மக்களுடன் சேர்ந்து தேடியுள்ளனர். எனினும் எவரையும் காணமுடியவில்லை. இந்தச் சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியில் விடியும் வரை மக்கள் விழித்திருந்தார்கள். (ஸ்ரீ-2)

## நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரம் இன்றி அரசசாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கோப்பாய் பொலிஸாரால் நேற்றையதினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதவான்அ.பிறேம்சங்கர் மேற்குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 3 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா 3 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப்பத்திரம், இறைவரிப்பத்திரம், வருமானவரிப்பத்திரம், தலைக்கவசம் ஆகியவை இன்றி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் யாழ். பொலிஸாரால் நேற்றுமுன்தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதவான்அ.பிறேம்சங்கர் மேற்குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாத குற்றச்சாட்டிற்கு 3 ஆயிரம் ரூபாவும் இறைவரிப் பத்திரம் இல்லாத குற்றச்சாட்டிற்கு ஆயிரத்து 500 ரூபாவும் வருமான வரிப்பத்திரம் இல்லாத குற்றச்சாட்டிற்கு ஆயிரத்து 500 ரூபாவும் தலைக்கவசம் இல்லாத குற்றச்சாட்டிற்கு 500 ரூபா அபராதம் விதித்ததுடன் செலுத்தத்தவறின் தலா 7 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

(யாழ்ப்பாணம்)

வாகனத்தை அதிவேகமாக செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் இரு நபர்கள் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதவான் அ.பிறேம்சங்கர் குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இருவருக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா 2 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதவான்அ.பிறேம்சங்கர் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 3 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 4 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

(யாழ்ப்பாணம்)

பொது மக்களுக்கு இடையூறுவிளைவிக்கும் வகையில் மோட்டார் சைக்கிளை செலுத்திய குற்றச்சாட்டில் நபரொருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதவான் அ.பிறேம்சங்கர் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து குற்றவாளியாகக் கண்டு ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

(யாழ்ப்பாணம்)

மது அருந்திவிட்டு பொது மக்களுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் இரு நபர்கள் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதவான்அ.பிறேம்சங்கீர் குறித்த இரு நபர்களுக்கும் தலா 3 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 3 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)

யானை சேற்றில் அமிழும்போது தவளைகளும் கால்களால் எட்டி உதைக்கும்.

– விவேக சிந்தாமணி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## நாவாந்துறை மக்களுக்கு நடந்தது பெருங் கொடூரம்

மர்ம மனித விவகாரத்தால் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலையால், பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர் என்பது சொல்லி தெரிய வேண்டியதில்லை.

அதேநேரம் நாவாந்துறையில், மர்ம மனித விவகாரத்தைத் தொடர்ந்து படையினர் நடத்திய தாக்குதலால் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் காயப்பட்ட சம்பவம் தமிழ் மக்களின் அநாதைத் தன்மையை காட்டி நிற்கின்றது.

நாவாந்துறையில் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தவர்கள் தொடர்பில் நீதிபரிபாலனம் உரிய நிவாரணம் வழங்கினால் அன்றி இனவாத சிந்தனையின் கொடூரத்தில் இருந்து அவர்கள் விடுபடமுடியாது என்பது தெளிவு.

அதேநேரம், படையினர் நடத்திய தாக்குதல் நடவடிக்கையில் நாவாந்துறையின் இயல்பு நிலை முழுமையாகப் பாதிப்படைந்துள்ளதுடன் அந்த மக்கள் தொழில் முயற்சிகளை இழந்துள்ளமையால் அன்றைய சீவியத்திற்கும் பெரும் இடைஞ்சல்படும் பரிதாபநிலை தோன்றியுள்ளது.

மர்ம மனிதன் என்ற விவகாரம் மட்டக்களப்பில் நடந்தபோது அங்கு மக்கள் குழுமி தமது எதிர்ப்பை தெரிவித்திருந்தனர்.

அதுமட்டுமன்றி மர்ம மனிதர்கள் ஓடி ஒளித்துக் கொண்டதாக கூறப்பட்ட இராணுவ முகாம்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களையும் மட்டக்களப்பு மக்கள் முற்றுகையிட்டனர்.

அப்போதெல்லாம் படையினர், ஒரு சுமுகமான நிலைமையை கடைப்பிடித்தனரே அன்றி அந்த மக்களின் வீடுகளுக்குள் புகுந்து அவர்களை தாக்கவில்லை.

ஆனால் அதேமாதிரியான ஒரு நிலைமை நாவாந்துறையில் ஏற்பட்டபோது படையினர் வீடுவீடாக புகுந்து தாக்கியுள்ளனர் எனில் அதற்கான காரணம், அதன் பின்னணி பற்றி சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது.

எதுவாயினும், இதுவிடயத்தில் யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதிக்கு காத்திரமான பொறுப்பு உண்டு.

இதுபோன்ற சம்பவங்கள் இனிமேல் தொடராமலும் தாக்குதலுக்கு உட்பட்டவர்களுக்கு மேன்மேலும் தொந்தரவுகள் ஏற்படாதவாறான உத்தரவாதங்களும் வழங்கப்பட வேண்டும்.

இது தொடர்பில் சமய், சமூக, பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதியுடன் சந்திப்பை ஏற்படுத்தி, நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது அவசியம்.

அதேநேரம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் விழிப்புக்குழு அமைக்கும் பணியை முன்னெடுப்பதும் இப்பிரச்சினைக்கு உடனடித்தீர்வு காண்பதற்கான வழியாக இருக்கும்.

# நாவாந்துறை தாக்குதலை கண்டித்து மாநகரசபையில் பிரேரணை நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறையில் இடம்பெற்ற பொது மக்கள் மீதான தாக்குதலை கண்டித்து யாழ். மாநகர சபையில் வாய்மொழிமூல பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையில் ஒத்திவைக்கப்பட்ட இவ் வருடத்திற்கான ஏழாவது மாதாந்தப் பொதுக்கூட்டம் நேற்று பிற் பகல் 2 மணியளவில் யாழ்.மாநகரசபை மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது யாழ். மாநகரசபையில் ஆளும் கட்சி உறுப்பினர் ம.மங்களநேசன் இந்தப் பிரேரணையை முன்வைத்தார்.

அத்தோடு இந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக ஏற்கெனவே பல தகவல் வெளியாகி இருப்பதன் காரணமாக அது தொடர்பாக விவாதிக்க தேவையில்லை எனவும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

இருப்பினும் பொதுமக்கள் மீதான வன்முறைச் சம்பவம் தொடர்பாக தாம் பேசஅனுமதி வழங்கப்படவேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முதல்வரிடம்கோரிக்கை விடுத்தனர்.

ஆனால் முதல்வர் அந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்தார். இதனால் கூட்டம் ஆரம்பமாகி சில மணி நேரத்திற்குள்ளேயே பரபரப்பு ஏற்பட்டது.

அப்போது ஆளும் கட்சி உறுப்பினர் விஜயகாந் குறுக்கிட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தமது கருத்தைக் கூற வாய்ப்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

இவரின் கோரிக்கையை அடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமது கருத்துக்களை வழங்க முதல்வரால் அனுமதி வழங்கப்பட்டது.

இதனையடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமது கருத்துக்களை முன்வைத்தனர். இதனையடுத்து பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டது.

(ச-6)

## ஹோட்டல் கற்கைநெறிக்கு விண்ணப்பித்தோருக்கு

ஹோட்டல் முகாமைத்துவம் (Restaurant), ஹோட்டல் மேற்பார்வை உபசரணையாளர்கள் (Housekeeping) கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு இல.375, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, மாவட்ட காரியாலயத்தில் நடைபெறவுள்ளதால் விண்ணப்பித்த அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு இத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் உதவிக் கணக்காளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பள்ளிவாசல் மீதான தாக்குதல் குறித்து உடனடி விசாரணைக்கு ஜனாதிபதி பணிப்பு

மஹர சிறைச்சாலைக்கு வெளியே அமைந்துள்ள பள்ளிவாசல் மீது இனந்தெரியாத நபர்கள் சேதம் விளைவிக்க முயற்சித்த சம்பவம் குறித்து உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் உத்தரவிற்கமைய சிரேஷ்ட அமைச்சர் ஏ.ஏச்.எம்.பௌசி, மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா, பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் ஆகியோரடங்கிய உயர் மட்டக் குழு பள்ளிவாசலுக்குச் சென்று நிலைமையை நேரடியாக ஆராய்ந்தது.

பொருளாதரா அபிவிருத்தி அமைச்சர்பசில்ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் பள்ளிவாசலுக்கு விஜயம் செய்திருந்த வீடமைப்பு பிரதி அமைச்சர் லசந்த அழகியவண்ண அங்கு உரையாற்றுகையில்,

பள்ளிவாசலுக்கு சேதம் விளைவிக்க முயற்சித்த இச்சம்பவம் சிறு சம்பவமாக இருந்தாலும் அது கண்டிக்கத்தக்க ஒரு விடயம்.

எவருக்கும் எந்தவொரு சிறு கீறலும் ஏற்படக்கூடாது என்பதில் ஜனாதிபதி உறுதியாக உள்ளார்.

இதனாலேயே என்னைச் சென்று பார்வையிடுமாறு அமைச்சர் பசில் ராஜபக்ஷ பணித்தார்.

சகல மதத்தைச் சார்ந்த மக்களுக்கும் சகல உரிமைகளும் உண்டு.

குறிப்பாக புனித ரம்ழான் மாதத்தில் பள்ளிவாசலுக்கு சிறைச்சாலை உயர் அதிகாரிகள் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் ஆகியோர் ஆளும் கட்சி உறுப்பினர்களின் கூட்டத்தின் போது ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர். இதனையடுத்து இது தொடர்பில் உடனடி விசாரணை களை நடத்துமாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டார். (ஸ்ரீ-2)

# சத்திய தரிசனம்

## அடியானுக்கு அடியான்



ஒருமுறை எல்லாம் வல்ல சத்திய சாயி பாபாவுக்கு வலதுபக்க அடி வயிற்றில் கடுமையான வலி ஏற்பட்டது. டாக்டர் குழுவொன்று பாபாவை பரிசோதித்துவிட்டு குடல் வளரி அழற்சியென்றும் உடனடியாக அறுவைச்சிகிச்சை செய்ய வேண்டும் என்றும் கூறியது.

எனினும் அறுவைச்சிகிச்சைக்கு ஒப்புதல் கிடைக்கவில்லை. பாபாவைத் தரிசிக்க ஆயிரக்கணக்கான பக்தர்கள் வெளியில் காத்திருந்தனர். ஆனால் பாபாவின் நிலை மோசமடைந்து காணப்பட்டது. பாபா சித்திரவதை போன்ற பொறுக்க முடியாத வேதனையை அனுபவிப்பதாக டாக்டர்கள் கூறினர்.

இதேவேளை பாபாவுக்கருகில் நின்ற அமெரிக்க பெண்மணிகளான திருமதி ஜோனும் திருமதி சென்னும் பாபாவின் வேதனையை பொறுக்கமுடியாமல் பாபா இந்த நோயில் பாதியைத் தானும் எங்களுக்கு அளித்து விடுங்கள் என வேண்டினர்.

அதற்கு பாபா எனக்கு வலியேதும் தெரியவில்லை. அப்படி வலித்தாலும் நோயைப் பிரசாதமாக தரும் பழக்கம் என்னிடம் இல்லை எனக்கூறி அவர்களைச் சாந்தப்படுத்தினார்.

இந்நோய் கண்டு மூன்று மணித்தியாலத்தின் பின்பு பாபா நிதானமாக எழுந்து விறுவிறுப்புடன் குறிப்பிட்ட தூரம் நடந்து மேடையேறி தன்னை தரிசிக்க நின்ற அடியார்களுக்கு காட்சியளித்தார். அப்போது பாபா கோவிலிலுள்ள தன்னையே தஞ்சமென வணங்கும் அடியார் ஒருவருடைய நோயைத் தான் ஏற்றுக் கொண்டதாகவும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவ்வடியார்க்கு சிகிச்சையளிக்கப்பட்டு சுகம் கண்டதும் எனது நோயும் நீங்கி விட்டது என்றும் அருளினார்.

நோய் இந்த உடலை ஒரு நாளும் துன்புறுத்தாது. இந்த உடலை நெருங்கவும் முடியாது. இந்த உடலில் நோயொன்று காணப்படுமானால் அத யாருக்கோ வந்த நோய் என்று உணருங்கள். என் விருப்பத்துக்கு இணங்க வந்தது போலவே அது போய் வரும். அதற்கும் எனக்கும் தொடர்பில்லை என அருளினார் பாபா. இதனைக் கண்ணுற்று நின்ற திருமதி ஜோன் தான் பாபாவை முதன் முதலில் கேள்விப்பட்ட அந்த நாளை நினைத்துக் கொண்டார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்,

என் நண்பர் ஒருவர் பாபாவை வணங்கும் படி என்னைத் தூண்டினார். நான் இயேசுநாதரைசரணடைந்தவன். பாபாவும் இயேசுநாதரும் ஒருவராக இருந்தால்தான் அவரை என்னால் போற்ற முடியும். இருவரும் வேறானவர்கள் என்றால் பாபாவை வணங்க முடியாது. நீங்கள் எண்ணுவது போல் பாபா உயர்ந்தவராக இருந்தால் இதற்காக என் மீது கோபம் கொள்ளமாட்டார் என்று நம்புகின்றேன் என்று அந்த நண்பரிடம் கூறினேன்.

பாபாவை முதன்முதலில் சந்தித்த போது பாபா கூறியவை என்னை மெய்சிலிர்க்க வைத்தது. இயேசுபெருமானிடம் உனக்குள்ள பக்தியை நான் அறிவேன். நான் அதை அங்கீகரிக்கின்றேன் என்றார் பாபா. அவரும் இயேசுநாதரும் ஒருவரே என்பதில் சந்தேகமில்லை. என் நினைவுகள் நிகழ்காலத்துக்கு திரும்பியது என்றார்.

மர்ம மனிதர்களாக இராணுவத்தினரா?

# ஆதாரமிருந்தால் அவர்களது பெயர்களை வெளியிடுமாறு அமைச்சர் தினேஷ் சவால்



படையினரே கிறிஸ்பூதம் என்ற போர்வையில் நடமாடி மக்களை அச்சுறுத்துவதாக ஆதாரம் இருந்தால் சம்பந்தப்பட்ட படையினரின் பெயர்களை வெளியிட வேண்டும் என்று ஆளுந்தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன நேற்று முன்தினம் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற துறைமு க விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளையை நிறைவேற்றிக் கொள்வதற்கான பிரேரணை மீதான விவாதத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி.எஸ்.ஸ்ரீதரன் வெளியிட்ட தகவல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாணம், நாவாந்துறை, கிளிநொச்சி, பாரதிபுரம் போன்ற பகுதிகளில் கிறிஸ் பூதம் பதற்றத்தினால் மக்கள் கடந்த திங்கட்கிழமை இரவு பெரும் அவஸ்தைக்கு உள்ளாகியிருப்பதாகவும் கிறிஸ் பூதம் என்று உலவும் மர்ம மனிதர்களை மக்கள் விரட்டிச் செல்லும் போது அவர்கள் இராணுவ முகாம்களுக்குள்ளும் பொலிஸ் நிலையங்களுக்குள்ளும் புகுந்து தப்பித்து விடுவதாக ஸ்ரீதரன் எம்.பி. இதன்போது தெரிவித்தார்.

அத்துடன் கிறிஸ் பூதங்களாக வரும் மர்ம மனிதர்களைப் பாதுகாக்கும் பாதுகாப்புத் தரப்பினர் அவர்களைப் பிடிக்க முயற்சிக்கும் போது மக்கள் மீது தாக்குதல் நடத்துவதாகவும் அது மட்டுமல்லாது அன்று இரவு கிளிநொச்சி, பாரதிபுரத்தில் மர்ம மனிதன் ஆடையின்றி உலவித் திரிந்ததாகவும் ஸ்ரீதரன் மேலும் குறிப்பிட்டார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி குறுக்கிட்ட ஆளுந்தரப்பு பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன நபர் ஒருவர் நிர்வாணமாக நடமாடியதாகக் கூறியதோடு மட்டுமல்லாது அவர் இராணுவ முகாமுக்குள் புகுந்ததாகவும் கூறுவதென்றால் அதற்கு ஆதாரங்கள் இருக்கின்றனவா என்று கேள்வி எழுப்பியதுடன் இது பாரதூரமான கூற்று என்றும் சுட்டிக்காட்டினார்.

தமிழ் மக்கள் உட்பட அனைவரையும் இலங்கை பிரஜைகளாகவே அரசாங்கம் நடத்தி வரும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்தக் கூற்றானது நாட்டை கூறுபோடவும் மீண்டும் தீப்பிடித்து எரிய வைப்பதற்கான முயற்சி என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் இராணுவத்தினர் தான் இதில் ஈடுபடுகின்றனர் என்பதற்கான ஆதாரங்கள் அங்குள்ள மக்களிடம் இருப்பதாகவும் அதைத் தன்னால் உறுதிப்படுத்த முடியும் என்றும் ஸ்ரீதரன் எம்.பி.கூறினார்.

ஆயினும் இதற்கு பதிலளித்துப் உரையாற்றிய குணவர்த்தன,

உறுப்பினருக்குப் பொதுவான அறிக்கையை விடுக்க முடியும். எனினும் எம்.பி. என்பதற்காக வெறுமனே குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியாது. தன்னிடம் ஆதாரம் இருக்கின்றது என்று அவர் கூறுகிறார். அவரிடம் ஆதாரம் இருந்தால் சம்பந்தப்பட்ட நபரின் பெயரைக் கூறச் சொல்லுங்கள். பெயரைச் சொல்ல வேண்டும். இல்லையெனில் அவர் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை வாபஸ் பெற வேண்டும் என்று வலியுறுத்தினார். மர்ம மனிதர்கள் வரும் போது மக்களுக்கு அவர்களை அடையாளம் காண முடியாது என்றும் அவர்களின் பெயர்களைத் தெரிந்து கொள்ள முடியாது என்றும் ஸ்ரீதரன் எம்.பி. இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதேநேரம் ஆளுந்தரப்பு எம்.பி.ஏ.எச்.எம். அஷ்வரும் ஸ்ரீதரனின் பேச்சுக்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டார்.

அத்துடன் விவாதத்துக்குரிய விடயம் சம்பந்தமாகப் பேசினால் சர்ச்சைகள் வராது என்று கூறிய சபாநாயகர் சமல் ராஜபக்ஷ ஒருவர் பேசும் போது அதை செவிமடுத்தால் நல்லது என்றும் அறிவுறுத்தினார். (ஸ்ரீ-2-4)

## அம்பாறையில் வான்வழியாக விநியோகப் பொதிகள் வீச்சு

(கொழும்பு)

இருபது நாடுகளின் விமானப்படை அதிகாரிகள் பங்கேற்கும் பசுபிக் வான் மீட்பு ஒத்திகையின் ஒரு கட்டமாக நேற்று அம்பாறை மாவட்டத்தில் வான்வழியாகப் விநியோகப் பொதிகளை போடும் ஒத்திகைப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வு நேற்றுக் காலை 10 மணிக்கும் 4 மணிக்கும் இடையில் இடம்பெற்றன. சி-130 இராட்சத விமானங்களில் இருந்து அம்பாறை மாவட்டத்துக்கு மேலாக பொதிகளை போடும் பயிற் சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஒத்திகைப் பயிற்சியில் இலங்கை, அவுஸ்திரேலியா, மலேசிய விமானப்படைகளின் தலா ஒரு விமானமும், அமெரிக்க விமானப்படையின் மூன்று விமானங்களும் பங்கேற்றன.

அதேவேளை, இன்று இலங்கை மற்றும் அமெரிக்க விமானங்களில் இருந்து படையினரை தரையிறக்கும் ஒத்திகைப் பயிற்சி மேற்கொள்ளப்படவுள்ளது. (ஸ்ரீ-4-2)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயரழுத்த மின்விநியோக மார்க்கங்களிலுள்ள மின்தூண்களை இடமாற்ற வேண்டியிருப்பதால் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை தென்மராட்சிப் பிரதேசத்திலும் நாளை மறுதினம் சனிக்கிழமை இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன்மணல் பிரதேசம், யாழ். பட்டணப்பகுதி ஆகிய இடங்களிலும் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உயரழுத்த மின் விநியோக மார்க்கங்களில் கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு ஸ்ரான்லி வீதிப் பிரதேசத்திலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## பாராளுமன்றம் நேற்று முன்தினம் இரண்டு மணி நேரத்தில் ஒத்திவைப்பு

சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை தொடர்பாக உரையாற்றுவதற்கு உறுப்பினர்கள் இல்லாத காரணத்தினால் நேற்று முன்தினம் பாராளுமன்ற அமர்வு சுமார் 2 மணி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டது.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் பாராளுமன்றம் நேற்று முன்தினம் 1 மணிக்கு கூடியது. வழமையான கேள்வி நேரத்தின் பின்னர் பிரேரணை முன்னறிவித்தலின்படி சிரேஷ்ட அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம உற்பத்தி வரி மற்றும் துறைமுக விமான நிலைய வரி தொடர்பான கட்டளைகளை அங்கீகரிப்பதற்கான பிரேரணையை சமர்ப்பித்து பேசினார்.

இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க பேசினார்.

மூன்றாவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பி.எஸ்.ஸ்ரீதரன் பேச ஆரம்பித்தார்.

அவரது உரையையடுத்து ஆளும் தரப்பு எதிர்த்தரப்பு உறுப்பினர்களின் பெயரை சபாநாயகர் அழைத்தார்.

பிரேரணை தொடர்பாக பேசுவதற்காக பெயர் குறிப்பிடப்பட்டிருந்த உறுப்பினர்கள் எவரும் சபையில் இல்லாதவிடத்து பேசுவதற்காக பெயர் வழங்கப்பட்டால் அந்த உறுப்பினர் சபையில் இருக்க வேண்டும் என சபாநாயகர் கூறினார். எனினும் இந்த நிலையிலும் பெயர் குறிப்பிடப்பட்ட எவரும் சபைக்குள் வரவில்லை. சபையை ஒத்திவைக்குமாறு கூறிய சபாநாயகர் சபை ஒத்திவைப்பு பிரேரணையை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை சமர்ப்பிக்க வேண்டிய அருந்திக பெர்னாண்டோ எம்.பி.யும் சபையில் இருக்கவில்லை. இதனால் சபையை நேற்று முன்தினம் பகல் ஒரு மணிவரை ஒத்திவைப்பதாக ஆளும் தரப்பு பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். (ஸ்ரீ-2)

மர்ம மனிதர்கள் விவகாரம்

## பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியதாக கைதானோருக்கு பிணை

(கொழும்பு)

மர்ம மனிதர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரவு வேளையில் நடமாடிய பொலிஸார் மீது பெரிய கோமரசன் குளத்தில் கடந்த சனிக்கிழமை தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 11 பேரையும் தலா 50 ஆயிரம் ரூபாய் சரீரப் பிணையில் செல்ல நேற்று நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கைதான கத்தோலிக்க மதகுருவை கடந்த திங்கட்கிழமை பிணையில் செல்ல மாவட்ட நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது. எதிர்வரும் செப்டெம்பர் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவர்களை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்க வேண்டும் என இவர்களின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி எம்.சிற்றம்பலம் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவர்கள் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.


அனைவரையும் பிணையில் செல்ல மாவட்ட நீதிபதி எம்.பி.முகைதீன் அனுமதி வழங்கியதுடன் இவர்கள் மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் ஒக்டோபர் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என நீதிமன்ற பதிவாளர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)






நல்லூர் றோட்டறக் கழகமும் நிறைவாழ்வு மையமும் இணைந்து மருத்துவ முகாமொன்றை கிளிநொச்சி பெரிய பரந்தனில் அண்மையில் நடத்தியது. இதில் நோயாளர்களை மருத்துவர் பார்வையிடுவதையும் கலந்து கொண்ட மக்களையும் படங்களில் காணலாம்.

# மரணத்தின் அறிவிப்புக்காய் காத்திருக்கும் உயிர்கள்!



அரசியல் தலைவர்களும், மனி தவுரிமை ஆர்வலர்களும், பொது மக்களும் ஓரணியில் நின்று எமக்கு வழங்கப்பட்ட மரண தண்டனைக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும்.

அனைத்து அரசியல் தலைவர் களும் ஓரணியில் திரண்டு முதலமை ச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்து கோரிக்கை விடுத்தால், நிச்சயம் அவர் எங்களின் விடிவுக்கு வழி செய்வார்.

இவ்வாறு இந்தியாவின் முன் னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக் கப்பட்டுள்ள பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோர் ஜுனியர் விக டனுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளதாவது;

### 21 வருடங்கள் சிறையில் பேரறிவாளன்

**கேள்வி: எந்த நேரத்திலும் தூக்கு அறிவிப்பு வரலாம் என் கிற நிலையை எப்படி எதிர்கொள் கிறீர்கள்?**



பேரறிவாளன்: முதலில் எங் களுக்காகப் போராடும் அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி சொல் லக் கடமைப்பட்டு இருக்கிறோம். தூக்குத் தண்டனை அறிவிக்கப் பட்ட நாளில் இருந்தே மரணத்தின் நிழலில் தான் நிற்கிறோம்.

கருணை மனுக்கள் நிராகரிக் கப்பட்டதில் மரண நிழல் எங்களைப் பெரிதாக சூழ்ந்திருக்கிறது. மக்க ளின் ஒருமித்த கைகோப்பு எங்க ளுக்கு மிகுந்த நம்பிக்கையையும் வெளிச்சத்தையும் உருவாக்கி இருக்கிறது.

19 வயதில் உள்ளே வந்தவன். 21வருடங்கள் இந்தச் சிறையிலேயே பெருவலியோடு கழிகிறது. தூக்குத் தண்டனை அறிவிப்பை இந்த வலி யில் இருந்து விடுபடும் நாளாக எண்ணி என்னைத் தேற்றிக் கொள்ளும் நிலையில் தான் நான் இருக்கிறேன்.

**கேள்வி: தமிழக மக்களிடம் நீங்கள் சொல்ல நினைக்கும் கருத்து?**

பேரறிவாளன்: அரசியல் பாகு பாடு பார்க்காமல் அனைவரும் எங் களுக்காகப் போராடுவது எங்க ளின் கண்ணீரைத் துடைத்து இருக் கிறது. இன உணர்வு மட்டும் அல் லாது, மனிதநேயமும் ஒன்று சேர் ந்த போராட்டம் எங்களை சிலிர்க்க வைத்திருக்கிறது.

பொதுமக்களும் அனைத்து தலைவர்களும் ஒரே அணியில் நின்று தூக்குத் தண்டனைக்கு எதி ராகப் போராட வேண்டும் என்பது தான் எங்களின் விருப்பம்.

அனைத்து அரசியல் தலைவர் களும் ஒருமித்த உணர்வோடு திரண்டு தமிழக முதலமைச்சரை சந்தித்து கோரிக்கை வைத்தால், நிச்சயம் அவர் எங்களின் விடிவுக்கு வழி செய்வார். அவருடைய குரல் எங்களுக்காக காத்திருக்கும் கயிறை நிச்சயம் அறுத்தெறியும்.

**கேள்வி: தமிழக முதல்வரிடம் ஏதாவது சொல்ல விரும்புகின் றீர்களா?**

பேரறிவாளன்: மிகுந்த அறிவும் ஆய்ந்தறியும் பேராற்றலும் கொண் டவர் நீங்கள். இந்த வழக்கில் இருக் கும் குளறுபடிகளை நிச்சயம் அறிந் திருப்பீர்கள். அம்மா, மரணம் கோரப் பசியோடு துரத்தும் இந்த நேரத்தில் மட்டும் அல்ல 20.07.07 அன்றே உங்களுக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன்.

வழக்கில் சிக்குபவர்களுக்கு வசதி இல்லை என்றால், அவர் களின் தரப்பு நியாயம் அம்பலம் ஏறாமல் போய்விடும். அத்தகைய குறைபாடு கொண்ட கட்டமைப்பு தான் இன்றைக்கு நிலவுகிறது. என்ன தவறு செய்தோம் என்றே தெரியாமல் இத்தனை நாள் மரண த்தின் மடியில் படுத்துக் கிடப்பவ னாகக் கேட்கிறேன்.

தயவுசெய்து தூக்குத் தண்ட னைக்கு எதிராகக் குரல் கொடுங்கள் என் அந்தக் கடிதத்தில் உங்களிடம் கோரிக்கை வைத்திருந்தேன்.

பிறருக்கு முன்னுதாரணமான சட்டத்திருத்தங்களைக் கொண்டு வருகிற சக்தி உங்களுக்கு மட்டுமே இருக்கிறது. மனச்சாட்சியின் கண் ணீர்க் குரலாகச் சொல்கிறேன். எங்களுக்கு தெரிந்து எதுவும் நடக்க வில்லை.

சித்திரிக்கப்பட்ட குற்றச்சாட்டு களுக்காக இத்தனை வருடங்கள் வாடும் எங்களுக்காக உங்களின் ஒற்றைக் குரல் ஒலித்தால் போதும் அம்மா.

# அப்பாவின் நிலையறியாது நான் மரணித்து விடுவேனா? - சாந்தன்

**கேள்வி: கருணை மனு நிராக ரிக்கப்பட்ட உடன் மரணம் நெரு ங்கி விட்டதாக நினைக்கின்றீர் களா?**

பேரறிவாளன்: 99 ஆம் ஆண்டு மனித உரிமை ஆர்வலர் ஹென்றி டி ஃபேன் என்னை பார்க்க வந்தார். வெளியே வந்தால் என்ன செய்வீர் கள்? எனக் கேட்டார். தூக்குத் தண் டனைக்கு எதிராகப் போராடுவேன் எனச் சொன்னேன்.

காரணம், தூக்கு அறிவிக்கப் பட்ட ஒருவனின் ஒவ்வொரு நிமி டமும் எத்தகையக் கொடூரமானது என்பதை அனுபவபூர்வமாக அறிந் தவன் நான்.

வெளி உலகம் எப்படி இருக் கிறது என்பதைப் பார்க்க இப்போது ஆசையாக இருக்கிறது. சிறு குழந் தையின் தவிப்பாக மனது ஏங்கு கிறது. எங்களுக்காக போராடும் மக்களை நேரில் பார்த்து கை கூப் பத் தோன்றுகிறது.

ஆனால், ஏற்கெனவே பரப்பிய பழிகள் போதாது என சாத்தானின் படைகள் என்கிற புத்தகத்தை நான் அச்சடித்ததாக சிலர் இப்போது கதை கிளப்பி விடுகிறார்கள். அந்தப் புத் தகத்தை யார் உருவாக்கியது என் பது குற்றப் புலனாய்வுத்துறை அதி காரிகளுக்கு நன்றாகத் தெரியும்.

அப்படி இருந்தும் என்னை இட்டுக் கட்டுவது ஏன்?

ஜோடிக்கப்பட்ட இவ் வழக்கில் ஒருவேளை மரணம் எங்களை வென்றுவிட்டால், கயிற்றின் முன்னால் நின்று நான் சொல்ல நினைப்பது தூக்குக்குப் பலியாகும் கடைசி ஆள் நானாக இருக்கட்டும் என்பது தான்.

### ஒருமித்துப் போராடுங்கள் முருகன்

**கேள்வி: தமிழகத்தில் முன்னெ டுக்கப்படும் போராட்டங்கள் உங் களுக்கு நம்பிக்கை அளிக்கிறதா?**

முருகன்: மரணத்தை விட மர ணத்தின் நாளுக்காக காத்திருப்பது கொடுமையானது. அதை ஒவ்வொரு கணமும் அனுபவிக்கும் இந்த சூழ லில், மக்களின் ஆதரவுதான் எங் களை நம்பிக்கையோடு நிமிர வைக்கிறது.

தனித்தனியான போராட்டங் களை முன்னெடுக்காமல், எங்க ளுக்காக எல்லோரும் ஒருமித்து நிற்கவேண்டும் என்பதுதான் எங் களின் கோரிக்கை. இதர மாநிலங் களில் தண்ணீர் பிரச்சினைக்கு கூட அனைத்துக் கட்சிகளும் ஒன்றாகத் திரளுகின்றன.

எங்களின் கண்ணீர் பிரச்சினை க்கு அதேபோல் அனைத்துக் கட்சி களும் திரண்டு முதல்வரிடம் கோரி க்கை வைக்க வேண்டும். மூன்று உயிர்களுக்காக மொத்த தமிழக மும் கைகோர்த்து நின்றதை காலக் கல்வெட்டு தமிழனின் உயர்ந்த உணர்வாகப் பதிவு செய்ய வேண் டும்.

**கேள்வி:தமிழக மக்களிடம் ஏதாவது சொல்ல விரும்புகின் றீர்களா?**

முருகன்: எங்கள் மீதான குற் றச்சாட்டுக்களில் துளியும் உண்மை இல்லை. மரணத்துக்கு பயந்து இந்த வார்த்தைகளைச் சொல்ல வில்லை.

எங்களின் கவனத்துக்கு தெரி யாமல் நடந்த சம்பவத்துக்கு இத் தனை வருட சிறைவாசமே பெரிய கொடுமை. ஒப்புதல் வாக்குமூலத் தில் நாங்களே பல விஷயங்களை ஒப்புக்கொண்டதாக விசாரணை அதிகாரிகள் சொல்கின்றார்கள்.

ஆனால், ஒப்புதல் வாக்கு மூலத்தை அவர்களே தயாரித்து எங்களை அதில் கையெழுத்து போடச் சொன்னார்கள். அதற்காக அவர்கள் செய்த சித்திரவதைகளை வார்த்தைகளால் சொல்ல முடி யாது.

மரணக் கொட்டடியின் நெருக் கடிகள் எங்களுக்கு பழகிப்போனா லும், என்றைக்காவது ஒருநாள் வெளியே வருவோம் என்கிற நம் பிக்கை இருக்கிறது. உறவுகளின் உணர்வுகளால் அந்த நம்பிக்கைப் பலப்படுகிறது. ஒரே வார்த்தையில் எங்களின் உணர்வைச் சொல்வ தானால்; 'நன்றி'

### விசாரணையில் குளறுபடி சாந்தன்

**கேள்வி:ராஜீவ் கொலை விசா ரணையில் நிறைய குளறுபடி கள் நடந்ததாகச் சொல்கிறார் களே?**


சாந்தன்: கொஞ்சமும் சம்பந் தம் இல்லாத நாங்கள் குற்றவாளி களாக நிற்கின்றோம். இந்த வேத னையைக் கொஞ்சம் விளக்கமா கச் சொன்னால்தான் புரியும்.

கொழும்பு வழியாக வெளிநாட் டுக்கு பயணம் மேற்கொள்வது பாதுகாப்பானது அல்ல என்பதா லேயே நான் இந்தியாவுக்கு வந் தேன். இலங்கை அரசு தந்த உண் மையான கடவுச்சீட்டுகளுடன் வந்தேன்.

அதை குற்றப்புலனாய்வுத் துறை கைப்பற்றி உள்ளது. ராஜீவ் போன்ற பெரிய தலைவரைக் கொல்ல வருபவன் தன்னைப் பற் றிய தகவலைச் சொல்லும் உண் மையான கடவுச்சீட்டுடன் வரு வானா?

நான் சுமக்கும் மரண தண் டனைக்குப் பெயர் குழப்பமும்ஒரு காரணம். இந்த வழக்கில் கைதாகி விடுதலையான இரும்பொறை என்பவரை நான் ராஜீவ் இறப்ப தற்கு முன்னர் சந்தித்ததாகவும், 15 ஆயிரம் பணம் கொடுத்ததாகவும், முக்கியமான ஒரு நபரைக் கொல் லப் போகிறோம் என்று சொன்ன தாகவும் மரண தண்டனையை உறுதி செய்தபோது மாண்புமிகு நீதிபதி கே. டி தோமஸ் அவர்கள் கூறுகிறார்.

ஆனல் மாண்புமிகு நீதிபதி வாத்வா அவர்கள் அது இறந்து போன எதிரி திருச்சி சாந்தன் என்கிறார். இன்னொருவர் சொன்னதை நான் சொன்னதாக சொல்லி என்னைத் தூக்கில் நிறுத்தப் போகிறார்கள்.



நானும் சிவராசனும் நளினியை மிரட்டி இந்த சதிக்கு உடன்பட வைத்தோம் என்று நீதிபதி தோமஸ் சொல்கிறார். ஆனால், நீதிபதி வாத் வா, ராஜீவ் இறந்த அடுத்த நாள் தான் நளினியை சாந்தன் அறி வார் என்கிறார்.

நான் விடுதலைப்புலிகள் இயக் கத்தின் உளவுப்பிரிவில் முக்கிய மான ஆள் என்பதற்கு ஆதாரம் இருப்பதாக நீதிபதி தோமஸ் தீர்ப் பில் சொல்கிறார். இவை எதற்கும் ஆதாரம் இல்லை.

விடுதலையான இரும்பொறை யுடன் நான் சம்பந்தப்பட்டிருந்தேன் என்றோ, நளினியை மிரட்டினேன் என்றோ குற்றப் புலனாய்வுத்துறை கூடச் சொல்லவில்லை.

ஒருவர் மீது சுமத்தப்படும் குற்றச் சாட்டுக்களை அவரிடம் கூறி அவ ரது பதிலை விசாரணை நீதிமன்றம் பதிவு செய்ய வேண்டும். ஆனால் என் விடயத்தில் இது செய்யப்பட வில்லை.

சிவராசனின் பணத்தை முத லில் காந்தன் என்பவர் கையாண் டார். அவரிடம் இருந்து நான் அந் தப் பொறுப்பினை எடுத்துக் கொண் டதாக நீதிபதி வாத்வா அவர்கள் தீர்ப்பில் கூறுகிறார்.

சிவராசனின் பணத்தை நான் பாதுகாத்து கொடுத்ததாகவோ கை யாண்டதாகவோ விசாரணை நீதி மன்றம் என்னிடம் கேட்டுப் பதிவு செய்யவில்லை.

இப்படியெல்லாம் குளறுபடிகள் நடந்தன. குளறுபடிகளே எங்களுக் கான முடிவுப் படிகளாக மாறிவிட்டன.

**கேள்வி: கருணை மனு நிராகரிக்கப்பட்டது தெரிந்த உடன் என்ன நினைத்தீர்கள்?**

என் தந்தை ஆறுமுகம் தில்லை யம்பலம் அவர்களின் நினைவு வந்தது. அவருக்கு இப்போது 70 வயது. இறுதிக்கட்டப் போருக்குப் பிறகு அவரிடம் இருந்து எந்தத் தகவலும் இல்லை. அதற்கு முன்னர் அங்கு விவசாயம் செய்து கொண்டு இருந் தார். அவர் எப்படி இருக்கிறார் என் கிற கவலை என்னைப் பெரிதாக வருத்துகிறது.

பெற்ற தகப்பன் இருக்கிறாரா இல்லையா என்பதை நினைத்து அழுவதா? நான் இருப்பேனா மாட்டேனா என்பதை நினைத்து அழுவதா? இந்த அப்பனும் மக னும் விதியெனும் கையில் சிக்கிய விளையாட்டு பொம்மைகளாய் அல்லாடுகிறோம்.

இவ்வாறு பேரறிவாளன், முருகன் மற்றும் சாந்தன் ஆகியோரால் இச் செவ்வியில் தெரிவிக்கப்பட்டுள் ளது

படிப்பகம்
சபை, யாழ்ப்பாணம்,



G.T.V.
மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை
G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.
MAHARAJA FOOD PRODUCT
மேலதிக விபரங்களுக்கு:-
கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha,
Wellawathte.
T.P:-0112360926,0112259849
கொழும்புக்கான கட்டணம்
ரூபா 200/= மட்டுமே
யாழ்ப்பாணம்
aramex
delivery unlimited
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825

உல்லாசம்
உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
TILKO hotels
No.70/6, K.K.S
Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com



## கொண்டாட்...

மக்களிடையே பதற்றம் நிலவியது.

எனினும் அவ்வூர்மக்கள் ஒன்று கூடி பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாக கூறப்பட்டது. (எ)

## அமெரிக்க...

சுகுமார் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக கேட்டறிந்ததோடு இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் ஆராய்ந்து சென்றுள்ளனர்.

முன்னதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரை சந்தித்த இந்தக்குழு பின்னர் வடமாகாண ஆளுநரையும் சந்தித்தது. (ச-6)

# கடாபியின் தலைக்கு 16 கோடி ரூபாய் விலை

(திரிபோலி)

லிபிய தலைவர் கேணல் கடாபியினை உயிருடனோ அல்லது பிணமாகவோ கொண்டு வருபவர்களுக்கு ரூபாய் 16 கோடி சன்மானம் வழங்கப்படுமென எதிர்ப்புக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

கேணல் கடாபிக்கு எதிராக கிளர்ந்தெழுந்துள்ள எதிர்ப்பாளர்கள் தற்சமயம் திரிபோலியிலுள்ள கடாபியின் மாளிகை வளாகத்துக்குள் பிரவேசித்துள்ளனர். தொடர்ந்தும் இரு தரப்பினருக் குமிடையில் பாரிய தாக்குதல்கள் இடம் பெற்றவண்ணமிருக்கின்றன. கேணல் கடாபியின் மாளிகையின் சிலபகுதிகளுக்கு பிரவேசித்துள்ள எதிர்ப்பாளர்கள் கடாபியின் நினைவுச் சின்னங்கள் பலவற்றை அழித்துள்ளனர்.

இந்நிலையிலேயே கடாபியினை உயிரோடோ அல்லது பிணமாகவோ கொண்டு வருபவர்களுக்கு 2 மில்லியன் லிபிய டினார்கள்(சுமார் 16 கோடி ரூபாய்) பரிசாக வழங்கப்படுமெனஎதிர்ப்பாளர்கள்அறிவித்துள்ளதோடு கடாபியை கொன்றவர்களுக்கு தண்டனைகளின்றி மன்னிப்பும் வழங்கப்படுமென அறிவித்துள்ளனர்.

இதுவரை வான்வழியாக மட்டுமே தாக்குதலை மேற்கொண்டுவந்த நேட்டோ படையினர் தற்சமயம் தரை மார்க்கமாகவும் முன்னேறி வருவதாக வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நேட்டோ படையினருக்கு எதிராக லிபிய மக்கள் கிளர்ந்தெழ வேண்டுமெனவும் தன் தந்தையின் பின்னால் மக்கள் அணிதிரளவேண்டுமெனவும்கேணல் கடாபியின் மகள் நாட்டுமக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். (ச-5)

# ஈழத்தமிழர் பிரச்சினையை...

தெரிவித்த பி.ஜே.பி. ஊழல் விடயத்தையே முதலில் விவாதிக்க வேண்டும் என்று.

இலங்கைத் தமிழர் விவகாரத்தை இன்று வியாழக்கிழமை விவாதிக்கலாம் என பி.ஜே.பி., எம்.பி. எஸ்.எஸ்.அஹ்லுவாலியா கூறினார்.

நாமும் இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்த விவாதத்தில் ஆர்வமாகவுள்ளோம் நான் இது தொடர்பாக அறிவித்தல் ஒன்றையும் விடுத்தேன். இவ் விவகாரம் காரணமாக இச் சபை (செவ்வாய்க்கிழமை) ஒத்தி வைக்கப்பட்டது என்றார் அவர்.

அப்போது தமிழக எம்.பிக்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்த விவாதம் ஏற்கனவே தாமதமாகியுள்ளது எனவும் எனவே அதை முதலில் விவாதிக்க வேண்டும் எனவும் அவர்கள் கூறினார்கள்.

அ.இ.அ.தி.மு.க, தி.மு.க மற்றும் இடது சாரி கட்சிகள் இலங்கை தமிழர் விவகாரத்தை முதலில் விவாதிக்க ஆதரவு தெரிவித்தனர்.

அப்போது இந்திய நாடாளுமன்ற விவகார துணை அமைச்சர் ராஜீவ் சுக்லா, அரசாங்கம் இரு விவாதங்களுக்கும் தயார் எனவும் எதிர்க்கட்சிகளுக்கு தேவையானதை முதலில் விவாதிக்கலாம் எனவும் கூறினார்.

இதையடுத்து 15 நிமிடங்களுக்கு சபை ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் கூடியவுடன் ஊழல் விவகாரத்தை முதலில் விவாதிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சபையின் பிரதிநிதித்தலைவர் அறிவித்தார். எதிர்க்கட்சித் தலைவருடனான கலந்துரையாடலையடுத்து இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந் நிலையில் தி.மு.க. எம்.பிக்கள் வெளிநடப்பு செய்ய, எதிர்க்கட்சித்தலைவர் அருன் ஜெட்லி ஊழல் தொடர்பான விவாதத்தை ஆரம்பித்தார். (எ-1)

# இந்தியாவின் ஒத்துழை...

அவர் மேலும் கூறுகையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் மிகவும் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட நாட்டின் சகல அரசியல்வாதிகளும் இந்தியாவுடன் தொடர்புகளைப் பேணி வருகின்றனர். தமிழர்களுக்கு மட்டுமன்றி சிங்களவர்களின் பூர்வீகமும் இந்தியா தான் என்பதனை எவரும் மறந்து விடக்கூடாது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இலங்கை அரசாங்கம் சில உறுதி மொழிகளை இந்தியா விற்கு வழங்கியுள்ளது. அவற்றை நிறைவேற்றுமாறு தற்போது வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இலங்கை பிளவடைய வேண்டும் என்பது இந்தியாவின் நோக்கமல்ல. தமிழ் மக்களுக்கு சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்றே வலியுறுத்திவருகிறது.

எனினும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனானயுத்தத்தின்போதுஉதவிகளைவழங்கியஏனையநாடுகளுடன் இந்தியாவிற்கு எதிராகவும் குற்றம் சுமத்தப்படுகிறது.

காத்திரமான தீர்வுத்திட்டமொன்று முன் வைக்கப்பட வேண்டும் என்பதே இந்தியாவின்கோரிக்கை. அரசாங்கத்துடன் எந்தவிதமான தப்பான அபிப்பிராயங்களும் ஏற்படவில்லை. யுத்த வலயங்கள் தொடர்ந்து இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன.

வடக்கில் இன்னமும் இயல்பு நிலை ஏற்படுத்தப்பட வில்லை. அபிவிருத்தித்திட்டங்களைவிடவும் நிலையான தீர்வுத்திட்டமொன்றையே மக்கள் வேண்டிநின்றனர்.

வடக்கு மக்களின் கலாசாரம் மற்றும் வாழ்க்கையின் முறைகளை தெற்குமக்கள் அறிந்திருக்கவில்லை. 7 மாதங்கள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட போதிலும் எவ்விதமுன்னேற்றமும்ஏற்படவில்லை.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் நோக்கம் பற்றி தெளிவான விளக்கம் அளிக்கப்பட்டால் மட்டுமே தெரிவுக்குழுவில் பங்கேற்பது குறித்து தீர்மானிக்க முடியும்.

அவசர நிலைமைகளின் போது அவசர காலச்சட்டம் அமுல் படுத்துவதில் தவறில்லை. அந்தச் சட்டத்தை தொடர்ந்தும் நீடிப்பது எந்த வகையிலும் பொருத்தமற்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவசரகாலச்சட்டம் அமுல் படுத்தப்படுவதினால் நாட்டில் பல்வேறு அடக்கு முறைகள் இடம்பெற்று வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார். (ச-5)

# பொங்கு தமிழ் போரை...

நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேபாணியில் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் இணைந்து இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்த முற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் இரண்டு உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாண்வர்களும் பங்கு பற்றியதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இருவருக்கும் மனிதாபிமான அடிப்படையில் பரீட்சைக்குத் தோற்ற நீதவான் அனுமதியளித்துள்ளார்.

இதேவேளை கிறீஸ் பேய் பதற்றத்தை ஏற்படுத்திவடக்குக்கிழக்கில்அமைதியின்மையை உருவாக்க முயற்சிப்போருக்கு உச்சபட்ச தண்டனை வழங்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார் என்றுள்ளது. (ச-5)

# கிண்ணியாவிலுள்ள இரா...

தேசங்களில் புதிதாக அமைக்கப் பட்டிருந்த கடற்படை தளங்கள் அகற்றப்பட விருந்த நிலையிலேயே கிண்ணியா கடற்படைத்தளம் பொதுமக்களால் தாக்கப்பட்டதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் தௌபீக் மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்திற்கு நேற்று நண்பகல் விஜயம் செய்த மகிந்த ராஜபக்ஷவை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் சந்தித்து கிண்ணிய பிரதேசத்தில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரை அகற்றுமாறு எழுத்து மூலம் கோரிக்கையை விடுத்திருந்தார்.

கிண்ணியா பிரதேசத்தில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளை ஆராயும் விசேட கூட்டம் கடந்த திங்கட்கிழமை கிண்ணியா பிர தேச செயலகத்தில் இடம்பெற்ற போது இராணு வத்தின் கிழக்கு மாகாணத்திற்கான முன்னாள் கட்டளைத்தளபதி பொனிபெஸ் பெரேரா உள்ளிட்ட பலர் பொதுமக்களினால் முற்றுகையிடப்பட்டனர்.

இதனையடுத்தே கிண்ணியா பிரதேசத்தில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். இதனையடுத்து கிண்ணியா பிரதேசத்திற்காக இராணுவத்தின் 224ஆவது படையணியும் புதிதாக உருவாக்கப்பட்டது.

இதேவேளை கிண்ணியா பிரதேசத்தில் இராணுவம் குவிக்கப்பட்டமைக்கு அங்குள்ள மக்களே பிரதான காரணம் எனவும் அவர்களின் செயற்பாடுகளினாலேயே அங்கு இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது எனவும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

நல்லூர் சிறப்பு விற்பனை
நிலையத்தில்
கற்கூமி வெளியீடு
விலை 10 /= மட்டுமே
(பின்வீதியில் அமைந்துள்ளது)

தவறி விட்டது
உரும்பிராய் தெற்கு உரும்பிராயைச் சேர்ந்த பொன்னையா சிதம்பரநாதன் என்பவரது தேசிய அடையாள அட்டை (440052711V), Driving Licence, Insurance, Tax என்பன 22.08.2011 காலை 5 மணியளவில் நல்லூர் ஆலய சூழலில் தவறவிடப்பட்டுவிட்டது.
கண்டெடுப்பவர்கள் 0779254067, 0776486006 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (5982)

நல்லூரான் வாயிலில்
வெளிநாட்டுக் கல்விவாய்ப்பு
Spot Admission
வெளிநாட்டுப் பிரதிநிதியுடனான சந்திப்பு
ஓகஸ்ட் 23-25 (முன்பதிவு அவசியம்)
அனைவருக்கும் கட்டுபடியான
UK, Australia, USA,
Canada & New Zealand
பட்டக் கல்வி



10க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள்
100க்கும் அதிகமான கற்கைநெறிகள்
மிகக் குறைந்த செலவு, IELTS அவசியமில்லை
விசா கெடுபிடி எதுவுமில்லை (ஒரு மாதத்தில் பயணம்)
குடியுரிமை வாய்ப்புக்கள்
முற்றிலும் சட்டபூர்வமான, உத்தரவாதமான வழிமுறைகள்
The University of Nottingham · MONASH University Sunway campus · the University of Greenwich · INTI Laureate International Universities · MAHSA University College · HELP University College · SUNWAY UNIVERSITY · SEGI University College · LINTON University College · TARCollege · SkillsMalaysia
சிகரம் விசேட காட்சியறை
நல்லூர் ஆலய முன்றல் (யாழ்கோ பால்சாலைக்கு அருகில்)
கல்வி வழிகாட்டல் பிரிவு – சிகரம் ஊடக இல்லம்
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60
MEDIA

இலவச முன் பதிவுகளுக்கு இன்றே உங்கள் <Name>, <Address>, <Course>
772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்
No Prior Qualifications
CIMA-UK Per Level Rs.14,400 · Engineering-USA · BIT University of Colombo Per year Rs.20,000 · Multimedia_USA Visual Communication
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
A/L 2011 மாணவர்களும் பதிவுசெய்யலாம்
Diploma Courses MsOffice, DTP, English, AutoCAD, Hardware, Accounting, Web Designing
MCS Supported By UNDP/JRRP 324, Palaly Road, Campus Junction, Jaffna.
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree · Kids Courses கணினி, சதுரங்கம், ஆங்கிலம், Games · Government Schol
Free Course fee: BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Hardware, ICDL

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.